


KNOCK, AND IT SHALL BE OPENED UNTO YOU.

ST. LUKE 11:9

# ஆன்மீக செய்தி தொகுப்பு

## 2010

*I give thank  s to Christ Jesus Our Lord, who has made me egual to the task
I thank him for sorjudging me worthy of trust and appointing me to  his sewice.
(Timothy 1:12)*


அருட் திரு ஆர் ஜோன் செல்வம்

JB 203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக செய்தி தொகுப்பு நூல்




என் பெற்றோருக்கு சமர்ப்பணம்



எனக்கு திருமுழுக்கு கொடுத்து திடப்படுத்தல் கற்பித்து வேத அறிவு இறையியல் அறிவு போதித்து செபத்தில் உறுதியாய் நிற்க இறைவிசுவாசத்தில் இறைப்பணி புரிய வழிநடத்திய அமரர் அருட் திரு. டி. ஆர். அம்பலவாணருக்கு

அர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளந்திறந்து...



தேவனுடைய நாமத்தை பாட்டினால் துதித்து அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன்

சங்கீதம் 69:30

இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இவ்வான்மீக செய்தித் தொகுப்பு நூலுக்கூடாக நான் உங்களை சந்திப்பதிலே மகிழ்ச்சியடைகின்றேன் இறையியல் கல்லூரியில் குருத்துவத்திற்காக கற்றகாலம் தொட்டு 15 வருடப் பணியில் எழுதிய ஆன்மீக செய்திக் கடிதங்களை இன்று நூல் உருவில் வடிவமைக்க இறைவன் கிருபை செய்தார். அவருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. இவ்வருடம் எனது வாழ்வில் ஒரு முழுமையான ஆண்டு நாற்பது வயது குருத்துவ அபிசேகம் பெற்றது பத்து வருடம், இல்லற வாழ்வில் பிரவேசித்து 10 வருடம், குருத்துவ பணியில் 15 வருடம் நெடுந்தீவில் பணி செய்து 7 வருடங்கள் திருமறையில் இவ்வருடங்கள் முழுமையை சுட்டிக் காட்டி நிற்கின்றது. இறைவன் செய்த பெரிய காரியங்களையும் அவர் வழி நடத்திய காலத்தையும் நினைத்து நன்றி கூற வேண்டும். என்று எண்ணிய போது இவ் ஆன்மீகக் கடிதங்கள் இறை செய்திகள் குறிப்புக்களை தொகுத்து புத்தகமாக ஆக்கியுள்ளேன்.

இம் மலருக்கு ஆசியும் வாழ்ததுரைகளும் தந்தோரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். குருத்துவ பணியில் எம்மை வழி நடத்திய ஆயர்கள், சக குருமார்கள், திருச்சபை அன்பர்கள், நண்பர்கள் யாவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள் என் பணியில் தோழமையுடன் இருந்து வரும் என் மனைவி விமலாதே ரஜனி, மகள் ஏஞ்சலீன், ஆகியோருக்காகவும் இறைவனைத் துதிக்கின்றேன். விசேடமாக நெடுந்தீவு மக்களுக்கும் பகற் பராமரிப்பு நிலைய பெற்றோருக்கும், ஆசிரியர் பணியாளருக்கும் நன்றி கூறுகின்றோம். இந்நூலை அழகுற அச்சேற்றி தந்த ஜெயா அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள்.

**உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் நான் கர்த்தரை நோக்கி நீ என் அடைக்கலம் என் கோட்டை என் தேவன் நான்** நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.அவர் **உன்னை வேடனுடைய கண்ணிற்கும்** பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் **தப்புவிப்பார்.**

சங்கீதம் 9:-1-3

கிறிஸ்துவின் பணியில்
அருட் திரு. ஆர். ஜோன் செல்வம்
2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

"வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்" (லூக் 1:49)

இறைவனால் முன்குறிக்கப்பட்டு, அவரது அருளினால் அழைக்கப்பட்டு, தேவ வல்லமையால் திருநிலைப்பத்தப்பட்டு இறையன்பின் சாட்சியாக வாழ அழைக்கப்பட்ட இறை ஊழியன் யோண் செல்வம் அடிகளாருக்காக இறைவனுக்கு நன்றி நவில்கின்றேன்.

கடந்த கடினமான காலப்பகுதியில் இறைவல்லமை நிறைவாகவே இவருடன் இருந்திருக்கின்றது. உடைந்து, நொந்து, உருக்குலைந்து இருந்த எம் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தியாளனாக அருட்தந்தை செயல்பட்டிருக்கிறார். இதுவே தகுந்த காலம் மாறுங்கள் என்று இக்காலச் செய்தியுடன் வடக்கின் எல்லாப் பகுதிகளிலும் பணியாற்றியிருக்கின்றார்.

இவரது முயற்சிக்கெல்லாம் இறையருளினால் பயனுற்றவையாக இருக்க அருள் இருந்து, ஆசித்து நிற்கின்றேன்.

நன்றி

பங்குத்தந்தை

நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

## ஆசிச்செய்தி

நெடுந்தீவு மத்தியில் தென் இந்தியத்திருச்சபை நடுநாயகமாக ஆன்மீகத்தையும் மாணவர் சிறார்களின் நலன்கருதி நாட்டில் நற் பிரஜைகள் ஆக்கவதற்கு முன்னோடியாகவும் பராமரிப்பு நிலையத்தையும் தன்னகத்தே கொண்டு தனது மகத்தான அளப்பரிய சேவையை நடாத்திவருகின்றது. இதன் சேவை தொடர வளர திருச்சபை வணக்கத்திற்குரிய மதகுருமார்களும் தமது இறை பணியோடு பொதுப் பணிகளும் பணியாற்றி வருகிறார்கள் இந்த வரிசையில் மதிப்பிற்குரியவரும் என்றென்றும் மக்கள் மனதில் இடம்பிடித்துக் கொண்டார் யோன் செல்வம் போதகர் ஐயா அவர்கள் செல்வம் என்கின்ற திருநாமத்திற்கு பொருத்தமாகவும் எவரையும் தனது புன்னகையுடன் அன்பாக வரவேற்று பண்பாக உபசரித்து தனது பணியை அவர் தம்பாரியார் துணைவியின் உதவியுடன் செய்து வந்தார்.

நான் பல தடவை மேடைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் தனது அறிவுசால் கருத்தை நல்ல முறையில் ஒழுங்காக நல்ல கருத்தை உள்ளடக்கி வெளிப்படுத்துவார். ஏழு ஆண்டு காலம் பணி செய்தமைக்காகவும் சமய நெறியிலும் புதிய ஆலயம் கட்டுவதற்கு தனது முயற்சியை மேற்கொண்டவரும் சபையினரையும் ஆசிரியர்கள் பணியாளர்களையும் நல்ல முறையில் வழிநடத்திய யோண் செல்வம் ஐயா அம்மா பிள்ளை இவர்கள் சேவை எங்கு சென்றாலும் சிறப்பாக இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது குடும்பத்தின் சார்பாகவும் இந்துமத மக்கள் சார்பாகவும் ஆசி கூறி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி

இங்கனம்

கு. புவனேந்திரசர்மா

இந்துமதகுரு-நெடுந்தீவு – 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி தொடர இறைஞ்சுகிறோம்

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பதினைந்து ஆண்டுகளாக குருத்துவப் பணியில் வருடம் தோறும் எழுதி வெளியிட்ட தனது ஆன்மீகச் செய்திகளை நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குரு யோண் செல்வம் அவர்கள் அவற்றையெல்லாம் இன்று ஒரு நூலாக வெளியிட முன்வந்திருப்பது அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அப்புனிதமான பணியில் வாழ்த்துரை என்ற வட்டத்திற்குள் இருந்து என்னையும் பதிவு செய்து கொள்வதில் ஆன்மதிருப்தி அடைகிறேன். இந்நூலைப் படைத்திருக்கும் திருச்சபைக் குரு யோண் செல்வம் அவர்கள் சமகாலத்தில் பலதரப்பட்ட மக்களால் மத வேறுபாடுகள் கடந்த நிலையில் உயர்வாக மதிக்கப்படும் கிறிஸ்தவ மத போதகர்களில் ஒருவராகக் காணப்படுகிறார். இருபைத்தைந்து வயதிற்குள் கல்லூரிப் படிப்பையும், மருதனாமடம் இறையியல் கல்லூரியில் தன் குருத்துவப் படிப்பையும் முடித்துக் கொண்ட இந்நூலாசிரியர் இருபது வயதிலிருந்து கிளிநொச்சி, முரசுமோட்டை, விஸ்வமடு, கோணாவில், பாரதிபுரம், அக்கராயன் முதலான ஊர்களில் இடர்மிகுந்த கால கட்டத்திலும் சிறுவர் இல்லக் காப்பாளர், நற்செய்தி தூதுவர், ஆலய இறைபணி எனப் பல பணிகளை ஆற்றி துன்பப்பட்ட எம்மக்களுக்கு கலங்கரை விளக்காக இருந்துள்ளார். அக்காலகட்டத்தில் அவர் ளியிட்ட ஆன்மீகச் செய்திகளே துன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் மருந்தாக இருந்துள்ளதென்பதை இந்நூலில் வரும் ஆன்மீக செய்திகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம். அவர் கிறிஸ்தவ மதத்திற்கும், அம்மக்களுக்கும், ஏனையவர்களுக்கும் ஆற்றிய புனிதமான பணிகள்தான் அவர் மிக இளமையிலேயே உதவிக்குரு அபிசேகராக (1997), குருத்துவப் பட்டத்திற்கு (2000) உரியவராக ஆசீர்வதிக்கப்படக் காரணமானார்.

2003 ஆண்டிலிருந்து இந்நூலாசிரியர் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குருவாகப் பணியாற்றி வருவது அத்தீவு மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். அவர் உண்மையான கிறிஸ்தவனாவே இருந்து அம்மக்களுக்குப் பணியாற்றிய அதேளை, ஏனைய மக்களிடம் இன, மத,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வேறுபாடு பார்க்காது, வயது மூப்பு நோக்காது கருணை உள்ளத்தோடு அங்கு வாழும் அனைத்து மக்களையும் அரவணைத்துப் பணிசெய்து வருவதன் மூலம் அனைவரின் அன்பையும், மதிப்பையும் பெற்றுள்ளார். முன்னாள் தென்னிந்திப் பேராயர் அம்பலவாணர் அவர்களால் தொடக்கப்பட்ட பகற்பாராமரிப்பு நிலையத்தையும், முன்பள்ளிப் பாடசாலையையும் சிறப்புற நடாத்தி நெடுந்தீவுச் சிறார்களுக்கு மட்டுமல்ல குடாநாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளப் பாடசாலைச் சிறார்களுக்கும் புதுவழி காட்டிய ஒருவர். அவர் தனது சேவைக் காலத்தில் ஆதரவற்ற சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக திருச்சபை வளாகத்தில் உருவாக்கியுள்ள புதிய கல்லூரிக் கட்டிடங்களும், கணணிக் கூடமும், தொலைக்காட்சி மையமும், நவீன வசதிகளுடன் கூடிய மைதானமும் அவரின் மகத்தான பணிகளை என்றும் நினைவுபடுத்துவதாக உள்ளன. இவர் தனது பணிக்காலத்தில் சுதந்திரபுரம் போன்ற இடங்களில் புதிய கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டுவதிலும், பழையனவற்றைப் புதுப்பிப்பதிலும் ஈடுபட்டிருந்தாலும் இன்று நெடுந்தீவிலுள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த கிறிஸ்தவ ஆலயத்தைப் பாதுகாப்பதிலும், அதற்கு ஈடான புதிய ஆலயத்தை அமைப்பதிலும் அவர் தனியாக நின்று எடுத்து வரும் சிரத்தை அனைவரின் பாராட்டுக்கும் உரிய செயலாகும்.

வயதால் இந்நூலாசிரியர் மிக இளையவராக இருப்பினும் முதிர்ச்சியான ஆன்மீகவாதிக்குரிய அடக்கம், ஆற்றல், ஆழ்ந்த புலமை, கருணை உள்ளம் என்பன நிரம்பப் பெற்றவர். அவரது சொந்த அனுபவமே பலருக்கு வழிகாட்டியாக இருந்ததை நான் நன்கு அறிவேன். இது அவருடன் நான் கடந்த ஏழு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்து பழகிய அனுபவம். எதையும் சுவைபடக் கூறும் ஆற்றல் கொண்ட இந்நூலாசிரியர் நகைச் சுவைபட பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவர். அத்தகைய ஆற்றலும், அனுபவமும் நிரம்பப் பெற்ற ஒருவரது ஆன்மீகச் செய்திகள் இன்று நூலாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். அவர் பணியும், சேவையும் எம்மக்களுக்கு தொடர்ந்து கிடைக்க இறைவனை வேண்டுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



அருட்பணி யோன் செல்வம் அவர்களின் இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதுவதனைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன் மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் நாளடைவில் தளைகள் அவனைப் பிணைக்கின்றன. அறிவர் ரூசோவின் வாக்கு வாழ்க்கை என்பது பஞ்சு மெத்தையல்ல போராட்டங்கள் நிறைந்தவை என்பது அறிஞர்களின் அனுபவ வாக்கியம் போதகர் குடும்பத்தில் பெரும் தளையாக இறைபணி பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. ஏனையபணிகளைப் போலல்லாமல் இறைபணி மிகவும் கடினமானது எனது இருபது வருட அனுபவத்தில் நான்கண்டு கொண்ட உண்மை இது இப்பணியில் கடந்தகால அனுபவங்கள் தற்கால எதிர்கால வாழ்வுக்கு உர மூட்டுபவை.

போதகர் குடும்பத்தின் கடந்தகால அனுபவ பகிர்வுகள் அந்தந்த காலத்திற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளமை சிறப்பான அம்சங்களாகும். இவை ஏனைய இறைபணியாளர்களின் வாழ்வுக்கு பெரும் உதவியாக அமையும் என்பது எனது நம்பிக்கை. போதகர் யோன் செல்வம் நூல்களை வெளியிடுவதில் பெரும் வித்தகர் நாமிருவரும் சந்திக்கும் போது இறையியல் அனுபவங்களை என்னுடன் வாதிடுவார்.

அருள் மனையும் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையும் அவரின் இப்பணிக்கான ஆயத்த களங்களாக அமைந்தன. நான் இறையியல் கல்லூரியில் கல்விகற்ற காலத்திலிருந்தே யோன் செல்வத்தை நன்கறிவேன் நான் தற்போது அவரின் தாய்ச்சபையாகிய தெல்லிப்பளை திருச்சபையின் குருவானவராக பணியாற்றும் காலத்தில் இப்போது கிடைத்தமையிட்டு மிக்க மகிழ்சச்சியடைகின்றேன்.போதகர் குடும்பத்தின் இறைபணி மென்மேலும் சிறப்பாக அமைய எனது குடும்பத்தின் வாழ்த்துக்கள் .

அருட்திரு. பெஞ்சமின் ஜெயராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHURCH OF THE AMERICAN CEYLON MISSION

*Rev. Enoch Punitharajah B.com, BD,M.A,MTH*
*Presbyter,*
*Tel No: 077-3024411, 0113150434*

*CACM,* Amherst
*Bazar Road,*
AMHERST.
*Udappusellawa.*
*Sri Lanka.*



## 15 வருடப் பணி நிறைவில்
## மனநிறைவுடன் ஓர்
## வாழ்த்து மடல்

"கடவுளின் பணியாளர்கள் அவரது முகத்தைக் காண்பார்கள் அவரது பெயர் அவர்களுடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கும்.

(திரு வெளிப்பாடு 22:3,4)

இறையரசின் திராட்சைத் தோட்டத்தில் 15 வருட நிறைவு காணும் எனது அருமை நண்பர் அருட்திரு யோன் செல்வம் அடிகளாருக்கு அவரது தளராத உண்மையும் மகத்துவமான பணியை வாழ்த்த கிடைத்த வாய்ப்புக்காக இறைவா உமக்கு நன்றி.

அவரைப் பல வருடங்களாக நன்கு அறிந்தவன் அவருடன் இணைந்து கோணாவில் விசுவமடு பின் நெடுந்தீவு எனப் பல இடங்களில் அவர் பணி புரிந்த வேளைகளில் அவரின் அன்பார்ந்த அழைப்பில் உழைப்பில் பல அனுபவங்களை அவர் மூலம் பெற்றுக் கொண்டவன் என்ற முறையில் அவரின் சிறப்புக்களை கூறுவதில் பெருமையடைகிறேன்.

அவர் நற்செய்தி நன்றுரைக்கப்பட வேண்டும் என்ற மனவாஞ்சை கொண்டு நாட்டின் போராட்ட சூழலில் கடுமையான வேளைகளில் அயராது பணி செய்தார். அவருடைய ஊழியம் நெடுந்தீவில் ஏழு வருட நிறைவு காணுகிறது அவருடைய அயராத உழைப்பும் ஆன்மீக வழிகாட்டலும் கல்விப்பணியும் பெரு விருட்சமாகக் கிளைபரப்பி என்றும் மக்கள் மனதில் பசுமையாக நிறைந்திருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என உறுதியாக நம்புகிறேன்.

அவருடன் நெடுந்தீவில் இணைந்து பணிசெய்த பசுமை நினைவுகளை என் வாழ்வில் மறக்கவே முடியாது இப்பணியில் அவர் சிறுவர்கள், வாலிபர்கள் பால் கொண்ட அன்பையும் கல்விப்பணியின் ஈடுபாட்டையும் நேரில் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்த. அவர் மீது அமெரிக்க திருத்தொண்டர்களின் கல்விப்பணி மற்றும் ஆன்மீகப்பணியின் எதிர்நோக்கும் ஆவி நிறைவாகக் காணப்பட்டுக் கிரிகை செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பல கல்விச் சுற்றுப் பயணங்களை ஒழுங்குபடுத்தி முதலில் தீவுப்பகுதியின் யாழ் குடாநாடு அதன் பின் முழு இலங்கை என நெடுந்தீவுப் பிள்ளைகளை அழைத்து சென்று நாட்டின் போர்ச் சூழலால் கிணற்றுத் தவளைகளாய் இருந்தவர்களுக்கு வெளி உலகைக்காட்டி மகிழச் செய்த பெருமை இவரையே சாரும் இதில் 2006 ம் ஆண்டு அகில இலங்கை சுற்றுலா சென்றவர் மனதில் என்றும் நிறைந்திருக்கும்.

அவர் சிறுவர் இளைஞருக்கான மாலை நேர வகுப்புக்கள், கணனி வகுப்புக்கள், 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்கள் ஆங்கிலவகுப்புக்கள் எனக் கல்விக்கான வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி மாணவருக்கு சிறப்பான கல்வி வழங்கி உற்சாகமூட்டி பரிசில்களும் வழங்கினார். மேலும் கலை வடிவங்களை இளைஞர்கள் மத்தியில் விதைப்பதில் பெரும் பங்காற்றினார். நாட்டுக் கூத்துக்கள் நாடகங்கள் கிறிஸ்மஸ் கரோல் ஆராதனைகள் என பலவற்றையும் சிறப்பாக பலரையும் நெடுந்தீவுக்கு வருவித்து நடத்தினார். மாணவர் தினங்கள் ஆசிரியர் தினம், தை பொங்கல் வழிபாடு விளையாட்டுப் போட்டிகள் எனப் பல நிகழ்வுகள் களம் காண அயராது பாடுபட்டார். மேலும் பல செயற்பாடுகளையும் நெடுந்தீவு ஆலயத்தின் பணிகள் வீடு சந்திப்புக்கள், ஆறுதல் அளிக்கும் ஜெப தியானப் பணிகள் என சளைக்காது மன நிறைவுடன் மகிழ்வுடன் செய்த நிறை பணிகள் அவர் புகழை என்றும் நெடுந்தீவில் மணம் பரப்பி நிற்கும்.

அவர் மேலும் மலர்களை வெளியிட்டார். நினைவு மலர்களை வெளியிட்டு வரலாற்றை எதிர்கால மக்களும் அறிய அரும்பணி புரிந்துள்ளார்.

எல்லாவற்றிற்கும் மகுடமாக பல கட்டிட திருத்தங்கள் புதிய அரங்கம் ஊழியர் தங்குமிடம் எனக் கட்டிடப் பணிகளிலும் சிறப்பாக தற்போது புதிய ஆலயத்தையும் கட்டி முடிக்கும் சிறப்பையும் பெற்றார். அவரின் இத்தகைய பல சிறப்பான பணிகள் நெடுந்தீவு வரலாற்றில் என்றும் நினைவு கூரப்படும் சிறந்த பலவற்றை கடவுள் மீது கொண்ட மாறாத அன்பால் மக்களுக்கு செய்து தடைக்கற்கள் மிகுந்த உலகில் படிக்கட்டானார்.

நெடுந்தீவு உள்ளங்கள் உறவுகள் நண்பர்களுடன் இணைந்து நானும் என் குடும்பமும் திருச்சபையும் அவரை மனதின் ஆழத்தினின்று இறைவனின் பணியில் நெடு வாழ்வு வாழ வாழ்த்தி நிற்கின்றோம். அவர் பணியில் உறுதுணையாக பணியாற்றிய குரல் வளம்மிக்கவரும் ஊழியங்களில் தோள் கொடுத்த போதகர் அம்மா விமலாதேவி மற்றும் மகள் ஏஞ்சல் அவர்கட்கும் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம். இந்த அருமை ஊழியக்கார குடும்பத்தின் சிறப்பான விருந்தோம்பலையும் பணியையும் காணசெய்த இறைவனுக்கு நன்றி படைத்து நிறைவு செய்கின்றேன்.

இறைவனின் திராட்சைத் தோட்டத்தில்
ஈனொக் பூ . புனிதராஜா
டிலோ ரேச்சல் சன்ரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Greetings: Thanks giving to God
## For the 15 years of Ministry

"His servants will worship him. They will see his face and his name will be written on their fore heads"

(Revelation 22:3,4)

It's a great joy and Pleasure to wish my dear friend Rev.R.John Selvam for his 15 years of faithful service, in the vine yard of kingdom of God.

We praise and give thanks to God for this opportunity to wish him for his truthful and fearless great service to God at the time of war in our country.

He is welknown to me when we were young and served as a minister in Kondavil, Visuvamadu and in Delft Island I was privileged to work to-gether with him and I witnessed his good qualities specially his love and kindness, and Hospitality towards the people.

Rev. R. John Selvam is a hard working and faithful to his God and saviour Jesus Christ at all circumstances also a good preacher of Gospel and followed his Preaching in his life. He was always wanted to spread the gods Good News to the poor and oppressed

He has sarved 7 years in Delft Island and gave importance for children and youths in Delft In 2006 He arranged a all ceylon trip. At time due to war children and youth could not travel any where for a long time. And they were like frogsin the well. By organising these trips he showed them the outher world to them and made them Happy where ever He worked He organised cultural progaammes for youth and children staged fork dramas christion. Dramas and Musical shows and developed their skills. He organised English carols for children at the time. of chirst-mas, and encouraged children and elders in sports by holding sports meets and giving prizes for them in a lareg scale.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He fulfilled his pastoral and social needs of his community and a grate source of help for all at the time of trouble.

By publishing many Magazines Tarcks and news letters. He proclimed the workof God and the church history to the future genaration Among these the 150th year churs Magazine is a mile stone in the Delft Island's History.

Rev. R. John selvam renovated the parsonage bgildin door and out door stayes inside church premises and also acomputer centre for children to learn computer with this he had built new church for the people in Delft to worship the almighty this will always keephis name in the minds of the people forever.

It's my duty to mention the pothagar Amma vimaladevi John Selvam who is areat singer and loving daughter Angel were great source of suPort for his ministry.

I wish on behalf of my family, and of my church members that god were bless his family and use him for his vine yard more in future. Thank you God for giving such wonder ful People like Selvam In My life time giving chances together with them. Dear pothagar god willbless you and your ministry

Work in the vine yard
of God
Enoch P. Punitharajah
Dilo Punitharajah
Rachel and sandra



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

வண.ஜோன் செல்வம்

வண.ஜோன் செல்வம் கடந்த 7 வருடங்களாக நெடுந்தீவில் பணி ஆற்றியபோது அவரை நான் அறிநது கொண்டேன் இவர் தனது ஆரம்பக்கல்வியைத் தெல்லிப்பளை கட்டுவன் மகாவித்தியாலத்திலும் பின்பு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் தொடர்ந்தார். மருதனார்மட இறையியல் கல்லூரியில் குருத்துவப் படிப்பைப் பயின்றார். முரசுமோட்டை, விசுவமடு ஆலயங்களில் இறைபணி புரிந்தார். இந்த இரு திருச்சபைகளிலும் நன்கு பணியாற்றிய பின் கொழும்பு திருச்சபையில் பேராயர் S. ஜெபநேசன் அவர்களால் உதவிக்குருவாக அபிஷேகம் செய்யப்பெற்றர்.

தொடர்ந்து வண ஜோண் செல்வம் வன்னி - சுதந்திரபுரத்துக்கு மாற்றலாகிச் சென்றார். அங்கு ஒரு புதிய ஆலயம் திறப்பதற்கு உதவிபுரிந்தார். அத்துடன் நற்செய்திப்பணியையும் திருப்திகரமாகச் செய்தார். தன் மேய்ப்புப்பணியைப் பரந்த அளவில் வன்னியிலே நிறைவேற்றினார். கிளிநொச்சி, கோணாவில் அக்கராயன், முறிப்பு, பாரதிபரங்களில் பணி செய்துள்ளார்.

2000ம் ஆண்டில் திருமணம் செய்ததுடன், அதே வருடத்தில் கொழும்பு திருச்சபையில் பேராயர் Dr.s ஜெபநேசன் அவர்களால் உதவிக் குநிலைக்கு உயர்த்தப்படட்டார்.

7 வருடங்களாக வண.ஜோன் செல்வமும் அவரது மனைவியும் நெடுந்தீவுப் பங்கில் பணிபுரிந்தனர். நெடுந்தீவு மத்தியிலும் மேற்கிலும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நடாத்துகின்றனர். நெடுந்தீவு மேற்கில் லண்டனில் வாழும் ஒரு குடும்பத்தின் உதவியுடன் ஒரு கணனிப்பயிற்சி நிலையத்தையும் ஒழுங்குபடுத்தியுள்ளார். எனவே இரு இடங்களுக்கும் இடையில் துவிச்சக்கரவண்டி உதவியுடன் சென்று சிறப்பாக நிர்வாகங்களை நான் கண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மக்களால் நேர்மையான, சிறந்த பணியாளராகக் கருதப்பட்டதால் அவர்களின் மதிப்பு, மரியாதையைப் பெற்றுள்ளார்.

அவர் பற்றியும் அவர் பணிகள் பற்றியும் கிறிஸ்தவர் அல்லாதோரும் புகழ்ந்து கூறியுள்ளதைக் கேட்டுள்ளேன். நெடுந்தீவு தென்இந்திய திருச்சபையில் 150ம் ஆண்டு விழாவிற்கு வரலாற்று நினைவு நூலை வெளியிட்டுள்ளார். அத்துடன் பகற் பராமரிப்பு நிலையத்தின் 25ம் வருட நிறைவுக்குப் பிள்ளைகள்

பெற்றோருடன் 2 பஸ்சில் சென்று இலங்கை முழவதையும் காட்டி வந்துள்ளனர். பழைய ஆலயத்திற்குப் பதிலாக ஒரு புதிய ஆலயத்தையும் கட்டி அதனை நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளார். அவரின் வேண்டுதலுக்கு மக்கள் செவிசாய்த்து ஆலய கட்டடத்திற்குத் தேவையான நிதி, பொருட்கள் கொடுப்பதில் ஒத்துழைப்புக் கொடுத்துள்ளார். இப்பாரிய பணியை இட்டு அவரும் அவர் மனைவி (பிள்ளை)யும் பெருமைப்பட முடியும்.
நெடுந்தீவு மக்கட்கும், திருச்சபைக்கும் ஆற்றிய நற்பணிகளையிட்டு நாம் நன்றியுடையவர்களாக உள்ளோம். எதிர்காலத்திலும் அவரும் அவர் குடும்பமும் எங்கு சென்றாலும் இறை மகிமைக்காக நற்பணி புரிய இறைவனிடம் செபிக்கின்றோம்.

Dr.K.E சந்திரபால்
யாழ் தென்னிந்தி திருச்சபை
முன்னாள் அங்கத்தவர்
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Rev.John Selvam

Rev.John Selvam has been a pastor in Delft for the last 7 years during which time I came to know him. Rev. John Selvam had his early education in Kadduvan Mahavidiyalayam Tellipalai, and later at Manipay memorial english school. He later grduated as a pastor from Maruthanarmadam training centre for priests. He served as a pastor at the Murasumooddai church and also at the Visuvamadu church. He did very distinguished services at both these churches and was later appointed as an assistant pastor to Rev. Jebanesan at the Colombo church.

Subsequently Rev. John Selvam was transferred to Suthanthirapuram, Vanni, where he helped to build a new church and did a successful evangilical mission. Following this he covered a wide area in Vanni in his pastoral service covering, Killinochi,Kornavil,Akryan, Murippu and Parathipuram.

Rev. John Selvam married in year 2000, and in the same year was ordained as Reverand at the Colombo church by Rev. Dr. S.Jebanesan

For the last 7 years Rev John Selvam and his wife have been engaged in running the Delft parish. They are also managing the day care centres in Delft cetre and in Delft west. There is also a computer training centre in Delft west which he organised with the help of a family in the U.K.. I have seen him cycling between these two places, managing the administration of these places very efficiently.

He has built up a reputation in Delft as a genuine and sincere worker and has won the respect and admiration of the people of Delft.

I have heard many a non christians say good words about him and his work. He also celebrated the 150th anniversry of the Delft church and published a very informative souvernir with a lot of historical facts and findings. He also took the Day care centre children on a tour of Sri-Lnka in two coaches,in celebration of the 25th anniversary of the day care centre..He has also completed the construction of the new church, replacing the old church. People of Delft have contributed money and material towards the building of the chuch as to his request. It is an enormous task of which he and his wife can be very proud of.

WE are very grateful to him and his wife for all the good works done for the people of Delft and the church, and we pray that he and his family do well in the future and continue to do the good works, where ever they go,for the glory of God.

Dr. K.E. Chandrapal

Former, executive member and secretary to the J.D.C.S.I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை



திருக்குடும்ப கன்னியர்
மடம்
நெடுந்தீவு
14-07-2010

"ஆண்டவர் என் நல்லாயன்"

தென் இந்திய திருச்சபை (நெடுந்தீவு) குரு வண. போதகர் ஜோண்செல்வம் அவர்களின் ஆன்மீக செய்திகள் அடங்கிய மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். கடந்த 15 ஆண்டுகளாக இச்செய்திகள் வழங்கியுள்ளார்.

2005ம் ஆண்டில் நான் நெடுந்தீவுக்கு வந்த நாளிலிருந்து அவரையும் அவர் குடும்பத்தையும் எனக்குத் தெரியும் ஏனென்றால் நெடுந்தீவு மத்தியிலும்,மேற்கிலும் அமைந்துள்ள சிறார்களின் முன்பள்ளி பகற்பராமரிப்பு நிலைய நிகழ்வுகளுக்கு எம்மை அழைப்பார். நாமும் மகிழ்வுடன் சென்று பங்குபற்றித் திரும்புவோம். பாகுபாடின்றி தனது மக்கள்,கத்தோலிக்க இந்து மக்களுடன் நல்லமுறையில் திட்டமிட்டுச் செய்வார். பலசாலிகளுக்கு முகம் கொடுக்க நேரிடினும் மகிழ்வுடன் எல்லாவற்றையும் நல்ல ஆளுமையுடன் செய்வார். அவரின் மனைவியும் இவரின் பணிக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுக்கின்றார். மகள் ஏஞ்சலீன் றோ.க மகளிர் கல்லூரியில் படிக்கின்றார்.

ஒவ்வொரு நிகழ்வுகட்கும் காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப நல்ல உரைகளை ஆயத்தப்பத்திக் கூறியவற்றைக் கொடுத்துத் தற்போது ஓர் அழகிய மலராக வெளியிடுகின்றார். இறைவன் இவரது முயற்சியை ஆசீர்வதித்துத் தொடர்ந்தும் இவர்களுடன் இருந்து மேலும் மேலும் அருள்களைப் பொழிய ஆசித்து நிற்கின்றேன்

அன்பு செபங்களுடன்
சகோதரி பிறிஜிற் மல்லிகா
சவரிமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Holy Family
Convent
Delft
14.07.2010

Rev. R. Johnselvam
J.D.C.S.I Church
Delft

"The Lord is my good shepherd" (Ps:22)

It is a great Pleasure to me to write of few words to the book of Rev. R. Johnselvam which contains his spiritual message during.

I know him since 2005 When I came to Delft He invites us to all the events of the church and the Day care center in Delft center west He orgainises very well All the activities with his wife colloboate with him in all theiservices. Their child Angeline studiesy in R.C Ladies college Delft so I of tenmeet them.

In every occasion He Weed to write and speak something that corresponds with the sign of the time. Now he collect all the petals and Publish like a beautifull feework (book)

May god bless his effortand eontinue to be with him and his family and shower more blessings abundantly.

With lord and Prayer
Sr. Bridght malliha
SAVERIMUTHU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.L.Baskaran
Teacher in charge
RESC
Zonal Education office
Jaffna
12.07.2010

**Felicitation To The Service of Precious Pastor**

It is a great honour to join the line of people who have experienced and witnessed the versatile services of a religious soul to grace all valuing equality among societies.

It is a happiest and proudest moments which I experienced when I happened to visit the remote island Delft, in order to teach English to the school leavers under the revolutionary idea of 'Mahinda Chinthanaya' . He readily offered me food and lodging , considering the benefit of the children Delft. It is his family which supports his kind deeds to serve the humanity.

Every church and the period which he was assigned for, was a real test to prove his laborious task and dedication. For instance, when the A-9 road was closed in August, 2006, there was serious scarcity of food and medicine in the Jaffna Peninsula, it was critical in the sub-islands As there was a problematic situation arose, our Pastor visited each and every INGO, in search of food subsidiary, he faced much hardships .But, he never gave up his courage and finally approached UNHCR office for his needs, it was another blow and he was returning sadly; one Foreign Officer , had been observing the pitiful visage of the pastor, from a distance rushed to the officer who returned our Pastor barehanded, having learnt the things quickly; he called our pastor and ordered his employees to issue him a bulk of milk foods immediately. It was worth to three months need, thus his kids in the Day Care Centre were fed well for months.

So my heart and lip pray the almighty to save him healthy and prosperous to do his limitless service to mankind.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா / நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
## J/DELFT SAIVAPRAGASA VIDYALAYAM

நெடுந்தீவு.
DELFT.

*Mr. S. Sathiyavarathan* B.A., PGD in Ed., Sc. Trd. (Sp), SLPS - 2.II
*Principal*

..../...../201....

தென்னிந்தியத் திருச்சபையின் வண. போதகர் ஆர்.யோண் செல்வம் அடிகள் தமது குருத்துவ வாழ்வின் 15ம் ஆண்டு நிறைவை நிறைவுள்ளதாக நினைவு கூரும் வகையில் நீடித்து நிலைக்கும் சின்னமாக தான் எழுதிய ஆன்மீகச் செய்திகளைத் தொகுத்து புத்தகமாக வெளிக்கொணரும் முயற்சியை மனதாரப் பாராட்டுகிறேன். போர்ச் சூழல், அகதிவாழ்வு, அவலம், அநியாயம், சமாதானச்சாயம் பூசப்பட்ட காலம் தமிழினத்தின் நிர்க்கதிச் சூழல் என பல காலப்பகுதிகளை உள்ளடக்கிய அந்தப் பதினைந்து ஆண்டு காலச் செய்திகள் காலத்தின் கண்ணாடியாய் எதிர்காலச் சந்ததியினருக்கு அவ்வக் காலக் கருத்தினை எடுத்தியம்பும் இலக்கியமாய் மிளிரும் என எதிர் பார்க்கலாம்.

மறை பரப்பும் போதகராக- ஆன்மீகவாதியாக- அமைதிப்பணி புரிகின்ற போதகரின் உள்ளத்துணர்வுகள், நாட்டில் நிகழ்ந்த மாறுபட்ட சூழலை நடு நிலை வாதியாக நின்று சிந்தித்து எழுதிய கருத்துக்கள், அக்கருத்துக்களுக்கு ஏற்ப விவிலியத்திலிருந்து பெறப்பட்ட வேத வாக்குகள், அவற்றின் பொருத்தப்பாடு, இறை வேண்டுதல் என இன்னோரன்ன விடயங்களை தன்னகத்தே கொண்ட ஆன்மீகச் செய்திகள் தொகுக்கப்பட்டு புத்தகமாகும் போது நிச்சயமாக அது ஒரு வரலாற்றுச் சான்றாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித் தாழாது உற்றுபவர்" என்ற தெய்வப்புலவர் வாக்குப் போல, எறும்பின் உழைப்பையும் ஆந்தையின் விழிப்பையும் தன் மூலதனமாகக் கொண்டு ஆடம்பரமின்றி அமைதியாகப் பணியாற்றுபவர் போதகர் ஆர். யோண்செல்வம் அடிகள். ஏழைகளின் சேவையே இறை சேவை என்ற தாரக மந்திரத்தை தலை மேற் கொண்டு தனது 15 ஆண்டு கால சேவையையும் இடர்களும்,இன்னல்களும் அதி கஸ்டங்களும் நிறைந்த பிரதேசங்களிலே செய்து அந்த மக்களின் இன்ப துன்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் ஒருவனாக இணைந்து பணியாற்றியவர். ஏழை எளிய மக்களின் வாழ்வின் ஒளிக்கீற்றாக, ஏழைகளின் கல்விக் கண் திறக்கும் ஞான ஊற்றாகவும் பணியாற்றுபவர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்குப் போல எந்த வேளையிலும் மனமுவந்து பணியாற்றும் நற்பணியாளர்.

மத போதகப் பணியாளர் எனும் போது எந்தப் பணியாளனும் தன்னுடைய மதத்திற்கு முதன்மையும் முக்கியமும் கொடுத்து அந்த மதம் பரப்பும் பணியையே தன் பணியாகச் செய்வார்கள. தம் மதம் சார்ந்தவைகளைச் சார்ந்ததாகவே அவர் பணி அமையும். இது அவர் தம் நியதியும் கூட. ஆனால் எமது போதகர் ஆர். ஜோண் செல்வம் அடிகள் மத பேதம் பாராது, மக்கள் பேதம் பாராது அனைவரையும் சமமாக மதித்து தேவை அறிந்து சேவை செய்யும் சேவையாளர் ஆவார்.

எமது தீவகத்தில் போதகர் ஆர். ஜோண் செல்வம் ஏழு ஆண்டு இறைபணி என்பது ஏழெழு ஆண்டுகளில் ஆற்றியிருக்கக் கூடிய பணிகளை அவர் ஒரு குறுகிய காலத்தில் ஆற்றி எம்மக்கள் உள்ளங்களில் எல்லாம் நீங்கா இடம் பெற்றுள்ளார். சிறுவர் பகற் பராமரிப்பு நிலையங்களை சிறந்த கலைக்கூடங்களாக்கி, குருமனையைப் புதுப்பித்து நூற்றாண்டு பழமை வாயந்த திருச்சபை ஆலயத்தை புதிதாக அமைத்து நிலையான நினைவைப் பதித்துள்ள போதகர் ஆர். ஜோண் செல்வம் அவர்களுக்கு இறைமகன் இயேசு நீடித்த ஆயளையும் நிறைந்த ஆற்றலையும் வழங்கப் பிரார்த்திப்பதோடு அவரின் முயற்சி வெற்றிபெ வாழ்த்துகின்றேன்.

சத்தியவரதன்

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம்
J/ Delft Mangayatkarasi Vidiyalayam

DELFT
.................200...

## மனு நீதி சொல்லும் மலர்

"மானிடர் இடர்களைய மகான்கள் உலகில் தோன்றுவார். காலத்தின் தேவைக்காய் கருணையுள்ளங்களும் கால்டி எடுத்து வைக்கின்றன" அந்த வகையில் எமது மண்ணின் உன்னதங்களுக்காக 2003 இல் உதயமான செந்தாமரையே வண.போதகர் ஆ.யோண் செல்வம் அவர்களாவார்.

1995 இல் குருத்துவப் பணியை தொடங்கி இன்று பதினைந்து வருடங்களை எட்டியுள்ளார். இவர் நிறை பெற்றிருக்கும் தனது பணிக்காலத்தின் அரைவாசியை அதாவது ஏழு ஆண்டுகளை நெடுந்தீவில் நிறைவாக்கியுள்ளார். இக்காலப்பகுதியில் அவரின் செயலொழுங்குகளை நாம் அறிந்திருக்கின்றோம்.

- சுமயம் சார்ந்த நிகழ்வுகளையும் விழாக்களையும் பொதுமைப்படுத்தி நடத்துதல்
- நத்தார் சிறப்புச் செய்தியைக சகல இல்லங்களுக்கும் எடுத்துச் செல்லுதல்
- சமய,சமூக வேறுபாடுகளின்றி மனித நேயத்தை விதைத்தல்.
- கூட்டு வழிபாடுகளையும் கருத்தாடல்களையும் நடாத்துதல்.
- சிறுவர், முதியோர், தினம், ஆசிரியர் தினம் என்பவற்றை கோலாகலமாக நடத்திக் கௌரவித்தல்.
- மலர் வெளியீடுகளின் மூலம் பலரையும் கருத்துப் பகிர்விற்கு அழைத்தல்.
- உள்ளூரின் சேவைக்குரியவர்களை கௌரவித்தல்
- அபிவிருத்திமையம் ஒன்றை ஸ்தாபித்து கிராம வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் வழிகாட்டுதல்.

என இவரது பணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அந்த வகையில் அருளாளர் வண. போதகர் ஐயா அவர்கள் அவ்வப்போது வெளியிட்ட ஆன்மீக, சமூக கருத்துக்கள் ஒரே பார்வையில் நூலுருவில் வெளிவருவது அவரது உயரிய நோக்குகளை எடுத்தியம்பி நிற்கிறது. இம்மலரை வெளியிட விருப்புற்று முன்னோக்கி நிற்கும் அவரை மனதார வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். இம் மலருள் பொதிந்துள்ள மணமும்,சுகமும், தூய்மையும் எல்லோரும் நுகர்ந்து பயன்பெற உதவும் என நம்புகிறேன். இவரது பணியும் நலமும் நீண்டு செல்லவும் குடும்பத்தில் இன்பம் என்றும் நிலைக்கவும் எல்லோர்க்கும் இனிதான சக்தியை வேண்டி நிற்கின்றேன்.

கோ. பத்மநாதன்
யா நெடுந்தீவு மங்கையற்கரசி
வித்தியாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணி தொடர வாழ்த்துக்கள்

பிறந்து மண்மேல் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை மறந்து திரிகின்ற மாந்தருக்காக சேவையாற்றி வருகின்ற வண.போதகர் இரத்தினம் யோன் செல்வம் அடிகளார் அவர்கள் அழுக்கநற் சிந்தை வியா சிந்தை, அந்தன்மை அடக்கம் அணியாகக் கொண்டவர் அறநெறியில் இன்று இறைபணியும் மனித பணியும் ஆற்றி வருகின்ற மனித நேயப் பண்பாளர் ஏழைகளில் சிரிப்பிலே இறைவனைக் காண்பவர்.

1998 காலப்பகுதியில் சுதந்திர புரத்தில் பணிசெய்த போது இறை மகன் இயேசுவின் பொன்னான போதனைகளை மக்களின் மனதுள்ளே செலுத்தி யேசுவுக்காக ஓர் ஆலயத்தையும் கட்டி மக்களை நல்வழிப்படுத்தியவர். எத்தனையோ விழாக்களை நடாத்தி மக்களை அறவழிப்படுத்தியவர் குறிப்பாக முதியோர் கௌரவிப்பு விழா, சிறுவர்தினவிழா, சர்வமத கருத்தரங்கு மாநாடு, நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தை ஆரம்பித்து அதனூடாக கல்வி வளர்ச்சிக்கான கருத்துரை மாநாடு போன்றவை குறிப்பிடத்தக்கவை.

அவரின் சேவைக்காலத்தில் இடம்பெற்ற அழியாத நினைவுச்சின்னமாக புதியஆலயத்தை அமைத்துள்ளார். அவரது பணி மேமேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து பலகாலம் பல வளமும் பெற்று வாழ இறைவனை வேண்டி அமைகின்றேன்.

நன்றி

ந. நடராசா
கிராம உத்தியோகத்தர்

அம்பிகைபுரம்
நெடுந்தீவு – 05
23-07-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

அருட் திரு. ஜோன் செல்வம் அடிகளாரின் இறை ஊழிய வரலாற்றில் பதினைந்து வருடங்கள் நிறைவடைந்து தொடர்ந்து செல்லுகின்ற வழிப்பயணத்தின் வழித்தடங்கல்களையும் அனுபவங்களையும் அச்சுரீதியாக வெளிக்கொணரும் இச்சந்தர்ப்பத்தில் ஒரு காலத்திலே அவருடைய மாணவனாக இருந்த நினைவுகளோடு நானும் ஒரு வாழ்த்துச்செய்தியை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

அடிகளார் அவர்களை சுமார் இருபது வருடங்களுக்கு முன்பதாக நான் பாடசாலை மாணவனாக இருந்த காலங்களில் அவர் ஒரு சமூக சேவை பணியாளனாகபணிசெய்து வந்த காலம் தொட்டு இன்று வரையும் நட்புறவைக்கொண்டிருக்கிற ஒருவனாக இருந்து வருகின்றேன்.

இறைபணியினோடு சமூகப்பணியையும்ஒருங்கே இணைத்து பணி செய்வதில் மிக்க வீறுகொண்டவராகவும் நன்கு திட்டமிட்டு கையில் எடுத்துக்கொண்ட பணி எதுவானாலும் அதனை ஆரம்ப முதல் முடிவு வரையும் சம் அளவான உத்வேகத்துடன் செய்து முடிப்பதில் அல்லது வெற்றி காண்பதில் ஜோன் செல்வம் அடிகளாருக்கு நிகர் யாரும் இல்லையென்றே சொல்லமுடியும். வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தற்போது நெடுந்தீவிலுமாக தொடர்ந்து செல்லுகின்ற அவரது இறைபணியும் சமூகப்பணியும் மேலும் விரிவடைந்து செல்லவேண்டுமெனவும் அவரது பணியினையும் இறைவாழ்வையும் எடுத்துச்சொல்லுகின்ற இந்நூல் உருவாக்க முயற்சியும் வெற்றியடையவும் சிறக்கவும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஆ. சிவபாலம் ஸ்ரீபன்
பிரதம முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை
துணுக்காய்,
முல்லைத்தீவு
(சுதந்திரபுரம் திருச்சபை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கின்றேன்.**

என்று கர்த்தர் மோசேக்கு சொன்ன வண்ணமாக இறைப்பணிக்காக அழைத்து இன்று பல்வேறு செயற்பாடுகளை அருட்பணியாளர் ஜோன் செல்வம் அவர்களுக்கூடாக இறைவன் தாமே பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

தாயின் கருவில் இருக்கும் போதே நான் உன்னை தேர்ந்தெடுத்தேன்.

இவரின் பிறப்பிற்கு முதலே கடவுள் தன்னுடைய பணிக்காக தெரிவு செய்துள்ளார். 1970ம் ஆண்டு பிறந்த இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியினை தனது ஊராகிய தெல்லிப்பளை கட்டுவன்மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று பின்னர் மிகுதிக் கல்வியினைத் தொடர்ந்தார். இவர் தன்னுடைய கல்விகற்கின்றவயதிலேயே ஆன்மீக செயற்பாடுகளை மேற்கொள்வதில் ஆவலாக செயற்பட்டார்.

ஒருவருடம் முறிப்பு சலோம் இல்லத்தில் தான் இல்லத்தில் பெற்ற தன் நன்றிக்கடனாகவும் கடவுளின் நற்செய்தியை அறிவிக்கும் ஒரு தூதுவனாகவும் இறை ஊழியத்திற்கு போகு முன்னர் ஆயத்தப் பணியாக மேற்கொண்டு 1991ம் ஆண்டு யாழ்ப்பாண இறையியற் கல்லூரியில் இணைந்து 1995 ம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகள் தனது இறையியற் கல்லூரியின் கல்விதனை நிறைவு செய்து பிணியாளிகளுக்கு வைத்தியர் போல் வன்னிப் பிரதேசத்திலே துன்பத்தில் வாடிய மக்களுக்கு துயர் தீர்க்க இறை ஊழியனாக சென்றார்.

பல்வேறு கஷ்டங்கள் தடைகள் சோதனைகள் வந்த வேளையிலும் இறைவன் மீது கொண்ட அன்பினால் அனைத்தையும் வென்று இறைபணியைத் தன்பணியாக் கொண்டு செயற்படுத்தினார். பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம். என்று இராமல் எதை சாதித்தோம் என்பது தான் முக்கியம் அதிலும் தேவ சித்தம் அழைக்கப்படுவது என்பது போற்றப்பட வேண்டியதே. பவுல் அடிகளார் குறிப்பிடுவது போல் தன்னுடைய இறை ஊழியத்தின் இலக்கை நோக்கி செயற்பட்டு வருகின்றார்.

1997ம் ஆண்டு கொழும்பு திருச்சபையில் பேராயர் அதி.வண கலாநிதி S. ஜெபநேசன் அவர்களால் உதவிக் குருவாக அபிஷேகம் பெற்று தொடர்ந்து வன்னிப்பிரதேசத்திலேயே ஊழியத்தினை மேற்கொண்டு வந்தார். 1998ம் ஆண்டு சுதந்திரபுரத்தில் ஊழியம் செய்த காலத்தில் இறைவனுக்காய் புதிய ஆலயத்தைக் கட்டித் திறந்து வைத்தார். 1998 தொடக்கம் 2003ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி, கோணாவில், முறிப்பு, பாரதிபுரம், போன்ற பகுதிகளில் மக்களோடு மக்களாய் கலந்து இறைபணியோடு சமூகப்பணியையும் செய்து வந்தார்.

இப்பணிக் காலத்தில் திருமணவாழ்க்கையில் இணைந்து குடும்பமாக தனது சேவைகளை ஆற்றிவந்தார். அவரது செயற்பாட்டிற்கு அன்பான மனைவியும் பாசத்திற்கு ஒரு குழந்தையும் வழங்கி இருக்கின்றார். திருமணத்தை தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டு கொழும்புத் திருச்சபையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் பல மைல் தூரம் சைக்களில் சென்று தனது ஊழியத்தை நடாத்தி வந்தார். வன்னிப்பிரதேச சேவையினை நிறைவு செய்து சங்கானை திருச்சபைக்கு மாற்றம் அறிவிக்கப்பட்டது ஆயினும் இறைவனின் திட்டம் அவரை நெடுந்தீவு திருச்சபைக்கு அழைத்து சென்றது பலரும் விரும்பாத தீவுக்கு ஆவலுடன் பணி செய்ய குடும்பமாக வந்தார்கள்.

ஊழியத்தின் ஆரம்ப காலம் தொட்டு கஷ்டப்பட்ட மக்களுக்காக தனது சேவையினை வழங்கி 15வருடங்களை நிறைவு செய்துள்ளார். கடவுள் பலப்படுத்தி அவருக்கூடாக பல செயற்பாடுகளை செயற்படுத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவில் பணியாற்றிய இவருடைய காலத்தில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் சில நூற்றாண்டுகள் சென்றாலும் காலத்தில் அழியாத செயற்பாடுகள் கடவுள் அவருக்கூடாக மாற்றியமைத்துத் தந்துள்ளார். காலத்தின் மாற்றத்திற்கு தன்னை மாற்றியமைத்து தன்னை அர்ப்பணித்து தானே முன்னின்று பல்வேறு தடைக்கற்கள் வந்தபோதும் அசவற்றைப் படிக்கற்களாய் மாற்றியமைத்து அவர் செய்த செயற்பாடுகள் மாற்றங்கள் தலைநிமிர்ந்து நிற்கும் கட்டிடங்கள் நினைத்தும் மறக்க முடியாத பல்வேறு நிகழ்வுகள் இவையெல்லாம் இவரது கலத்துப்பதிவுகளாய் மனதுள் புதைந்துள்ளது.

இன்று இவருடைய 15 வருட ஊழியத்தில் கடவுள் இவரைப் பல செயற்பாடுகளுக்கூடாய் வழிநடத்தியதை நன்றியோடு நினைவு கூர்ந்து வெளியடுகின்ற இன்நூல் போற்றுதற்குரியது அதனை இந்த நெடுந்தீவு திருச்சபை வளாகத்தில் வெளியிட்டு வைப்பதை இட்டு நான் இன்னும் பெருமகிழ்வடைகின்றேன். இவருடைய ஊழியப் பெலத்திற்கு கடவுள் செய்த கிரியைகளுக்காக நன்றிகூறுகின்றேன்.தொடர்ந்தும் இவருடைய ஊழியத்தால் பல ஆத்துமாக்கள் ஆதாயமாக்கப்படவும், வருத்தப்படுகின்ற பல மக்களுக்கு உதவி வழங்கவும் இவருடைய சேவை எங்கு சென்றாலும். சிறந்து விழங்கிட இறைவனை வேண்டிநிற்கின்றேன்.


நன்றி
கு. ஐனேந்திரன்
(செயலாளர்தெ. இ. திருச்சபை)
நெடுந்தீவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு பராயத்தில்....









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு
## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
## புனித திருத்துவ ஆலயம் - வீசுவமடு
## 1997–1998

கிறிஸ்துவுக்குள் அன்பான என் மக்களே நாம் திரும்பவும் இந்த ஆண்டில் கிறிஸ்துபெருமானின் பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடவும் இன்னும் ஒரு புதிய வருடத்தைத் தரிசிக்கவும் ஆயத்தமாகுவோம். பாடுகளும் வேதனைகளும் நோய்களும் பொருளாதாரக் கஷ்டங்களும், நண்பர்களின் பகைமைகளும், பாவத்தின் மரண இருளும் நிறைந்த சூழமைவில் எமது ஆத்மீக யாத்திரையை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏசாயா தீர்க்கன் சொன்னது போல் "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்! மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது" ஆம் அந்தப் பரம ஒளி இரட்சிப்பின் ஒளி எம்மிலும் வீசுகின்றது என்பதைத் துல்லியமாக உணர்ந்து அந்தப்பரம ஒளிக்கு முன்பாக எங்கள் ஆவி, ஆத்மா, சரீரம் யாவையும் திருப்பி பாவ இருள் எங்கள் மரணபயங்கள் எங்களது பாடுகள், நோவுகள், வியாதிகள், கஷ்டங்கள், எல்லாவற்றையும், அவர் பாதத்தில் வைத்துவிட்டு அவர்தரும் பெரிதான இரட்சிப்பின் ஒளியைப் பெற்றுக் கொண்டு இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோட ஓடக்கடவோம் கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே கடந்த இந்த ஆண்டில் கடவுளுக்கு மகிமையாக ஜீவிக்கத் தவறியிருப்பாயாகில் உனக்காக இயேசு இன்னும் குழந்தையாகப் பிறந்திருக்கிறார் என்பதை உணர்ந்து மனந்திரும்பி புதிய பிறப்பை அடைந்து உன் ஆத்மீகயாத்திரையைத் தொடருவாயாக.

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

கிறிஸ்துவின் பணியில்
அருட் திரு R. யோண் செல்வம்
சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புனித திருத்துவ ஆலயம் - விசுவமடு

## புனித பேதுரு ஆலயம் - சுதந்திரபுரம்

## 1998–1999

**இருளில் நடக்கின்ற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது.**

ஏசாயா 9:2

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இருள் நிறைந்த சூழ் நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அன்று இயேசுவின் பிறப்பால் இருளில் இந்த மக்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்து இயேசுவைச் தரிசித்தார்கள் இன்று நாமும் பாவ இருள் சூழ்ந்து நிற்கும் இவ்வேளையில் இயேசுவின் பிறப்பு நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருளை அகற்றி ஒளியை ஏற்ற நமக்காக வந்த இயேசுவைத் தந்தார் என்னும் பொன்நாளில் தரிசிப்போம் இற்றைக்கு 2000 ஆண்டுகளாய் பிரகாசித்த இயேசு என்னும் ஒளியை நாமும் ஏற்று இனிவரும் புதுயுகத்தில் பிரகாசித்திடுவோம்.

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவின் பணியில்

அருட் திரு **R.** யோண் செல்வம்

சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12வது ஆண்டு நிறைவு விழா

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புனித தோமா ஆலயம் - கோணாவில்

## 1999

அன்புடையீர்!

இறைவன் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக நமது சபையை தமது தாசர்களுக்கூடாக வழி நடத்தி வந்துள்ளார். இறைவனை நன்றியுடன் புகழ்வதோடு இச்சபையை ஸ்தாபித்து வழிநடத்திய பேராயர்கள் குருமார்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றோம். இச்சபையின் சாட்சியின் ஜிவியத்திற்கு அச்சாணியாக இருக்கும் சபையார் யாவரும் புதிய இரண்டாயிரம் ஆண்டுக்குள் சென்று மகிழ்வுடன் நற்சாட்சி பகர வேண்டும். இயேசுவின் நாமம் மகிமைப்பட புதிய பெலத்தோடு புதிய அகவைக்குள் சென்று எமது ஆன்மீக பயணத்தை தொடருவோம் சங்கீதம் 119-68ல் சொல்லப்படும். வண்ணம் தேவரீர் நல்லவரும் நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர். உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்" அவருடைய பிரமாணங்களில் நின்று எமது ஓட்டத்தை ஓடி முடிக்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்த்து நம்மை ஆசீர்வதத்து வழிநடத்துவாராக

கிறிஸ்துவின் பணியில்

அருட் திரு **R.** யோண் செல்வம்

சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# புனித தோமா ஆலயம் - கோணாவில்
# 1999–2000

உன்னகத்தில் கடவுளுக்கு மகிமை
பூமியில் மனுஷருக்குள் சமாதானம்
மனுஷர் மேல் அவருக்குப் பிரியம்
என்று தேவனை துதித்தார்கள்

லூக் 2.14

கிறிஸ்த்துவின் அன்பிற்குரிய சபையோரே, நண்பர்களே

நாம் இருபதாம் நூற்றாண்டின் கடைசி கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட ஆயத்தமாகின்றோம். இருபதாம் நூற்றாண்டில் நாம் சிந்தித்தவைகள் எத்தனையோ. அதில் பல துன்பம் நிறைந்தது சில வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்கள் இருக்கின்றது. எனினும் கிறிஸ்து எம்மை எல்லா வேளைகளிலும் கை தூக்கி வழி நடத்தினார். எனவே மகிழ்வோடும் உள அமைதியோடும் கிறிஸ்து பிறப்பு விழாவைக்களிப்போடு கொண்டாடுவோம். மலரப் போகும் புதிய இரண்டாயிரம் ஆண்டை அவரது பாதத்தில் அமர்ந்திருந்து ஆரம்பிப்போம். குடும்பங்களில் சமூகத்தில் திருச்சபைகளில் உறவினர்கள் நண்பர்கள் மத்தியில் நாம் கடவுளுக்கு மகிமையாகவும் மனுஷருக்குள் சமாதானமும் அன்பும் பிரியமும் உண்டாக்கத்தக்கதாக இறைவன் எமது கரங்களில் கொடுக்கப்ப டுகிற இரண்டாயிரம் ஆண்டில் வாழ ஆயத்தமாகுவோம். இறையருளைப் பெற்றுக் கொண்டு புதிய அகவைக்குள் கால் எடுத்து வைப்போம் "இரண்டாயிரம் ஆண்டில் எமது கிராமத்தில் கிறிஸ்து" என்னும் எண்ணக்கருவில் செயல்படுவோம். கிறிஸ்துவை அறிவிப்போம். அவருக்கு சாட்சியாக வாழ்வோம். உலகம் எல்லாம் கடவுளுக்கு மகிமையும் மானுடருக்குள் சமாதானம் பிரியம் உண்டாக பிரார்த்தனை செய்வோம். தொடர்ந்தும். நமக்காக மனுவுரு எடுத்த நமது ஆண்டவர் இயேசு பெருமானுடைய அருளும், வல்லமையும் ஒவ்வொரு குடும்பத்தோடும் மலரப்போகும் .இரண்டாயிரம் ஆண்டிலும் நிறைவுடன் தங்குவதாக.

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவின் பணியில்
யோண் . எஸ். செல்வம்
சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புனித தோமா ஆலயம் - கோணாவில்

## கிறிஸ்து அரசர் ஆலயம் - கிளிநொச்சி

## சாலோம் நகர் ஆலயம் - புதுமுறிப்பு

## 2000-2001

**என் ஜனத்தை**
**ஆற்றுங்கள் தேற்றுங்கள்**

ஏசாயா 40:1

**கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரிய சபையோரே நண்பர்களே.**

கிறிஸ்து பிறப்பின் மூவாயிரம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைத்துள்ளோம். மகிழ்வுடன் கிறிஸ்து பிறப்பை கொண்டாடுவோம். நாம் வாழ்கின்ற சூழ் நிலை தான் அர்த்தமுள்ள நத்தாரைக் கொண்டாட முடியும் ஏனெனில் உடைந்த கட்டிடங்கள்,சரிந்த மரங்கள்,சிதைந்த கிராமங்கள்முறிந்த குடும்பங்கள்,ஊனமுற்ற மானிடர்கள்,அவலம் நிறைந்த அகதி வாழ்க்கை, பாடுகள் நிறைந்த சிறைவாழ்க்கை, போர்விளிம்பில், பிள்ளைகள், கணவன் கொடிய, விலை ஏற்றத்தால், மக்கள் திண்டாட்டம் நீதி அமைதி வழங்காத வழிபாடுகள்,மதுபானம் விபச்சாரம், சுரண்டல் போன்ற கொடிய பாவப்பிடியில் மக்கள் இவ்விதமான சூழ்நிலையில்தான் கிறிஸ்து மக்களை ஆற்றுங்கள் தேற்றுங்கள் என்று வந்து உதித்தார். எம்மையும் கடந்த ஒரு வருடம் வழிநடத்தினார்.. உடைந்த சிதைந்த கிளிநொச்சி, சாலோம் நகர் திரும்பவும் இயேசுவை பாடத்தொடங்கி விட்டது நாமும் மகிழ்வோடு பிறப்பைக் கொண்டாடி புதிய ஆண்டைத் தரிசிப்போம். இறையருளைப் பெற்றுக் கொள்வோம். புதிய ஆண்டில் இறைவனோடு சேர்ந்து ஆன்மீகப் பயணத்தை தொடர்வோம். இம் மட்டும் வழி நடத்திய இம்மானுவேலன் தொடர்ந்தும் ஆற்றி தேற்றி வழிநடத்துவாராக யாவருக்கும் நத்தார் புதவருட நல் வாழ்த்துக்கள்.

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவின் பணியில்
யோண் . எஸ். செல்வம்
விமலாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14வது ஆண்டு நிறைவு விழா
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# புனித தோமா ஆலயம் - கோணாவில்
# 2001

**"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் உன் பேரில் எனக்குக் குறை உண்டு"**

அன்புடைய சபையோரே நண்பர்களே இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தென்னிந்திய திருச்சபை கர்த்தருடைய நாமத்திற்காக பணி ஆற்ற வேண்டும் என்று பேராயர் அம்பலவாணர் தரிசனம் கண்டார் அந்தத் தரிசனம் நிறைவு பெற்றது 1979ம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் கர்த்தருடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 22 வருடங்கள் பூர்த்தியாகின்றது முதலில் அருட்திரு ஜெபநேசன் ஆதீனத்தால் அனுப்பப்பட்டார். அவரைத் தொடர்ந்து அருட்திரு தியாகராஜா அருட்திரு மதன்ராஜா அருட்திரு நாவேந்திரன் அனுகூலன் ஆகிய திருப்பணியாளர்கள் ஆரம்பக் காலகட்டத்தில் துரிதமாக பணியாற்றியதன் விளைவாக கிளிநொச்சி, முல்லை வவுனியா என வன்னியின் மறைமாவட்டங்களை உள்ளடக்கி பணிகள் விரிவடைந்தன. முன்னாள் பேராயர்கள் குருக்கள் பக்தர்கள் கண்ட தரிசனம் இன்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, நுவரெலியா, என பல மாவட்டங்களிலும் இன்றைய பேராயர் ஜெபநேசன் குருக்கள் பக்தர்களால் நிறைவேறிக்கொண்டு இருக்கின்றது.

கோணாவில் திருச்சபை தன்னுடைய ஆண்டு நிறைவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றது. கடந்த ஆண்டும் இம்முறையும் பிள்ளைகளுக்கான விடுமுறை வேதாகம பயிற்சிப் பட்டறை வகுப்பை பத்து நாட்கள் நடத்தவுள்ளோம். இம்முறை திருவெளிப்பாடு நூலில் இருந்து பயிற்சி வகுப்புக்கள் நடை பெற உள்ளது நாம் வாழ்கின்ற சூழ்நிலை போரியல் வரலாற்றில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இந்த வரலாற்றில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இந்த வரலாற்றில் அன்று திருவெளிப்பாட்டில் கூறப்பட்ட ஆசியாவின் ஏழு சபைகளில் எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லாவோதிக்கேயா, ஆகிய சபைகளில் காணப்பட்ட மிகவும் கேவலமானதும் கொடியதுமான பலமும் பலவீனங்களும் அன்பு தளர்ச்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை அற்றதன்மை விக்கிரக வணக்கம் வேசித்தனம் மாறுபட்ட போதனைகள் வஞ்சனை நிறைந்த மனப்பாங்கு உயிர் இருந்தும் உயிரற்ற நிலை உணர்வு இருந்தும் உணர்வற்ற முறையில் வாழும் வாழ்க்கை முறைகள் இன்றும் சமூகத்துக்குள்ளும் திருச்சபைக்குள்ளும் இருந்து பலவீனப்படுத்திக் கொண்டு இருக்கின்றது. எனவே தான் கர்த்தர் நம்மை பார்த்து கேட்கிறார். நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று எனக்கு உன் பேரில் குறை உண்டு என்று வேதனையோடு கேட்கின்றார்.

அன்பானவர்களே! இக் கேள்விக்கு மறுதரம் கொடுக்கக் கூடியதாக எமது ஆத்மீக உறவையும் இறைவனோடு கொண்டுள்ள அன்பையும் கட்டி வளர்க்க வேண்டும் ஆகையால் சிறுவர்களுக்கு சிறுவயதிலேயே இறைவனோடு தொடர்புடைய ஆன்மீக உணர்வில் வளர்க்க பயிற்சி கொடுப்பது இன்றைய காலகட்டத்தின் மிக உச்சிதமான தேவை எனக்கருதி இவ்விடுமுறை வேதாகமப் பயிற்சி பட்டறையை எமது ஆலயத்தில் பத்து நாட்கள் நடத்துகின்றோம். இவ் ஆண்டு நிறைவில் கர்த்தர் செய்த நன்மைகளுக்கு ஸ்தோத்திரம் எம்மை வழிநடத்திய பேராயர், சககுருமார்கள், நண்பர்கள், திருச்சபை அன்பர்கள் அனைவருக்கும் நன்றி உரித்தாகட்டும் தென்இந்தியத் திருச்சபை இலங்கையில் சகல பகுதிகளிலும் வளரவும் கோணாவில் புனித தோமா ஆலய மக்கள் தோமையாரைப் போன்ற நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் உறுதிப்பட்டு பதின்நான்கு ஆண்டு அல்ல ஆயிரமாயிரம் வருடங்கள் சந்ததி சந்ததியாக வளர்த்து கலங்கரை விளக்காக ஒளி கொடுக்க வாழ்த்துகின்றோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அன்பும் அருளும் ஆசியும் ஒவ்வொரு குடும்பத்துடனும் நண்பர்களுடனும் சகல மக்களுடனும் நிறைவுடன் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்
யோண் . எஸ். செல்வம்
சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புனித தோமா ஆலயம் - கோணாவில்

## புனித யாக்கோபு ஆலயம் - சமாதானபுரம் அக்கராயன்

## 2001-2002

**தேவனுடை ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூப மெடுத்து மனுஷர் சாயலானர்.**

பிலிப்பியர் 2:6,7

கிறிஸ்துவுக்கு அன்பான சபை மக்களே சினேகிதர்களே நாம் இன்னும் ஒருவருடத்தில் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடத் தொடங்கி விட்டோம். புதிய ஆண்டைக் காண வாஞ்சையோடு இருக்கின்றோம்.கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் இயேசு கடவுளுக்கு சமமாக இருப்பதை ஒரு கொள்ளை அடித்த பொருளாக எண்ணாமல் வெறுமையாக்கி தாழ்மையாக கடவுளுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து மனுசர் சாயலாக மாட்டுக் குடிலில் பிறந்தார். நாமும் பாவ இயல்புக்கு இடம் கொடாமல் இயேசு பெருமானைப் போல் தாழ்மையோடு கீழ்ப்படிவோடு கொள்ளை, பெருமை, கிறிஸ்துவின் அழைப்பை சலுகையாக அல்ல கிருபையாக எண்ணி மற்றவர்களுடன் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து வாழ்வோமாக அப்பொழுதுதான் நாம் கொண்டாடும் நத்தார் விழா அர்த்தமுள்ளதாக இருக்கும் இயேசு பாலகன் ஏழை எளியோருக்கு துன்புறுவோருக்கு வாழ்வு அளிக்க வந்தார். மலரப்போகும் புத்தாண்டில் இயேசுநாதரின் அடிச்சுவடிகளை பின்பற்றி எமது ஆனமீகப்பயணத்தை தொடர்வோம் இவ் ஆண்டு முழுவதும் வழி காட்டிய பேராயர் குருமார் நண்பர்கள் சபையின் செயற்குழு உறுப்பினர்கள் சபையின் சகல நிகழ்விலும் ஒத்துழைப்பு நல்கிய சபை மக்களுக்கும் எமது நன்றிகள் மலரப்போகும் புத்தாண்டில் புது நோக்கோடு தூரதரிசனத்தோடு செயல்பட்டு ஜீவகிரீடத்தை பெறும் வரைக்கும் கர்த்தரின் நாமம் மகிமைப்படத்தக்கதாக எமது ஆன்மீக ஓட்டத்தை ஓடுவோமாக யாவருடனும் இயேசுகிறிஸ்துவின் நல்லாசிகள் என்றும் நிறைவுடன் இருப்பதாக நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

நன்றி

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவின் பணியில்
ஆர்யோண் . எஸ். செல்வம்
விமலாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புனித தோமா ஆலயம் - கோணாவில்

## 2002-2003

### மனத்தாழ்மை

அரசியலிலும், சமூகத்திலும், திருச்சபையிலும் குடும்பத்திலும் தொழில் ஸ்தாபனத்திலும், கல்லூரிகளிலும் கூட மனத்தாழ்மையோடு ஒருவரையொருவர் கனம் பண்ணத்தவறி விடுகிறோம். மனமேட்டிமை நான் என்ற பெருமை எனக்கு எல்லாம் தெரியும் என்ற நினைவு இவைகளினால் பிளவுகளும் பிரிவுகளும் கூடிக்கொண்டு போகின்றது. ஆண்டவர் இயேசு தாழ்மையின் உருவாய் வந்து மாட்டுக்குடிலில் அவதரித்த இயேசு முன்மாதிரியைக் காட்டிச் சென்றுள்ளார். கிறிஸ்து பிறப்பு விழாவில் மகிழும் நாம் தாழ்மையின் சின்னங்களாக அடுத்தவரையும் மதித்து வாழ்வோமாக.

2003ம் ஆண்டுக்குள் கிறிஸ்து பிறப்பைஆராதித்து கொண்டாடி மகிழ்ந்து செல்லும் எம்மிடம் மாட்டுக்குடிலில் வந்து கொல்கொதா மேட்டில் பாரச்சிலுவையில் மரித்து கல்லறையிலிருந்து எழுந்த எமது ஆண்டவரும் எம்மிடம் கேட்கிறார். நன்மை செய்து நியாயம் செய்து இரக்கத்தை சிநேகித்து தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையோடு ஆன்மீக யாத்திரையை செய்ய ஆன்மீக வாழ்வை வாழ அழைக்கிறார்.அழைப்புக்கு செவிசாய்த்து புதிய ஆண்டில் அவருக்கு சொந்த மக்களாக சீடர்களாக பிள்ளைகளாக, வாழ்வோமாக.

2002ஆம் ஆண்டு எமது சபையின் 15-ஆவது ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பாக 2002 – 08-11,12,13,14,15 ஆகிய நாட்களில் நடைபெற்றது இதில் பல குருமார்களும் பேராயர் எஸ். ஜெபநேசனும் கலந்து கொண்டார்கள். புனித தோமா தினம் 06-10-2002 அன்று சிறப்பான முறையில் வழிபாடும் நற்செய்தி கூட்டமும் நடத்தப்பட்டது. பலகுருமாரும் கலந்து சிறப்பித்தார்கள் இவ் ஆண்டு முழுவதும் அங்கத்தவர்கள் எமது நிகழ்வுகளில் கலந்து உற்சாகப்படுத்திய குருமார் நண்பர்கள் யாவருக்கும் நன்றிகள் இவ் ஆண்டு முழுவதும் தேவபணியை செய்து முடிக்க எல்லா நிலைபதங்களிலும் வேலைகளிலும் எம்மையும் திருச்சபைகளையும் தாங்கி வழிநடத்திய நமது ஆண்டவர் இயேசுவுக்கு எல்லா மகிமையும் புகழும் நன்றியும் செலுத்துகின்றேன்.

நன்றி

**உங்கள் யாவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவின் பணியில்
ஆர்யோண் . எஸ். செல்வம்
யோண் செல்வம் விமலாதேவி
யோண் செல்வம் ஏஞ்சலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## புங்குடுதீவுத்திருச்பை

## 2004-2005

அன்புடைய திருச்சபை மக்களே! நண்பர்களே நாம் ஆண்டவரின் வருகை, பிறப்பு புதுவருட நிகழ்வுகளுக்காகவும் இறைவனின் அற்புதமான வருகைக்காகவும் ஆயத்தமாகத் தொடங்கி விட்டோம். எமது புங்குடுதீவு ஆலயம் பல வருடங்களாக போர் சூழ்நிலை காரணமாக பழுதடைந்து மூடப்பட்டு இருந்தது கடந்த 2003ம் ஆண்டு புங்குடுதீவு மண்ணின் மைந்தனும் எமது ஆதீனத்தின் மூத்த குருவாகவும் 50 ஆண்டுகள் குருத்துவ பணியை ஆற்றிய அருட்திரு டீ.அம்பலவாணர் போதகரும் அவரின் புதல்வரும் அரும்பாடு பட்டு தங்களது தாய் சபையை புதுப்பொலிவுடன் காட்சியளிக்க செய்துள்ளார்கள் அவர்களையும் அவர்களுகளுக்கு பக்கபலமாக இருந்த அவரின் சகோதரர்கள் புங்குடுதீவுத்திருச்சபையின் குடும்பங்கள்,நண்பர்களுக்கும் எமது ஆதீனத்திற்கும் நாம் மகிழ்ச்சியோடு நன்றி கூறுகின்றோம். அவர்களின் முயற்சியினால் பகல் பராமரிப்பு நிலையம் நடாத்தப்பட்டு வருகிறது அதில் 37 சிறார்கள் தங்கள் பயிற்சியைப் பெறுகிறார்கள். நான்கு ஆசிரியர்களும் ஒரு சமையலாளரும் இருக்கிறார்கள். அத்துடன் திருமதி தயாளினி தியாகராஜா அவர்களின் முயற்சியினால் தையல் நிலையம் நடாத்தப்பட்டு வருகிறது அவர்களுக்கு எமது நன்றிகள் இவ்விதமாக கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எமது ஆலயப்பணிகளுக்கு பொறுப்பாக இருக்கும் திரு நிமால் அம்பலவாணர் குடும்பத்தினர் அவர்களும் மேற்பார்வை செய்து வருகிறார்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

நெகேமியா சொன்னது போல் "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" இந்த அழைப்பு எமக்கும் தரப்பட்டுள்ளது உடைந்த எமது ஆலயம் எமது பட்டணம் எமது இல்லங்களை மீளவும் கட்டும் பணியை எமக்கு கர்த்தர் தந்துள்ளார். இறைவனின் வருகைக்கு காத்திருக்கும் மக்களாகிய நாம் அநேகரை இறைவனிடம் கொண்டு வரும் கருவிகளாக செயற்படுவோமாக. எம்மை ஆதரித்து வழி நடத்தும் கர்த்தருக்கே எல்லாம் உண்டாவதாக.திருச்சபை மக்களே நண்பர்களே உங்களது ஒத்தாசையையும் கொடைகளையும் வழங்கி எமது பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி உற்சாகப்படுத்துங்கள். யாவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**"உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும்**
**பூமியிலே சமாதானமும்**
**மனிதர் மேல் விருப்பமும் உண்டாவதாக**
**என்று சொல்லித்தேவனைத் துதித்தார்கள்"**

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. ஆர் யோண் செல்வம்
சேகரக்குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு
## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
## நெடுந்தீவு ஆலயம்
## 2005-2006

**இதோ அநேகருடைய இருதய சிந்தனைகள்**
**வெளிப்படத்தக்கதாக இஸ்ரவேலில் அநேகர்**
**விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும்**
**அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.**

லூக்கா 2:34

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை மக்களே, நண்பர்களே திருச்சபையின் தலைவர்களே உங்கள் யாவரையும் நத்தார்,புதுவருட மடலுக்கூடாக சந்திப்பதில் மகிழ்வு அடைகிறோம். கிறிஸ்துவின் உன்னதமான வருகையில் அவரை சந்திக்க ஆயத்தப்படுவோம். இவ் ஆண்டு முழுமையும் எம்மையும் எம் பணிகளையும் திருச்சபைகளையும் ஆசீர்வதித்து வழிநடத்திய இறைவனுக்கும் ஸ்தோத்திரம் உண்டாவதாக.

தூய்மையான உள்ளத்தோடும் நீதியின் செயல்களோடும் பரிசுத்த நடத்தையுடனும் நீதியோடும் நியாயத்தோடும் தீர்ப்பு அழிக்கவரும் எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

தென்னிந்தியத் திருச்சபை யாழ் பேராயத்தின் 2005ம் ஆண்டு இருண்ட ஆண்டாக ஒரு ஆயர் இல்லாமல் ஆதீனம் பல இடர்பாடுகளில் நடந்து வருவதை நாம் அறிவோம். இவ்வேளையில் திருமறையின் வரலாற்றையும் திருச்சபையின் தலைவர்கள் அறிந்து கொள்வது நன்று மோசேக்கு கர்த்தர் மெரிபா காதேசு ஆகிய இடங்களில் நடந்து கொண்ட நம்பிக்கை ஆற்ற வாழ்வால் இன்பா கனானுக்குள் போகவிடாததையும் (இணைச்சட்டம் 32:51-52) சவுலை இஸரவேலின் அரசனாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தி கொடுத்த தண்டனையும் (1சாமுவேல்15:35) தாவீது மன்னனுக்கு கர்த்தர் கொடுத்த தண்டனைத் தீர்ப்பையும் (2சாமவேல் 7:1-29) ஆகாப் மன்னனுக்கு மலக்கியா தீர்க்கதரிசி நாய்கள் உன் இரத்தத்தை நமக்கும் என்று கூறியதையும் யேசபேலுக்கு நாய்கள் உன் ரத்தத்தை தின்னும் என்று உரைத்தத்தையும் (1அரசர்கள் 22:38,II அரசர்கள்9:37)

ஒருவன் தேவனுடைய ஆலயத்தை அழித்தால் (கொடுத்தால்) தேவன் அவரை அழிப்பார் (கொடுப்பார்)
(1கொரிந்தியர் 3:17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனனியா சப்பிராலுக்கு (அப்போஸ்தலர் 5:1-14) நடந்ததையும் நினைவு கூர்ந்து அநீதியின் வழியிலும் நீதிமன்றத்திற்கும் செலவிடும் பணங்கள் பல திருச்சபைகளை கட்டி எழுப்புவதற்கும் உதவும் என்பதை உணர்ந்து ஆண்டவரின் திருப்பணியை தாழ்மையுடனும் நீதி நேர்மையுடனும் செய்ய ஆண்டவர் அழைத்துள்ளார். என்பதை காத்திரமாய் உணர்ந்து நடந்து கொள்வோம்.

26-12-2004 ஆசியாவை உலுக்கிய சுனாமி போர் அலையின் கோரத்தாண்டவத்தின் ஒரு வருட நிறைவில் நிற்கும் நாம் சுனாமியின்போது ஏற்பட்ட அழிவு இழப்பு துன்பத்தை விட சுனாமிக்குப் பின்னால் சுனாமியின் பெயரால் நடைபெற்று வரும் சம்பவங்கள் அரசியலிலும் சமூகத்திலும், திருச்சபையிலும் பலகசப்பான அனுபவங்களை உருவாக்கியுள்ளது.

முன்னால் கத்தோலிக்கத் திருச்சபையின் உலகத் தலைவர் 2ம் யோன் போல் தன்னைத் துவக்கால் சுட்டவரையே மன்னித்து ஏற்றுக் கொண்டது போல் இன்று நாம் ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ள முடியாத கடின உள்ளத்தோடு இருக்கும் தலைவர்களாக மக்களாக வாழ்கிறோம்.

இவ் அனுபவங்களோடு சிமியோன் இயேசு பாலகனை கைகளில் ஏந்தி அநேகருடைய இருதய சிந்தை வெளிப்படுவதற்கும் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் அடையாளமாக வந்த இயேசுவை நாம் முழு உள்ளத்தோடு பின்பற்றி வாழ்வோம்.

இவ்வருடம் எமது சபையின் 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடி ஒரு மலரை வெளியிட்டோம். அதற்கு பல வழிகளிலும் எமக்கு நிதி உதவி அளித்த வெளிநாட்டிலுள்ள திருச்சபை அன்பர்கள் நண்பர்களுக்கும் உதவி புரிந்த திருச்சபை வாலிபர்கள் சபையினருக்கும் என் நன்றிகள் எமது சபைப் பணிகளும் பகல் பராமரிப்பு நிலையப் பணிகள் கணினிப் பயிற்சி வகுப்புக்கள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகிறது இவ்வருடம் முழுவதும் எம் பணிகள் வளர உதவிபுரிந்த சபையின் செயலாளர், பொருளாளா, உறுப்பினர்கள், சபை மக்கள் பகற்பராமரிப்பு நிலைய ஆசிரியர்கள், உதவியாளர்கள், பெற்றோர்கள் நண்பர்களுக்கும் எம் ஆண்டவரின் இறையரசுக்கு உரிய மக்களாக வாழ்வோம். அவரின் இறையரசின் பணிக்காக உழைப்போம் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் மத்தியஸ்தராக வந்த இயேசுவை போற்றிப் பணிந்து புதிய ஆண்டை தரிசித்து அவரின் உன்னத சாட்சிகளாக வாழ்வோமாக யாவருக்கும் நத்தார், புதுவருட நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. இயேசு கிறிஸ்துவின் அன்பும் ஆசியும் யாவருடனும் என்றும் இருப்பதாக!

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. ஆர் யோண் செல்வம்
யோண் செல்வம் விமலாதேவி
யோண் செல்வம் ஏஞ்சலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## நெடுந்தீவு ஆலயம்

## 2006–2007

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை மக்களே நண்பர்களே யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.நாம் மறுபடியும் நமது ஆண்டவரின் திருவருகையைக் குறித்து விழிப்படையவும் அவருடைய பிறப்பை கொண்டாடவும் புதிய ஆண்டைத் தரிசிக்கவும் ஆயத்தமாவோமாக.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் துன்பங்களும், மரணங்களும், அநீதிகளும், அநியாயச் செயல்களும் மலிந்து காணப்படுகிறது. இவ்விதமான ஒரு சூழ்நிலையில் தான் இயேசுவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெத்தலையில் மாட்டுக்குடிலில் பிறந்து பாவிகளுக்கு மீட்பும், தீமை செய்வோரை கண்டித்து திருத்தி வந்த போது சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள். ஆனால் அவர் சாவின் கூரை ஒடித்து உயிர்த்தெழுந்தார். இன்னும் ஏக்கங்களுடன் வாழ்பவர்கள் நீதி நியாயம் பரிசுத்தத்துடன் வாழ்பவர்களையும் வழிநடத்துபவராகவும் அநீதியையும் அக்கிரமங்களை செய்பவர்களையும் உண்மை நீதி பரிசுத்தம் அமைதியின் வாழ்வுக்கும் அமைப்புக்களுக்கும் திருச்சபைகள் குடும்பங்களுக்கிடையிலும் பங்கம் விளைவிக்கும் யாவரையும் தண்டித்து நீதி வழங்குபவராகவும் நமது ஆண்டவர் வருவார். அவரவர் செய்யும் பலாபலன்படி தீர்ப்பும் பலனும் அவரிடம் உள்ளது.

**"விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்துக்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்"**

**வெளி 22:14**

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சித்தப்படி வாழ்ந்து அவருடைய நோக்கத்தை நிறைவேற்றும் சீடர்களாக இருப்போமானால், பாக்கியம் பெற்றவர்கள். ஆனால் இதற்கு மாறாக வாழும் யாவரும் தண்டனை தீர்ப்பு பெறுபவர்கள் கடவுளின் அரசியல் இருந்து புறம்பே தள்ளப்படுபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் விசுவாசித்திருக்குக்கும் ஆண்டவர் யார் என்று அறிந்து கொள்ளாமல் காலம் பதிவு வைத்துள்ளது. ஒரு ஆலயத்தில், அன்னதானம் கொடுப்பது இன்னொரு ஆலயத்தில், அன்பளிப்பும் நன்கொடையும் உதவியும் இன்னொரு ஸ்தாபனத்திற்கும் கோயிலுக்கும் கொடுத்து பாவத்துக்கு பரிகாரம் தேடி எமது ஆத்மீக வாழ்வை ஈடு ஏற்றம் செய்யப்பார்க்கின்றோம். இதை கடவுள் விரும்பவில்லை உண்மையான பரிசுத்தமுள்ள முழு மனமாற்றத்துடன் எமக்காக மாட்டுக் குடிலில் வந்த நமது ஆண்டவரை தரிசிப்போம்.

**"நாய்களும் சூனியக்காரரும் விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்காரரும் பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்"**

வெளி 22:15

கிறிஸ்து பிறப்பை கொண்டாட இருக்கும் நமக்கு கடவுள் தரும் செய்தி நாம் பரிசுத்தமும்,நீதியும் உள்ள ஆன்மீக வாழ்வை வாழவே கடவுள் நம்மை அழைத்துள்ளார். என்பதை திரும்பவும் நினைவுபடுத்திக் கொள்வோம். மாட்டுக் குடிலில் பிறந்த ஆண்டவர் எம்மிடம் உள்ள அறிவு ஆற்றல் மொழிதிறன் பணபலன் சரீர பலம், ஆளணிப்பலம், பதவி பட்டம், தேற்றம் பூர்வீகமான சந்ததித் தொடர்பு என்பவற்றை எதிர்பார்க்கவில்லை.

நாம் நீதியும், பரிசுத்தமும் உள்ள தூய்மையான உள்ளத்துடன் நன்மை செய்பவர்களாக வாழ்ந்து இறைவனுடைய மகா சிங்காசனத்தின் முன் பாக்கியமுள்ளவர்களாக நிற்க வேண்டும் எனவே விரும்புகிறார். அவ்வாழ்வை நோக்கிய எமது ஆத்மீக பயணத்தை மலர்ந்திடும் புதிய ஆண்டிலும் தொடர்வோம். வாருங்கள்.

இவ்வருடம் முழுமையும் எமது பணிகளையும் திருச்சபை மக்களையும் வழிநடத்திய ஆண்டவரை நன்றியுடன் போற்றி துதித்திடுவோம். கடந்த இரு ஆண்டுகளாக இருண்ட யுகத்தில் பயணிக்கும் எமது பேராயத்தையும் பேராயத்தின் மக்கள்,குருமார் பணியாளர்கள் எல்லோரையும் வழிநடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் இறையருளுக்காக துதித்திடுவோம். எமது திருச்சபை மக்கள் தூர இடங்களிலும் தூர தேசங்களிலும் இருந்து எமது பணிகளில் எம்மை தாங்கிய யாவரையும் நன்றியுடன் பாராட்டி நிற்கின்றேன். எமது பகற்பராமரிப்பு நிலைய ஆசிரியர்கள். பணியாளர்கள். பெற்றோர், நலன்விரும்பிகள் யாவருக்கும் நன்றி கூறி நிற்கின்றோம். 25வது ஆண்டு நிறைவில் பயணிக்கும் எமது நிலையத்தை கடவுள் ஆசீர்வதித்து அதன் பணிகள் பலுகிப் பெருகப் பண்ணினார் திருச்சபையில் சிலர் தங்களின் சுயலாபங்களுக்காக திருச்சபையையும் திருச்சபையின் குருவையும் பணிகளையும் சந்திதோறும் பொது இடங்களில் எள்ளிநகைத்து நையாண்டி செய்த போதும் பொருட்படுத்தாமல் நாம் நான்கு ஆண்டுகள் செய்யும் பணிகளை ஏற்று நமக்கு உதவி செய்து அன்பும், அரவணைப்பும் தந்த நமது திருச்சபை மக்கள் வாலிபர்கள் எமது பகற்பராமரிப்பு நிலைய சமூகத்தினர் பல வழிகளில் உதவி புரிந்த எமது அரச அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், கல்விசார் சமூகத்தினர் கத்தோலிக்க மக்கள், குருமார், அருட்சகோதரிகள் நெடுந்தீவு மக்கள் யாவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன் நமது ஆண்டவரின் பிறப்பை கொண்டாடி மகிழ்ச்சியுடன் சமாதானமும், நன்மையும் ஆசீர்வாதமும் உள்ள புதிய ஆண்டைத் தரிசிப்போம். வாருங்கள், வழிபாடுகள், ஆராதனைகள், விழாக்களில் கலந்து கடவுளின் மைந்தன் இயேசுவை மகிமைப்படுத்துவோம்.

**கிறிஸ்துவின் அன்பும் அருளும், யாவருடனும்**
**நிறைவாக இருப்பதாக**

**"இதோ இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும் ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்" அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.**

ஏசாயா 60:2

கிறிஸ்துவின் பணியில்

அருட்திரு ஆர் யோண் செல்வம்
விமலாதேவி யோண் செல்வம்
ஏஞ்சலின் யோண் செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2007–2008

**கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்து அவர்கள் மிகவும் பயந்தார்கள்.**

லூக்காஸ் 2:9

***கிறிஸ்துவுக்குள் அன்பான விசுவாசிகளே நண்பர்களே!***

நாம் எமது வாழ்வில் உயிர் உள்ள எமது ஆண்டவரின் பிறப்பையும் அவருடைய திருவருகை காலத்துக்குள்ளும் பிரவேசித்துள்ளோம். புதிய ஆண்டை தரிசிக்கவும் ஆயத்தமாகும் இவ்வேளை நமது கிறிஸ்தவ வாழ்வின் ஆன்மீக பயணத்தை ஒரு கணம் ஆராய்ந்து அறிந்து அவருடைய சித்தத்திற்கு ஏற்றவாறு எமது பயணத்தை தொடர எம்மை முழுமையாக அர்ப்பணம் செய்வோம்.

“அவருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்து அவர்கள் மிகவும் பயந்தார்கள். என திருவார்த்தை கூறுகிறது இன்று நாம் அவருடைய மகிமையை இழந்து அவருக்கு பயப்படும் பயம் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அதனால் தான் இன்று கொலைகளும், போட்டிகளும் அக்கிரமமும், அநீதிகளும், பில்லிசூனியங்களும், தாண்டவம் ஆடி கொண்டு இருக்கின்றது. நீதி எது? அநீதி எது? என்றும் பரிசுத்தம் எது? அசுத்தம் எதுவென்றும் உண்மை எது? அவநம்பிக்கையின்மை எதுவென்றும் விசுவாசம் எது?அவ்விசுவாசம் எதுவென்றும் பிரித்தும் அறிய முடியாத காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் நாம் அவருடைய மகிமையும் அவருக்குப் பயப்படும் தன்மையும் கொண்டு வாழும் போது இந்த அணிகலன்கள் எமது வாழ்வில் தென்படும் என்பதை கிறிஸ்துவின் வருகை தெளிவாக உணர்த்துகின்றது. உரோமர் 8:22 இன் படி “சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுத்துகின்றது. உரோமர் 3:23” எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகும்.

மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் நாமும், நம்முடைய வாழ்வியலில் பங்குள்ளயாவும் கடவுளின் மகிமையை இழந்து கடவுளுக்குப் பயப்படும் பயமுமின்றி வாழும் தன்மை சுட்டிக்காட்டுகிறது. II கொரிந்தியர் 7:10 இல் பின்வருமாறு கூறுகிறது. “தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்பக்கு ஏதுவான மனந்திருப்புதலை உண்டாக்குகிறது எனவே நாம் நமது வாழ்வில் துக்கப்பட்டு மனந்திரும்பி கடவுளுக்குப் பயந்து அவருடைய மகிமைக்கு ஏற்ப வாழுதல் இறையரசின் வாழ்வில் நமக்கும் பங்கு உண்டு எனவே” உரோமர் 15:17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது."**

அவருடைய மகிமையில் சந்தோஷத்தில் பங்குகொள்ளக் கூடியவர்கள் நாம் நமது வாழ்வை துக்கப்பட்டு மனந்திரும்பி நீதியும், அமைதியும் பரிசுத்தமுள்ள அவருடைய இன்ப சமூகத்தில் உள்ள சந்தோஷத்தில் பங்கு கொள்ளக் கூடிய வாழ்வை வாழ்ந்து எமது ஆன்மீக ஓட்டத்தை ஓடுவோமாக.

அன்பான திருச்சபை மக்களே நாம் இவ்வருடம் முழுமையும் கர்த்தரின் பணியை செய்ய கிருபையளித்த கர்த்தருக்கு நன்றி கூறுவதோடு அவரை மகிமைப்படுத்தி ஒத்துழைப்பு நல்கிய சபை மக்கள் திருச்சபை செயற்குழு உறுப்பினர்கள், நிலைய ஆசிரியர்கள், பணியாளர்கள் பெற்றோர்கள்,நண்பர்கள், யாவருக்கும் நன்றிகூறிக்கொள்கிறேன். இவ்வருடம் எமது பேராயர் பேரருள் திரு.கலாநிதி டானியேல் செல்வரத்தினம் தியாகராஜா அவர்களின் வரவேற்பு நிகழ்விலும் எமது நிலையங்களின் ஆண்டு விழாவில் பங்கு பற்றி நிகழ்ச்சிகள் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கும் நன்றிகள்.

எமது திருச்சபையின் பணிகளில் தூர இடங்களிலும் வெளிநாடுகளிலும் இருந்து செபித்து உதவி நல்கும் யாவருக்கும் விசேடமாக லண்டனில் உள்ள திரு.திருமதி *Dr. R.* சந்திரபாலா குடும்பத்தினருக்கும் எமது நன்றிகள். சபையின் செயலாளர்.கு.ஜனேந்திரன் பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் யாவருக்கும் நன்றிகள் பழைய மாணவர் ஒன்றியத் தலைவர் திரு.கிருபாகரன் அவர்களுக்கும் எம் நன்றிகள் ஆதீனத்தின் பேராயர் செயலாளர். பொருளாளர் யாவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கின்றேன். நாம் ஆண்டவரின் வருகைக்கு எம்மை ஆயத்தமாக்கி அவரின் பிறப்பின் மகிமையை கொண்டாடி புதிய ஆண்டிலும் மகிமையும் அவருக்குப் பயப்படும் பக்தியும் உடையவர்களாக ஆன்மீக பயணத்தை தொடர்வோமாக. யாவருடனும் நமது ஆண்டவரின் கிருபையும், பெலனும், ஆறுதலும், அமைதியும் ஆசீர்வாதமும் இருப்பதாக.

***யாவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.***

**"ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன், அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்."**

அபகூக் 3:19

கிறிஸ்துவின் பணியில்

அருட்திரு ஆர் யோண் செல்வம்
விமலாதேவி யோண் செல்வம்
ஏஞ்சலின் யோண் செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு

## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## நெடுந்தீவு ஆலயம்

## 2008–2009

**"இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்."**

(லூக்கா:- 21:36)

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை மக்களே; நண்பர்களே; நாம் இயேசுக்கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்து எமது வாழ்வை ஆயத்தப்படுத்தவும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை மகிழ்வுடன் கொண்டாடவும் நமது ஆண்டவர் தரும் புதிய ஆண்டை தரிசிக்கவும் ஆயத்தமாகும் இந்த நாட்களில் நாம் வாழ்கின்ற இந்த பூமி பந்தத்தில் பாவம் பெருகி, கொலை, கொள்ளை, விபத்து, இயற்கைஅழிவு, பஞ்சம், வறுமை என ஒரு புறம் இருக்க நீதி, நியாயம், பரிசுத்தம், உண்மை, அன்பு, நிறைந்த வாழ்வு எல்லாம் செத்து மடிந்து கொண்டு இருக்கிற காலம். இறை அன்பு நீதியைப் போதிக்கின்ற ஆத்மீக வாழ்வு அற்றுப் போகின்ற காலம் இவைகளின் மத்தியல் அவருடைய பிள்ளைகளாக நாம் இவ்விதமான அநீதி நிறைந்த பூமி பந்தத்தில் நீடிய பொறுமையுடன் எல்லாவற்றுக்கும் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் செபம் பண்ணி விழ்த்திருந்து எமது ஆத்மிக வாழ்வை காத்துக்கொள்வோம்.

**"இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது."**

(திருவெளிப்பாடு 22:12)

ஆண்டவரின் வருகை சமீபமடைந்து கொண்டு வருகிறது. நீதியும் நியாயத்தீர்ப்பும் அவர் அளிக்கும் பலனும் வந்து கொண்டு இருக்கிறது. அநீதிகள், அக்கிரமங்களுக்கு, துன்பதுயரங்கள், துன்பியல் நிறைந்த சிலுவை வாழ்வுக்கும், சுரண்டல்கள், கொடுமைகள், கொள்ளைகள், ஒடுக்கப்படுதல், நீதி, நியாயம், பரிசுத்தம், உண்மையற்ற வாழ்வுக்கு எல்லாம் முடிவு கட்டும் நாள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. இயேசு வந்து யாவருக்கும் தீர்ப்பு அளித்து பரிசுத்தத்துடனும், நீதி, நேர்மையுடன் வாழ்பவருக்கு அளிக்கும் வாடாததும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமையும், கிரீடமும் நிறைந்த வாழ்வைப் அளிப்பார். அந்த வாழ்வை பெற எமது ஆத்மீக ஓட்டத்தை நீடிய பொறுமையுடன் ஓடுவோம். என்றும் இல்லாதவாறு எமது தேசமும் திருச்சபையும் சமூகமும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இடம் பெயர்வுகளும் சொத்து அழிவுகளும் மரணங்கள், பிளவுகள், பிரிவுகள். குடும்பப் பிணக்குகள், வேலையின்மை, வறுமை, தனிமை என எமது வாழ்வில் அலை மோதிக் கொண்டு இருக்கும் இக்காலத்தில் நாம் நம்பிக்கையற்றுப் போகாமல்

**"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்"**

(ஏசாயா 40:1)

என்ற ஆண்டரின் பணியை நம்பிக்கையோடு செய்து எமது கிறிஸ்தவ வாழ்வின் புனிதத்தை காத்து நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாகுவோம் வாருங்கள் மகிழ்வுடன் கிறிஸ்து பிறப்பை கொண்டாடி ஆண்டவர் தரும் புதிய ஆண்டில் அவருக்கு ஏற்புடையவர்களாக வாழ்வோம் வாருங்கள்.

எனது அன்பான திருச்சபை மக்களே; நண்பர்களே; வெளிநாடுகளில் உள்ள திருச்சபை மக்களே; அன்பர்களே; பகற்பராமரிப்பு நிலைய பெற்றோர், சிறாகள், ஆசிரியர்கள், உதவியாளர்கள், பழைய மாணவர்களே உங்கள் யாவருக்கும் எமது இனிய வாழ்த்துக்கள், தாங்கள் இத்திருச்சபை மீதும் பகற்பராமரிப்பு நிலையத்தின் மீதும் காட்டிவரும் அன்புக்கும் ஒத்துழைப்புக்கும் எமது நன்றிகள், மலரப் போகும் புதிய ஆண்டில் எமது ஆலயத்தை புனரமைத்து கட்டவுள்ளோம். தங்களாலான உதவிகளை வழங்கி எமக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். எமது ஒளிவிழா நிகழ்வுகளிலும் நத்தார் புதுவருட வழிபாடுகளிலும் கலந்து சிறப்பித்து இறை ஆசீர்வாதத்தைப் பெற அன்புடன் அழைக்கின்றோம். யாவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாவருடனும் கிறிஸ்து இயேசுவின் அன்பும் அடைக்கலமும் ஆசீரும் நிறைவாக இருப்பதாக!

**"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்! உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது."**

(சங்கீதம் 65:11)

**"கர்த்தாவே வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்"**

(அபகூக் 3:2)

**கிறிஸ்துவின் பணியில்**
**அருட்திரு. R. யோண் செல்வம்**
**லீலாதேவி யோண் செல்வம்**
**ஏஞ்சலின் யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் புதுவருட நிகழ்வு
## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
## நெடுந்தீவு ஆலயம்
## 2009–2010

**இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்.**

(எபிரேயர் 2::4)

இயேசுகிறிஸ்துவுக்குள் என் அன்பான மக்களே, நண்பர்களே!

நாம் இயேசு கிறிஸ்துவின் வருகை, பிறப்பு புதுவருட நிகழ்வுக்காக ஆயத்தம் செய்யும் இந்நாட்களில் பாவம் அநீதி நிறைந்த உலகத்திற்கு தனது மைந்தன் இயேசுகிறிஸ்துவுக்கூடாக நமக்கு கொண்டு வந்த மீட்பு, விடுதலை, இரட்சிப்பை குறித்து கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ள முடியாது. கிறிஸ்துவின் வருகையும் பிறப்பும் மனமாற்றத்திற்கும் மீட்புக்கும் வழிகாட்டி நிற்கின்றான், பாவம் அகற்றி இரட்சிப்பும், இருள் அகற்றி ஒளியும், அநீதி அகற்றி நீதியும், தூய்மைகேடு அகற்றி பரிசுத்தமும், அங்கலாய்ப்பு அகற்றி அமைதியும், சீர்குலைவுகள் அகற்றி புதுப்பித்தலும் பிரிவு அகற்றி ஒப்புரவும் இழப்பில் நிறைவும் உயிர்ப்பும் அளித்து வழிநடத்தும் ஆண்டவனிடம் இன்றைய உலகின் மக்கள் அவருடைய விசுவாசிகள், ஊழியக்காரர்கள் எல்லோருமே மனம் திரும்பி மீட்பு பெறாவிட்டால் தண்டனைக்கு தப்பித்து கொள்ள முடியாது என்பதை திருமறை மறுபடியும் எச்சரிக்கை விடுகின்றது.

**நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் உன் பெயரில் எனக்கு குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனம் திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்து நின்று நீக்கி விடுவேன்.**

**(திருவெளிப்பாடு 2:4-5)**

எனவே எமது ஆண்டவர் சீக்கிரம் மீளவும் வரப்போகிறார். நாம் யாவரும் மனம்திரும்பி அவரை அன்பு செய்யவும் அவருடைய சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கவும் அவரை உண்மையாக சேவித்து விசுவாசிக்கவும் அழைக்கப்படுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்று உலகம் அதில் உள்ளவர்கள் மனந்திரும்ப முடியாதவர்களாக, கொலை, கொள்ளை போட்டி, பொறாமை, எரிச்சல், வேசித்தனம் மதுபானம் அடக்குமுறைகள், வல்லமை உள்ளவன், வல்லமை அற்ற மக்களை நசுக்குதல் பில்லிசூனியங்கள், விக்கிரகவழிபாடுகள் போலியான வாழ்க்கை முறைகளும் மாயை நிறைந்த வாழ்வும் இன்று மனிதனை ஆட்கொண்டு விட்டது. உண்மை, நீதி, பரிசுத்தம், அன்பை போதிக்க வேண்டியவர்கள் கூட இழிநிலமையுடன் வாழும் இன்றைய உலகில் மனம் திரும்புதல் அவசியமாகின்றது. மனந்திரும்பி நீதியும் நியாயமும் தீர்க்க இயேசுகிறிஸ்து உலகிற்கு வருகிறார். மனம் திரும்பி உங்கள் கிரிகைகளில் உண்மையுள்ளவர்களாக இருங்கள்.

***நீ மரண பரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத்தருவேன்.***
(வெளி 2:10)

அன்பான மக்களே!

இவ் ஆண்டின் முற்பகுதியில் வன்னி நிலத்தில் நடைபெற்ற மனித போர் அவலமும், அவலச்சாவுகளும், அவலப் பிரிவுகளும் இடம்பெயர்வுகளும் மனமுறிவுகளும் இழப்புகளும், வீடு, சொத்துக்கள், உடமைகளையெல்லாம் இழந்து இன்று லட்சக்கணக்கான மக்கள் நிம்மதி இழந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். திருச்சபையில் எழுந்த பிணக்குகளால் எமது திருச்சபையின் பல குடும்பங்கள் செய்வதறியாது வேறு சபைகளுக்கு செல்லும் நிலமையும் இடம்பெயர்ந்த குடும்பங்கள், கவனிப்பற்றிருப்பதும் மனவேதனைக்கு உரியதாகும்.

இன்றைய உலகின் போக்கும் ஆண்டவனின் அடியார்களின் போக்கும் நிலையற்ற உலகின் போக்கும் நிலையற்ற உலகில் நிலைத்து விட வேண்டும் என்ற நிலைப்பாங்கு மாறிக் கொண்டு உள்ள இக்கால கட்டத்தில் திருமறையில் காண்பது போல் மோசே, ஆரோன், காலேப் போன்றவர்களும் எலியா எரேமியா, எசேக்கியேல் ஆமோஸ் போன்ற வல்லமையுள்ள தலைவர்களும், குருமாரும் இன்றைய மனித குலத்துக்கும், திருச்சபைக்கும் தேவை அப்பொழுதுதான் மனமாற்றமும், நீதியும் உண்மையும், பரிசுத்தம், அவலங்கள் அற்ற வாழ்வையும் காணமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். நம்மை பீறினார் அவரெ நம்மைக் குணமாக்குவார். நம் மை அடித்தார். அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். (ஓசியா 6:1)**

கிறிஸ்துவின் பிறப்பு புதுவருடம், கிறிஸ்துவின் வருகையை நினைத்து அவரிடம் செல்வோம் அவர் பாதத்தில் அமர்ந்து எம்மை ஆயத்தம் செய்வோம், தியானிப்போம். மனமாற்றமடைந்து நியாயத்தீர்ப்பிற்கும் தண்டனைக்கும் தப்பித்துக்கொள்வோம். இவ்வருடம் வழிநடத்திய கர்த்தரை துதிப்போம். திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவிய சபை மக்கள், நண்பர்கள், வெளிநாட்டில் உள்ள திருச்சபை அன்பர்கள் யாவருக்கும் எம் நன்றிகள். புதிய ஆலயத்தின் வேலைகள் முடிய இன்னும் அதிகமாக உதவும் படியும் யாவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**யாவருக்கும் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும், ஆசியும் பெலனும், அடைக்கலமும் இருப்பதாக!**

**"நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்"**

**கிறிஸ்துவின் பணியில்**

**அருட்திரு R. யோண் செல்வம்**

**திருமதி. யோண் செல்வம் விமலாதேவி**

**செல்வி. யோண் செல்வம் ஏஞ்சலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்கீத வழிபாடு

# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

# நெடுந்தீவு ஆலயம்

# 2009–2010

**"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது"**

மத்தேயு 4:15
ஏசாயா 9:2

இயேசு கிறிஸ்துவுக்குள் என் அன்பிற்குரிய பகற்பராமரிப்பு நிலைய பிள்ளைகளே! பெற்றோர்களே, ஆசிரியர்களே, பணியாளர்களே, நண்பர்களே, KNH ஸ்தாபனத்தினரே, போரூட் நிறுவனத்தினரே இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் பிறப்பைக் கொண்டாடவும் அவரின் வருகைக்கு ஆயத்தமாகவும் புதிய ஆண்டைத் தரிசிக்கவும் ஆயத்தமாவோம். இருள் உள்ள இடத்தில் ஒளி ஏற்றவும் மரண இருள் சூழ்ந்த இடத்தில் இறை பிரசன்னம் ஆட்கொள்ளவும் மன்றாடுவோம். மனம் திரும்புதலும் பரலோக ராச்சியத்தை ஏற்றுக் கொள்வதுமே இன்றைக்கு மிக அவசியமானதாகும். மனம் திரும்பாமல் பலத்தில் இருந்து விடுபடாமல் ஒளியை கண்டு கொள்ள முடியாது மனம் திரும்பி புதுவாழ்வு வாழவே நத்தார் நம்மை அழைக்கிறது நாம் மரண இருளில் இருந்து விடுபட்டு உயிர் அளிக்கும் ஆண்டவரின் வருகையில் அவருடன் சேர்ந்து வாழ ஆயத்தமாவோம்.

கடந்த 28 ஆண்டுகளாக K.N.H ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் எமது பகற்பராமரிப்பு நிலையம் நெடுந்தீவிலுள்ள பிள்ளைகளுக்கு அறிவு ஒளியை, ஞான ஒளியை, ஆன்மீக ஒளியை கொடுக்கும் ஒரு நிலையமாக இருந்து வருகின்றது இதற்கு காரணம் எமது மறைந்த முன்னாள் பேராயர் கலாநிதி D.J அம்பலவாணர் அவர்கள் மிகுந்த கரிசனையுடன் K.N.H ஸ்தாபனத்தினருடன் நல் உறவைப் பேணி இப்பணியை செய்து வந்தார். இவ்வருடத்துடன் இப்பணியை K.N.H ஸ்தாபனம் நிறுத்திக் கொள்ளும் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது.கடந்த 28 ஆண்டுகாலமாக இப்பணியைச் செய்த K.N.H ஸ்தாபனத்தின் ஜேர்மனியிலுள்ள தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்களையும் இலங்கையில் காலத்துக்குக் காலம் இருந்து பணி ஆற்றியவர்களுக்கும் எமது ஆதீனத்தின் பேராயர்கள் ஏனைய பொறுப்பாளிகளுக்கும் எமது நிலையத்தில் பணியாற்றிய குருமார்கள், ஆசிரியர்கள், உதவியாளர்களுக்கும் மிகவும் உள்ளம் கனிந்த நன்றிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசாயா தீர்க்கதரிசி கூறியது போல நம்பிக்கை அற்றவர்களாக அல்ல இருளும் மரணம் சூழ்ந்த நிலை ஏற்பட்டதும் வெளிச்சமும் உயிர்ப்பும் அளிக்கும் கடவுள் புதிய ஆண்டிலும் நிலையத்தை நடத்துவதற்கு உதவி அளிப்பார் என்ற நம்பிக்கையுடன் பயணிப்போம். இவ்வருடம் முழுமையாகவும் எமக்கு உதவியளித்த **K.N.H** ஸ்தாபனத்திற்கும் பெற்றோர்கள், நண்பர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். இவ்வருடம் எமது நிலையத்திற்கு உதவியளித்த போருட் நிறுவனத்திற்கு எமது நன்றிகள்.

**"பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல"**

(மத்தேயு 15: 26)

இயேசு இங்கு அதற்குரிய காரியங்களை அந்த நேரத்தில் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது. ஆனால் நாமே பல வேளை ஆகாத காரியங்களை நடப்பிக்கிறவர்களாகவும் இன்னொருவருடையதை எடுத்து தானம் செய்பவர்களாகவும் மாறிவிட்டோம். ஆனால் இயேசு முழுமையான மீட்பும், இரட்சிப்பும், சேவையும், விசுவாசமும். தேவை என்பதை உணர்த்துகிறார். எனவே தான் கானானிய பெண் கூறுகிறார்.

மேசையின் கீழ் விழும் துணிக்கைகளை நாய்க்குட்டிகள் தின்னுமே என்று இயேசு கூறுகின்றார் உன் விசுவாசம் பெரிது என்று கூறி ஆரோக்கியமான வாழ்வை அவளின் மக்களுக்குக் கொடுத்தார். அதுபோல் இன்றும் இயேசு தன் தன் பொறுப்பை செய்வதையும் ஆரோக்கியமான வாழ்வையும் விரும்புகிறார். நாம் எமக்குத் தரப்படும் பணியை தந்தவர்களின் நோக்கத்திற்கு ஏற்பதாக செய்யாவிட்டால் தவறு இழைத்தவர்களாக இருக்கிறோம் என்பது உண்மையாகின்றது. இறைவன் புதிய ஆண்டைத்தருகிறார். எங்கள் அறிவு, ஞானம், உண்மையாகின்றது. எல்லாவற்றையும் கடவுளுக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தி பயன் பெறுவோம். நமது ஆண்டவரின் ஆசியும் அன்பும் பெலனும் அடைக்கலமும் யாவருடனும் இருப்பதாக.

**"நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்"**

**கிறிஸ்துவின் பணியில்**
**அருட் திரு R. யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# தூய திருத்துவ ஆலயம் விசுவமடு
## புனித பேதுரு ஆலயம் சுதந்திர புரம்
## 1999

**"தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார் அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது"**

கிறிஸ்துவுக்குள் அன்பான மக்களே!

நாம் திரும்பவும் ஒரு இரண்டாயிரம் ஆண்டுக்குள் போகும் முன்பு நமது ஆண்டவரின் பாடு, மரணம் உயிர்ப்பைக் குறித்து சிந்தித்து இந்த நோன்பு உயிர்ப்பைக் குறித்து சிந்தித்து இந்த நோன்பு நாட்களைப் பயன்படுத்த அழைக்கப்படுகின்றோம். நமது ஆண்டவர் சோதனையைவென்று காட்டினார் வேதனையை சகித்துக் காட்டினார். போதனையை சாதனையாக்கினார் அதுபோல் நாமும் எமது சிலுவையைத் தூக்கிக்கொண்டு ஆணடவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நாமும் பாவ மரணத்தை வெல்லும் வாழ்வை வாழ்வோமாககடந்த நான்கு ஆண்டுகள் இச்சபையில் பணி செய்ய கர்த்தர் தந்த எல்லா ஆசீர்வாதத்திற்கும் அவரைப் புகழ்ந்து வழிநடத்திய பேராயர், குருமார், நண்பர்கள், பெரியோர்கள் யாவருக்கும் சபையாருக்கும் என் நன்றிகள்.தொடர்ந்தும் நாம் நோன்பு நாட்களில் புதிய பலனைப் பெற்றுக்கொண்டு அனுதினம் எமது ஆத்மீக பயணத்தை தொடர்வோமாக.

**உயிர்த்தெழுந்த நமது இயேசுவின் ஆசிகள் யாவரோடும் இருப்பதாக.**

கிறிஸ்துவின் பணியில்

**யோண். எஸ். செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# புனித தோமா ஆலயம்
## கோணாவில்
## 2000

***"சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றி வா"***

(மாற்கு 10:21)

கிறிஸ்துவின் அன்பான சபையாரே, சிநேகிதர்களே!

நாம் கிறிஸ்து பிறப்பின் புதிய ஆயிரம் ஆண்டில் எமது ஆன்மிகப் பயணத்தை தொடர்ந்திருக்கின்றோம். இப்பயணத்தில் கிறிஸ்துவினுடைய நோன்பு காலம், பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன மிக முக்கியமானது. நாம் புதிய நூற்றாண்டின் எமது கிறிஸ்தவ வாழ்வின் ஓட்டத்தில் சற்று தங்கி அமைதியாக இருந்து எம்மை ஆராய்ந்து பார்த்து எமது யாத்திரையை தொடர்வதற்கு எமக்கு தரப்பட்டுள்ளது.

இந் நோன்பு காலத்தில் செபத்தோடும், தியானத்தோடும், பக்தியோடும் நாம் கிறிஸ்துவினுடைய திரும்பாடுகளின் காட்சியை சிந்தித்து, பாவம் நிறைந்த சோதனை நிறைந்த, வேதனை நிறைந்த மானிட வாழ்வில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்தவ வாழ்வில் சிலுவை நம்பிக்கையின் தொடர்ச்சியான அடையாளமாக விளங்கியுள்ளது. நாம் அந்த தொடர் நம்பிக்கையின் அடையாளமான சிலுவையை எடுத்துக் கொண்டு அவரது அடிச்சுவடுகளை நோக்கி எம் யாத்திரையை தொடர்வோம். எமக்காக சிலுவையில் மரித்து கல்லறையிலிருந்து எழுந்து காட்சி அளித்த இயேசுக் கிறிஸ்துவை தரிசப்போம்: நம்பிக்கையோடும். விசுவாசத்துடன் எங்கும் இயேசுக் கிறிஸ்துவின் இரட்சிப்பை அறிவிப்போம். உயிர்த்த இயேசுவுக்கு புதிய ஆயிரமாமாண்டில் நாமும் நமது குடும்பமும் மங்காத காட்சிகளாக வாழ்வோம். சாவிலிருந்துருந்து உயிர்த்து நித்திய வாழ்வை அளித்த வள்ளல் இயேசுக் கிறிஸ்துவின் அருளும் ஆசியும் யாவருடனும் நிறைவாக. இருப்பதாக.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
**யோண். எஸ். செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோன்புகால தியான வழிபாடு
## தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
## புனித தோமா ஆலயம்
## கோணாவில்
## 2001

### இயேசு நகரைப் பார்த்து அழுதார்...

**"என் இல்லம் இறைவேண்டலின் வீடு ஆனால் நீங்கள் இதை கள்வர் குகையாக்கினீர்கள்"**

(லூக்கா: 10:46)

கிறிஸ்துவுக்குள் அன்பான சபையோரே நண்பர்களே பரிசுத்த நோன்பு காலத்துக்குள் பிரவேசிக்கின்றோம் இப்புத்தாண்டில் கடவுளுடைய பாதத்தில் அமர்ந்திருந்து எம்மை தற்பரிசோதனை செய்யும் காலம் கிறிஸ்துவினுடைய வாழ்க்கைப்பாடு வெற்றிப்பவனி மரணம். உயிர்ப்பு என்பவற்றை எமதாக்கி புதிய பலத்தோடு பாவக்கறை திரை நீங்கி எமது ஆன்மீக பயணத்தை தொடர்வோம் இயேசு எருசலேமை பார்த்து அழுதா. கண்ணீர் சொரிந்தார் இன்று எம்மையும் எமது தேசத்தையும் உலகையும் பார்த்து அழுகிறார் மனந்திரும்பும் படி கொலை பாத செயல்கள் ஏழை எளியவர்களை சுரண்டுவோர் மாய் மால வாழ்க்கை அன்று போர்ததுக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் வியாபாரம், அரசியல், கல்வி நோக்கத்திற்காக எமது நாட்டுக்கு வந்து கிறிஸ்துவை தந்தார்கள் இன்று கிறிஸ்துவின் பெயரால் வியாபாரம் சுரண்டல் வீண்பெருமை, பிறரை அடக்குதல், பணமோசடிகள், விபச்சாரம் போன்ற கொடிய பாவச்செயல்களை விட்டொழித்து கிறீஸ்துவின் உண்மைச் சீடர்களாக எம் சிலுவையை விட்டொழித்து கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாக எம் சிலுவையை தூக்கிக் கொண்டு பின் செல்வோம் கிறிஸ்துதாமே எமக்கும் எம் நாட்டுக்கும் மன்னிப்பும், சமாதானம். மகிழ்ச்சியை ஈந்து வழி நடத்துவாராக உயிர்த்த கிறிஸ்துவின் சமாதானமும் ஆசியும் யாவருடனும் இருப்பதாக.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
**ஆர். யோண் செல்வம்**
**விமலாதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# புனித தோமா ஆலயம்
## கோணாவில், கிளிநொச்சி
## 2003

(அன்புடைய திருச்சபை மக்களே, நண்பாகளே, செயற்குழு)

அங்கத்தவர்களே இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் வாழ்த்துக்கள். வன்னி திருத்தலத்தின் எட்டு வருட குருத்துவப் பணியையும் கோணவில் திருச்சபையில் நான்கு வருட பணியையும் நிறைவேற்றி 01-05-2003 நெடுந்தீவு திருச்சபைக்கு மாற்றம் பெற்றுப் போகும் வேளையில் காலாண்டு திருச்சபையின் விடயங்களையும் நோன்பு கால செய்தியையும் பகிர்ந்து கொள்வதால் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நீ என்னை நேசிக்கின்றாயா? அன்பு செய்கின்றாயா? என்று உயிர்த்தெழுந்த ஆண்டவர் பேதுருவைக் கேட்டது போல் நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கிறார் என்பதை உயிர்ப்பின் காலத்தில் அறிந்து நாம் எமது ஆண்டவரை நேசிக்க பிறரை அன்பு செய்ய எமது சபையை அன்பு செய்ய உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு சாட்சியாக வாழ வாழ்வுதரும் ஆண்டவரை சிலுவையின் நிழலில் கண்டு எங்கள் நம்பிக்கை, விசுவாசம், இறை உறவு, இறை அன்பை புதுப்பித்துக் கொண்டு உயிர்த்தெழுந்த ஆண்டவருடன் சேர்ந்து எமது சிலுவையை தூக்கி கொண்டு தூய்மையோடு எமது ஆன்மீக பயணத்தை தொடர்வோமாக.

மேலும் கோணவில் சபையின் பணிகாலத்தில் சபை மக்களாகிய நீங்களும் செயற்குழு அங்கத்தவர்களும் காட்டிய அன்பு, ஒத்துழைப்பு, நல்உறவு, நட்பு இவைகளுக்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம். வன்னியில் விசுவமடு, சுதந்திரபுரம், முரசுமோட்டை, கிளிநொச்சி, சலோம் நகர், அக்கராயன் ஆகிய சபைகளில் பணியாற்ற கடவுள் கிருபை செய்தார். எமது குருத்துவப் பணியில் என்றும் மறக்க முடியாது. கோணாவில் சபை எமது வாழ்விலும் பணியிலும் ஒன்றாக கலந்ததொன்று. இச்சபை மேலும் வளரவேண்டும் ஒரு அழகான ஆலயம் வெகு விரைவாக கட்டப்பட வேண்டும். திருச்சபை மக்கள் ஆன்மீக பெலம் பெற்று கல்வியிலும் பொருளாதாரத்திலும் அதிகமாக வளர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் வாலிபர்கள் கடவுளுக்குள் வளர்ந்து இச்சபையின். தூண்களாக என்றும் திகழ வேண்டும். ஆலயமும் மக்களும் கர்த்தருக்கு நறுமணம் வீசி இறை ஒளிபரப்பி நிற்க வேண்டும. திருச்சபையின் ஒருமைப்பாட்டையும், கட்டுப்பாட்டையும் புனித தன்மையும் காத்துக் கொள்ள வேண்டும். சொத்துக்களையும் வரலாற்று ஏடுகளையும் பாதுகாக்க வேண்டும். வழிபாடுகள், விழாக்கள், கொண்டாட்டங்கள், திருவருட்சாதனங்களை ஒழுங்கு செய்ய வேண்டும். சமூகத்தோடும், சகசபை மக்களோடும் நல்லுறவை எப்பொழுதும் வளர்த்துக் கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் நம் சபை சந்ததி சந்ததியாக வளரும் சாட்சிபகரும் என்ற உன்னத நோக்கத்தோடு உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமையுடன் உங்கள் பயணம் தொடர எம் வாழ்த்துக்கள் புதிதாக வரும் குடும்பத்தினரையும் வாழ்த்தி வரவேற்று எமது உள்ளம் கனிந்த நன்றியையும் வாழ்த்தையும் சபையின் ஒவ்வொரு உள்ளங்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். எம்மை மிகுந்த போராட்டங்கள் சோர்வுகளின் மத்தியிலும் மகிழ்ச்சியோடு வழிநடத்தி பாதுகாத்து "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோதிரம்" உயிர்த்தெழுந்து இன்றும் உம்மை வாழவைக்கும் இயேசு கிறிஸ்துவின் ஆசி என்று உங்களுடன் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்
**ஆர். யோண் செல்வம்**
**விமலாதேவி**
**ஏஞ்சலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2004

அன்புடைய திருச்சபை மக்களே நண்பர்களே நாம் பரிசுத்த நோன்பு காலத்திற்குள் பிரவேசித்திருக்கின்றோம். மானிட வாழ்வில் ஏற்படும் பாவ இயல்புகளில் இருந்தும் பாவச் சோதனைகளிலிருந்தும் விடுதலை பெற்று மீட்பின் பாதையில் எம்மை வழிநடத்தி இறையரசின் விழுமியங்களை எமக்கு தந்த எமது ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற எமது சிலுவையை தூக்கிக் கொண்டு விசுவாசத்தில் நடைபோட இவ் அருளின் காலத்தை பயன் படுத்திக் கொள்வோமாக அன்று ஏசாயாத் தீர்க்கதருசியின் செய்திகளைக் கேட்ட எசேக்கியேல் மன்னன் அழுதான் தன் பிழையை உணர்ந்தான். கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். மன்னனின் செபத்தைக் கேட்டு கண்ணீரைக் கண்டு ஆயுள் முடிகின்ற வேளையில் வாழ்வில் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார். அதுபோல நாமும் இவ் கிருபையின் காலத்தைச் செபத்திலும் தியானத்திலும் தரித்து எம்மைத் தற்பரிசோதனை செய்து விசுவாச வாழ்வில் முன்னேற தீமைகளிலும் தீய செயல்களிலும் தீய ஆவிகளுக்கும் இடங்கொடாமல் புனிதமான எமது ஆன்மீக ஜீவியத்தை எமக்காக சிலுவை சுமந்து உயிர்த்தெழுந்த ஆண்டவரை நோக்கி ஓடுவோமாக அன்புடைய திருச்சபை அன்பர்களாலே தூர இடத்தில் உள்ள திருச்சபைக் குடும்பங்களே எமது சபையின் பணிகளுக்காக செபியுங்கள். எமது ஆன்மீக வாழ்வு செழிப்புற இவ் அருளின் காலம் எம்மை வழிநடத்தட்டும். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும் ஆசியும் என்றும் யாவருடனும் நிறைவாக இருப்பதாக.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்

**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**

**விமலாதேவி யோண் செல்வம்**

**ஏஞ்சலின் யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2006

**அவர் சமீபமாய் வந்த போது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருப்பாயானால் நலமாயிருக்கும். இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.**

லூக்கா 19:41-42

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் மறுபடியும் நோன்பு காலத்துக்குள் பயணித்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவ விசுவாசத்தையும் நம்பிக்கையையும் நாம் கிறிஸ்துவில் வைத்துள்ள அன்பின் உறவையும் எமது ஆத்மீக வாழ்வையும் ஆராய்ந்து பார்த்து எமது ஆன்மீக நீரோட்டத்தை சரியான திசையில் செலுத்துவற்கு இந்த நோன்பு காலம் அல்லது வசந்த காலம் நமக்குத் தரப்பட்டுள்ளது.

இயேசுவும் எருசலேம் நகரத்தையும் தேவாலயத்தையும் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதார். மனம் நொந்து வேதனைப்பட்டுக் கூறினார் "உனக்குக் கிடைத்த இந்த நாட்களிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருத்தல் நலமாயிருக்கும்" அவ்வளவுக்கு இறைமகனின் உள்ளம் நகரத்திற்காகவும் தேவாலயத்திற்காகவும் வேதனையுற்று இருந்ததை நாம் காண்கின்றோம்.

இயேசு நம்முடைய தனிப்பட்ட வாழ்வை, குடும்ப வாழ்வை, சமூக வாழ்வை, திருச்சபையைப் பார்த்து அழுகிற கடவுளாக இருக்கிறார். இயேசு ஓசன்னா என்று பாடி மக்கள் புடைசூழ பவனி வந்தாலும் தனது பெருமையையும் புகழ்ச்சியையும் விரும்பாம மிகுந்த கரிசனையோடு நகரத்தைப பார்த்து அழுதார். ஆனால் மாலை அணிவதிலும், மக்கள் புடைசூழப் பெரியவர்களாக பெரிய ஆசனங்களிலும், இருக்கவே விரும்புகிறோமே தவிர உண்மையான உள்ளத்துடன் கடவுளின் சமூகத்தில் வாழ விருப்பின்றி இருக்கிறேம்.

**இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி**

**"ஒருவன் என்னைப்பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்"**

மத்தேயு 16: 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினார். ஆனால் இன்று உண்மையான உள்ளத்துடன் இயேசுவைப் பின் தொடரமுடியாமல் பதவி, பணம், பரம்பரை, கல்விமான், ஜாதி என பல்வேறு காரணிகள் எம்மை கிறிஸ்துவின் உறவில் இருந்து பிரித்துக் கொண்டு இருக்கிறது. நாம் உலக மாயைகளுக்கு அடிமையாகி நம்மையும் நம்சபைகளையும் அழித்துக் கொண்டு இருப்பதை இயேசு இன்றும் பார்த்து அழுகிறவராக இருக்கிறார் என்பதை உணர்ந்து மனம் திரும்ப இத் தவக்காலம் அறைகூவி அழைத்து நிற்கிறது.

**"ஒருவனும் வேசிக்கள்ளனாகவும் ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்."**

எபிரேயர் 12: 16

அன்பானவர்களே மெகேமிய எருசலேம் நகரத்திற்காகவும் தேவாலயத்திற்காகவும் கண்ணீர் விட்டுக் கதறி அழுததுபோல் நாமும் நம்முடைய ஆன்மீக வாழ்வையும் திருச்சபையின் பணியையும் இன்றைய எமது திருச்சபைகளையும் திருச்சபையின் தலைவர்களுக்காகவும் கண்ணீர் மல்கச் செபித்துமனந்திரும்ப மறுபடியும் எச்சரிக்கப்படுகிறோம். ஒரு நேர போஜனத்திற்குத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை இழந்துபோன ஏசாவைப்போல் இல்லாமல் உண்மையான மனமாற்றத்துடன் எமது சிலுவை சுமந்து அண்டவரை முழு உள்ளத்துடன் பின்பற்றி வாழ்ந்து அவருக்கு பணியாற்றிட எம்மைத் தாழ்மையோடு சிலுவை சுமந்து பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவரிடம் அர்ப்பணிப்போம்.

**உயிர் உள்ள நமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அன்பும் கிருபையும் ஆசீயும் யாவருடனும் இருப்பதாக.**

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**
**விமலாதேவி யோண் செல்வம்**
**ஏஞ்சலின் யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
## 2007

நாம் கிறிஸ்துவின் உண்ணா நோன்பு, சிலுவைப் பாடுகளை வியாகுலங்கள், மரணம், உயிர்த்தெழுதல் எனும் இறை அருளின் காலத்துக்குள் பிரவேசித் துள்ளோம். நாம் நோன்பு இருந்து செபத்தியானத்தில் தரித்து இருந்து எமது ஆன்மீக வாழ்வை பெலப்படுத்திக் கொள்ளவும். சீர்படுத்தவும் நாம் கிறிஸ்துவில் வைத்துள்ள விசுவாசமும் நம்பிக்கை அன்பு, உறவு, பக்தி வாழ்வை புதுப்பித்து கொள்ளவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும் இந்தக் கிருபையின் காலத்தில் உணர்ந்து கொள்வோம்.

பிலிப்பியர் நிருபத்தில் நமது ஆண்டவர் கடவுளுக்கு சம்மாக இருப்பதை கொள்ளையடித்த பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே தாழ்த்தி வெறுமையாக்கி மனுஷ ரூபமானார் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது நாமும் எம்மை வெறுமையாக்கி தாழ்மையாக உயிர்த்த கிறிஸ்துவோடு சேர்த்து பயணப்பட அழைக்கப்பட்டுள்ளோம். பாவம் நிறைந்த இந்த மானிட லோகத்தில் பஞ்சம், பசி, பட்டினி, நோய், கொலை, கொள்ளை ஆள்கடத்தல், லஞ்சம், ஊழல் தூய்மையானவர்களே தூய்மை கேடான வாழ்விலுள்ள நிலையில் நீதி, பரிசுத்தம் உண்மை செய்ய வேண்டியவர்களே அநீதியும் பொய்மையும், அசுத்தமான நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலபரங்கள், நிம்மதியும் ஆறுதலும், உளசமாதானமும் தர வேண்டிய தலைவர்களும் நிறுவனங்களும், ஆலயங்களும் சீர்குலைவின் தொட்டிலாக மாறியுள்ள இக்காலகட்டத்தில் நாம் உரோமர் 1:17ல் "நீதிமான் விசுவாசத்தில் பிழைப்பான்" என்பது போல் நாம் நமக்காக எல்லாப்பாடுகளையும் அனுபவித்து சாவின் கல்லறையைத் தகர்த்து பாவத்தின் மரணத்தை வென்று உயிர்த்த நமது ஆண்டவர் இயேசுவை விசுவசித்து நமது சிலுவையைத் தூக்கிக் கொண்டு எல்லாத் தடுப்பு சுவர்களையும் தாண்டி நித்திய வாழ்வு தரும் அவரை தொடர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுக்குள் அன்பான என் சபை மக்களே, நண்பர்களே கடந்த நான்கு ஆண்டுகள் இத்தீவில் கடவுளுக்கு மகிமையாக பணி செய்ய கர்த்தர் எனக்கும் குடும்பத்தினருக்கும் தந்தை எல்லா விதமான வழிநடத்தல், கிருபை, பெலன், ஞானம், அடைக்கலம் யாவைக்காகவும் அவரைப் போற்றுகின்றேன். துதிக்கின்றேன். சபை மக்களும் நெடுந்தீவு மக்களும் காட்டிய அன்பு, நல்லுறவு, ஒத்துழைப்புக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நோன்பு காலத்தில் யாவரும் தேவ பெலன் பெற்று என்றும் அவரின் அன்புச் சீடர்களாக வாழ்ந்து அவருக்கே பணி செய்யப் புறப்படுவோம். உயிர்த்த கிறிஸ்துவின் அன்பும் அருளும்பெலனும் ஆசீர்வாதமும் யாவருடனும் நிறைவாக இருப்பதாக.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்

**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**

**விமலாதேவி யோண் செல்வம்**

**ஏஞ்சலின் யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2008

**"மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்"**

லூக்காஸ் 21: 36

கிறிஸ்துவுக்குள் அன்பிற்குரிய திருச்சபை மக்களே! சிநேகிதர்களே, நண்பர்களே, யாவருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் நோன்பு காலத்திற்குள் பிரவேசித்திருக்றோம் நாம் நமது ஆண்டவருக்குள் வாழும் நிலையை சிந்தித்துப் பார்த்து இறை உறவை, இறை அன்பை, நமது விசுவாசத்தை நம்பிக்கையை புதுப்பித்து, இறைவனுடன் சேர்ந்து பயணிக்கும் ஆன்மீக நாட்கள் நமக்கு தரப்பட்டுள்ளது. என்பதை சிந்தித்து ஆய்ந்து அறிநது மத்தேயு 24:12,13 பின்வருமாறு கூறுகின்றது.

**"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம் முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்"**

இன்று அக்கிரமமும், அநியாயமும், அநீதிகளும், கொலைகளும், கொள்ளைகளும், தீமை செய்கிறவர்களும் பெருகி உள்ள காலத்தில் நாம் நமது கிறிஸ்தவ வாழ்வின் புனிதத் தன்மையை காத்து விசுவாசத்துடன் வாழும் வாழ்வை வாழ அழைக்கப்பட்டுள்ளோம். வஞ்சனைகளும், சூழ்ச்சிகளும், பிரிவினைகளும், கபடத்தனமான வாழ்க்கையும், பெருகி பரிசுத்தம் நீதி உண்மைத்தனம் அற்று மாற்கு 13:6ல் பின்வருமாறு கூறப்படுகின்றது.

**"ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்."**

கிறிஸ்துவை சொல்லியே அநேகரை வஞ்சிப்பார்கள் நாம் வஞ்சிக்கப்படாத எமது அன்பு தணிந்து போகாத விசுவாசம் ஒழிந்து போகாத நம்பிக்கை அற்றுப் போகாத பரிசுத்த வாழ்வு குலைந்து போகாத ஆன்மீக வாழ்வு வாழ இந்நோன்பு காலத்தை பயன்மிக்கதாக உபவாசித்து, செபித்து எமது ஆத்மீக வாழ்வை காத்துக் கொள்வோம்.

**யாவருக்கும் உயிர்ப்பின் ஆண்டவர் இயேசுக்கறிஸ்துவின் அன்பும் அருளும் ஆசியும் கூட இருப்பதாக.**

கிறிஸ்துவின் பணியில்
**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**
**விமலாதேவி யோண் செல்வம்**
**ஏஞ்சலின் யோண் செல்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2009

**"என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் எனக்கு உதவி செய்யாமலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்"**

சங்கீதம் 22: 1

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை மக்களே, நண்பர்களே, அரும்பணியாளர்களே;

நாம் இயேசு கிறிஸ்துவின் பணி உண்ணா நோன்பு அவரின் பாடு மரணம் உயிர்ப்பு யாவையும் எமது ஆத்மீக வாழ்வில் மறுபடியும் உய்த்து உணர்ந்து எமது சிலுவையைச் சுமந்து அவரின் அடிச்சுவடுகளில் எமது ஆத்மீக பயணத்தை நடத்த அழைக்கப்டுகின்றோம். இப்பயணத்தில் சிலுவையின் வாழ்வு என்பது தவிர்க்க முடியாது. எனினும் வன்னியில் நடைபெறும் போர் பல மக்களின் வாழ்வே சிலுவையாக மாறிட்ட துயர நிகழ்வாக இருக்கின்றது. சொத்து, உடமை, உறவு, குடும்பம், சகோதரத்துவம் யாவும் இழந்து பசி தாகத்துடனும். காயங்களுடனும் அங்கங்களை இழந்து தனிமையுடனும் பல நோய்களுடனும் சொல்ல முடியாத பல கொடுமையுடன் மரண ஓலமும் நித்தம் மனதில் கிலேசமும் சஞ்சலமும் பெருகிக் கொண்டு செல்லும் இந்த நாட்களில் தாவீது மன்னன் போல் பலர் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என கதறும் சத்தமும் ஆண்டவனே ஏன் மௌனமாக இருக்கின்றீர் ஆண்டவரே ஏன் தூரமாயிருக்கிறீர் என்ற சத்தமும் நித்தம் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் நமது ஆண்டவரும் பாடு மரணத்தின் வேதனையில் சிலுவையில் இருந்து என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் எனக் கதறுவது எமது துன்ப சுனைகளை சுமந்தார். எமக்காகக் கண்ணீர்விடும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாடுகள், இழப்புக்கள் மத்தியிலும் எம்முடன் இருப்பார் என்ற ஒரே ஒரு நம்பிக்கையில் எமது பயணம் தொடரட்டும் தாவீதும் 22ம் சங்கீதத்தில் கதறி அழுதல் ஆனால் 23ம் சங்கீதத்தில் கூறுகின்றார்.

**"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் தேவரீர் என்னோட கூட இருக்கிறீர் உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்."**

23: 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான நம்பிக்கையில் எமதுஆத்மீக பயணத்தை தொடர்வோம் வாருங்கள்.

இன்று மரணமும் துன்பமும் ஒருபுறம் இருக்க அக்கிரமமும் அநியாயமும் நீதி அற்ற செயல்களும் பரிசுத்தமற்ற சீர்குலைவுகளும் மனித வாழ்வையே சீர்குலைத்து நிற்கின்றது. ஆண்டவருடைய விசுவாசிகளும் அவருடைய பணியாட்களும் கூட உண்மைத்தன்மை, பரிசுத்தம், நீதி, நேர்மை கடவுளுக்குப் பயப்படும் தன்மை அற்று வாழும் நிலையைக் காண்கின்றோம், இப்பாடுகளுக்கூடாக நாமும் நம்முடைய நாட்டில் வாழும் யாவரும் மனம் திரும்ப வேண்டும் என்ற செய்தியையும் நமது ஆண்டவர் யாவருக்கும் தந்துள்ளார். யோபு எல்லாவற்றையும் இழந்தான். கொடிய வேதனையில் நித்தம் அல்லலுற்றான் ஆனாலும்.

**"நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ! உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுறவனுமான மனுஷனாகிய அவனைப் போல பூமியில் ஒருவனுமில்லை"**

என்று இறைவன் யோபுவைப் பற்றி சாத்தானிடம் கூறினார். சாத்தான் யோபுவை சோதித்தும் யோபு சொல்ல முடியாத தன்பத்தை அனுபவித்தாலும் பாவம் செய்யவுமில்லை தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை.

**"நான் போகும் வழியை அவர் அறிவார் அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்."**

யோபு 23:10

என்று கூறி உத்தமனாக பயணித்தது போல் இன்று நாமும் நம்முடைய மக்களும் நம்மடைய அரும்பணியாளர் யாவரும் மரணப் பள்ளத்தாக்கு ஏற்பட்டாலும் தூய உள்ளத்துடன் எமது சிலுவையைத் தூக்கி எமக்காகப் பாடுகள் பட்ட எமது நேசரை நோக்கி விசுவாசத்துடன் பயணிப்போம். முடிவும் வாழ்வும் அவரிடமே உள்ளது.

யாவருக்கும் எமக்காகப் பாடுகள் பட்டு மரித்து உயிர்த்து வாழ்வு அளிக்கும் எமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பும் அருளும் பெலனும் அடைக்கலமும் ஆசீரும் கூட இருப்பதாக.

நன்றி

கிறிஸ்துவின் பணியில்
**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**
**விமலாதேவி யோண் செல்வம்**
**ஏஞ்சலின் யோண் செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தந்தையே இவர்களை மன்னியும்"

இயேசுவின் பாடு மரணம் உயிர்ப்பின் திருப்பாடுகளின் காட்சியை நாம் இங்கு ஒரு நாடகமாக அரங்கேற்ற உள்ளோம் இதில் பங்கு கொள்வதற்கு வந்துள்ள உங்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

இவ் நாடகத்தில் பங்குபற்றி நடிக்கும் சகோதர சகோதரிகளை அன்புடன் பாராட்டுகின்றேன் இவ் நோன்பு காலத்தில் எம்மை ஒறுத்து நாம் தூய உள்ளத்துடன் வாழ்வதற்கு எம்மை அர்ப்பணிப்போம். இயேசு கிறீஸ்து சிலுவையில் தொங்கி கொடிய வேதனைப்பட்டு துடிதுடித்து நின்றாலும் "தந்தையே இவர்களை மன்னியும்" என குரல் எழுப்பி நின்றது போல் இன்று நாமும் சொல்ல முடியாத துன்ப சுமையுடன் காயப்பட்ட உள்ளம் கரம், கால், உடல் என வாழ்ந்தாலும் இறை மன்னிப்பை பெற்று இவ் மன்னிப்பை மற்றவர்களுக்கும் பகிர்ந்து வாழ்வோம் வாருங்கள்

**"தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின்**
**செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்"**

(லூக்கா 14: 27)

கிறிஸ்துவின் பணியில்
**அருட் திரு. ஆர் யோண் செல்வம்**
சபைகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்புகால தியான வழிபாடு
# தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்
# நெடுந்தீவு ஆலயம்
# 2010

**"நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால்
கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும்
இடத்தில் உள்ள மேலானவைகளைத் தேடுங்கள்"**

கொலோசேயர் 3:11

கிறிஸ்துவுக்குள் என் அன்பான திருச்சபை மக்களே!

நண்பர்களே நாம் மறுபடியும் கிறிஸ்துவின் பாடு மரணம் உயிர்ப்பில் பங்கு கொள்ளவும் நோன்பு காலத்தில் நோன்பிருந்து எங்களை நாங்கள் ஆராய்ந்து பார்த்து எங்கள் சிலுவையை தூக்கி எமது ஆத்மீக பயணத்தை நடத்தவும் அழைக்கப்படுகின்றோம்.

இவ் நோன்பு காலத்தில் கர்த்தருடைய வார்த்தை குறித்து ஆழமாக சிந்திக்கவும் அவர் தந்த இந்த வேதவாக்கியங்களை எமதாக்கி கொள்ளவும் எமது மனங்களை திருப்பிக் கொள்வோம்.

**"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும்
நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்"**

**சங்கீதம் 119:72**

நாம் வாழும் சூழ்நிலை இன்று போட்டி நிறைந்ததாக இருக்கிறது பணம், பதவி செல்வாக்குகளைத் தேடியும் வீண் ஆடம்பரமான வாழ்வை நோக்கியும் இன்றைய உலக சக்கரம் சுழன்று கொண்டு இருக்கிறது. கொலை, கொள்ளை அடிமைத்தனமான வாழ்க்கை முறை, மதுபானத்துக்கு அடிமைப்பட்டவர்கள், தீராத வியாதிகளால் மனிதன் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கின்றான். சகமனிதனை சக மனிதன் நேசிக்க முடியாதவனாக இருக்கின்றான். இவைகளில் எல்லாம் வேதமே நலமானது என்று சங்கீதம் கூறுகின்றது.

**இயேசு கூறுகின்றார்.**

**"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்
மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் சத்தியத்தையும் அறிவீர்கள்
சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்"**

**சங்கீதம் 8:31,32**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான வேத அறிவு இல்லாமையே இன்றைய கிறிஸ்தவர்களின் பரிதாப நிலமையாக இருக்கின்றது. சத்திய வேதத்தை அறிந்து அதன்படி நடந்தால் பலவற்றில் இருந்து நமக்கு விடுதலை கிடைக்கும்.

**"என் ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள்**
**நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு**
**நானும் உன்னை வெறுத்துவிடுவேன் நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய்**
**ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்''**

ஓசியா 4:6

**"ஜனங்களுக்கு எப்படியோ ஆசாரியனுக்கும் அப்படியே**
**அவர்கள் வழிகளின் படி நான் அவர்களை விசாரித்து**
**அவர்கள் கிரியைகளின் படி அவர்களுக்குப் பலன் அளிப்பேன்."**

ஓசியா 4:9

எனவே ஓசியா தீர்க்கதரிசி மிகவும் ஆழமான உண்மையை சொல்லுகின்றார். அவரை விசுவாசிக்கும் ஜனங்களும் குருமாரும் எவ்வளவுமாய் அவருடைய வேதத்தையும் அவரையும் இறுகப் பிடித்து நல் ஆத்தும ஜீவியத்தை நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். நீங்கள் அறிவையும் வேதத்தையும் மறந்ததால் நானும் உங்களை வெறுப்பேன் எனக் கூறுகின்றார்.

எனவே கிறிஸ்துவுக்குள் என் அன்பான மக்களே நாம் எமது வேதத்தை ஆழமாக சிந்தித்து அதன் உண்மைகளின்படி நடந்தால் மிகுந்த பலனையும் ஆசீர்வாதத்தையும் நமக்காக பாடுபட்டு மரித்து உயிர்த்து எழுந்து என்றும் அரசாழுகிற இயேசுகிறிஸ்து தர வல்லமையுடையவராக இருக்கிறார். அவருடைய வேதத்தை விசுவாசித்து காத்து நடக்க இவ் நோன்பு காலத்தை பயன் உள்ளதாக மாற்றுவோம். சோதனைகள், வேதனைகள் பாடுகளை சிலுவையில் கொன்று ஒழித்த எமது ஆண்டவரைப் போல் யாவிலும் வெற்றி சிறந்து நல் விசுவாசிகளாக ஆண்டவருடைய வேதத்தை பற்றி எமது சிலுவையை சுமந்து ஆத்மீக யாத்திரையை தொடர்வோம். வாருங்கள் எமக்காக சோதனைகள், பாடுகள், வேதனை, சிலுவை மரணத்தை தோற்கடித்து சாவின் கல்லறையில் வெற்றி சிறந்து உயிர்த்த நமது இயேசு கிறிஸ்துவின் பெலனும் அடைக்கலமும் ஆசீர்வாதமும் யாவருடனும் நிறைவாக இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

அருட் திரு **R.** யோண் செல்வம்
திருமதி விமலாதேவி யோண் செல்வம்
செல்வி ஏஞ்சலின் யோண் செல்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருவன் எப்படி சோதிக்கப்படுகின்றான்
## (Iகொரி 10 13, யாக் 1:2,3,12)

1. உடன் சகோதரரால். மாற் 3:32,33
2. புறஜாதிகளால். நியா 2:21-23
3. வசனத்தால். மத் 4:1-4, சங் 105:19
4. வியாதியால். யோபு 2:7
5. காவலில். வெளி 2:10, அப் 16:25
6. அக்கினியால். Iபேது 4:12,13,17
7. புகழ்ச்சியால். நீதி 27:21

## விரும்பத்தகாத கனிகள்

1. கசப்பான கனி. ஏசா 5:2,4
2. பொய்யின் கனி. ஓசி 10:13
3. மரணத்துக்கேதுவான கனி. ரோம 7:5
4. கட்டு விரியனின் கனி. ஏசா 14:29
5. தனக்குத்தானே கனி கொடுத்தல். ஓசி 10:1
6. கெட்ட கனி. மாத் 7:17, 12:33
7. கனி கொடாதது. லூக் 13:6,7

## பொய்யன் யார்?

1. பிசாசு பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். **யோவா 8.44, அப் 5:3,4**
2. மனச்சாட்சியில் சூடுண்டாகி பிசாசுகளின் உபதேசங்களுக்கு செவி கொடுக்கிறவன் பொய்யன். Iதீமோ 4:1-3, IIபேதுரு 2:1,2,3
3. இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யன். Iயோவா 2:4
4. தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யன். Iயோவா 4:20
5. தேவனோடே ஐக்கியமாயிருக்கிறேன் என்று சொல்லியும் இருளிலே நடக்கிறவன் பொய்யன். Iயோவா 1:6
6. இயேசுவை கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவன் பொய்யன் Iயோவா 2:22
7. கர்த்தருடைய வசனங்களோடு எதையாவது கூட்டுகிறவன் பொய்யன் நீதி 30:6 (உபா 4:2, வெளி 22:18.19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் நடக்க வேண்டும்

(ரோம 15:3, 1தெச 2:10-12)

1. தேவனுக்கு பயந்து நடக்கவேண்டும். (தேவனோடு நடக்க வேண்டும்) அப் 13:16, ஆதி 5:24, 6:9, 22:12, 2இரா 4:1, 1இரா 18:3,12, சங் 128, யோபு 1:1,8, மல் 2:5,6
2. ஒளியில் நடக்க வேண்டும். யோவா 12:35, 8:12, 1யோவா 1:7, சங் 1:7, சங் 119:105
3. அழைக்கப்பட்ட அழைப்பின்படி நடக்கவேண்டும். 1கொரி 7:17
4. கிறிஸ்துவுக்குள் நடக்க வேண்டும். கொலோ 2:6, 1யோவா 2:6, 1கொரி 4:17, யோவா 6:66, 3 யோவா 3,4, ரோம 14:15
5. ஆவியின்படி நடக்க வேண்டும். ரோம 8:1,5,14, லூக் 1:7, அப் 10:38
6. விசுவாசித்து நடக்க வேண்டும். 2 கொரி 5:6
7. சுவிசேஷ சத்தியத்தின்படி நடக்க வேண்டும் கலா 2:14, ரோம 13:13, 1யோவா 1:6, 1பேது 2:12, 3:16, 2பேது 3:11, வெளி 3:4

## நாம் நடக்கக் கூடாது

1. தந்திரமாய் நடக்கக் கூடாது. 2 கொரி 4:2
2. வீணான சிந்தையில் நடக்கக் கூடாது எ பே.4:17
3. ஞானமற்றவர்களைப் போல நடக்கக் கூடாது எபே 5:17 கொலோ. 4:5
4. மாம்சத்தின் படி நடக்கக் கூடாது. ரோம . 8:5,6
5. ஒழுங்கற்று நடக்கக் கூடாது 2 தெச. 3.6
6. நிர்வாணமாய் நடக்கக் கூடாது வெளி. 16:15
7. காமவிகாரமாய் நடக்கக் கூடாது 2 பேது 2:17

## இருக்கத் தகாத இடங்களில் சில பரிசுத்தவான்கள்
## (SAINTS IN WRONG PLACES சங். 1.1- 3

1. ஆதாம் - விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டிருந்தான். ஆதி 3:8-10
   (தேவ சாபத்துக் கேதுவானான்)
2. ஆபிரகாம் - எகிப்தில் தங்கும்படி போனான். ஆதி 12:10-20
   (பொய் சொல்ல நேர்ந்தது)
3. சிம்சோன் - தெலிலாளின் மடியில் நித்திரை பண்ணினான் நியா 16:4.19
   (தன் பெலனையும் ஜீவனையும் இழக்க வேண்டியதாயிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தாவீது - அரமனை உப்பரிக்கையின் மேல் உலாத்திக்கொண்டிருந்தான். 2 சாமு 11:2
(பத்சேபாளை இச்சித்து பாவம் செய்ய ஏதுவாயிற்று)

5. எலியா - சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்தான். 1இரா 19:4
(மரணத்தை விரும்ப ஏதுவாயிற்று)

6. யோனா - கப்பலின் கீழ்த்தட்டிலும் மீனின் வயிற்றிலும் இருந்தான் யோனா 1:5-17, 2:1-10
(பற்பல சோதனைகளால் மிகவும் நெருக்கப்பட்டான்.)

7. பேதுரு - போர்ச் சேவகரோட உட்கார்ந்தான். மத் 26:58: மாற் 14:54 லூக் 22:55 - 62
(இயேசுவை மறுதலிக்க நேர்ந்தது)

## ஏழு வீடுகள்
### (நீதி மொழிகளில்)

1. நீதிமானுடைய வீடு - அதில் அதிக பொக்கிஷ முண்டு 15:6, 12:7
2. புத்தியுள்ள ஸ்திரியின் வீடு - அவள் தன் வீட்டைக் கட்டுகிறாள் 14:6
3. விபசார ஸ்திரியின் வீடு - அது பாதாளத்துக்குப் போகும் வழி 7:27, 2:18
4. துன்மார்க்கனின் வீடு - அங்கே காத்தரின் சாபம் இருக்கிறது 3:33, 14:11
5. அகங்காரியின் வீடு - அதைக் கர்த்தர் பிடுங்கிப் போடுவார். 15:25
6. பொருளாசைக்காரன் - அவன் தன் வீட்டைக் கலைக்கின்றான். 15:27
7. சண்டைக்காரியின் வீடு - ஓயாத ஒழுக்கு 21:9, 25:24, 21:19, 27:15

## நாம் ஆயத்தமாயிருக்க வேண்டிய ஏழு காரியங்கள்

1. இயேசுவை பின்பற்ற ஆயத்தமாயிருக்க வேண்டும். லூக் 22:33
2. சகல விதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். தீத் 3:1:2, தீமோ 2:21
3. சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல ஆயத்தமாயிருக்க வேண்டும். 2கொரி 9:3:15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தானதர்மம் உதாரத்துவமாய்க் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.
2கொரி 9:1-5

5. கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.
அப் 21:13:20:24

6. உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தம் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்.
லூக் 1:17

7. மாணவாளனாகிய கிறிஸ்து இயேசுவின் வருகைக்காக ஆயத்தமாயிருக்க வேண்டும். மத் 24:44, 25:7:10, லூக் 12:40, வெளி 19:7,8

## ஏழு வீட்டார்

### (புதிய ஏற்பாட்டில்)

1 கப்பர்நகூம் ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய வீட்டார் - அவர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள் யோவா. 5:46-53

2. நூற்றுக்கதிபதி கொர்நேலியுவின் வீட்டார் - அவர்கள் தேவனுக்குப் பயந்தவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களும், பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களுமாயிருந்தார்கள். அப்.10:2:44:11:14:15

3. இரத்தாம்பரம் விற்றுவந்த லீதியாளின் வீட்டார் - கர்த்தரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். அப் 16:14,15,40

4. பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் வீட்டார் - இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று தேவனிடத்தில் மனமகிழ்ச்சியாயிருந்தார்கள். அப் 30 - 34

5. ஜெபாலயத் தலைவனாகிய கிறிஸ்புவின் வீட்டார் - கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்கள். அப் 16:30-34

6. ஸ்தேவானுடைய வீட்டார் - பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ய தங்களை ஒப்புவித்தவர்களாயிருந்தார்கள் 1கொரி 1:16 16:15 ரோம16:3-5 அப் 6:5

7. ஒநேசிப்போருவின் வீட்டார் - அப்போஸ்தலனாகிய பவுலை இளைப்பாறப்பண்ணினவர் களாயிருந்தார்கள் 2தீமோ 1:16 4:19

சகோதரனே! நீ எப்படி! உன் வீட்டார் எப்படி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசு கிறிஸ்து வருவார்

1. நினையாதவேளையில் - திருடனைப் போல். மத் 24:44
2. மேகங்களில் - வல்லமையோடு மத் 24:30
3. ஆரவாரத் - தொனியோடு 1தெச 4:16
4. சகல பரிசுத்த - தூதரோடு மத் 25:31
5. ஆயிரமாயிரமான தமது - பரிசுத்தவான்களோடு யூதா 14:15
6. தமது மகிமையோடும் - தம்முடைய பிதாவின் மகிமையோடும் மத் 25:31, 16:27
7. எல்லாரும் அறிய - வெளியரங்கமாய் வெளி 1:7

## அதியமும் ஆச்சரியமுமான ஏழு காரியங்கள்
## (WONDER)

1. கர்த்தருடைய நாமம் அதிசயமானது. நியா 13:8, ஏசா 9:6
2. கர்த்தருடைய சாட்சி அதிசயமானது. சங் 119:29
3. கர்த்தருடைய கிரியைகள் அதிசயமானது. சங் 139:14, வெளி 15:8
4. கர்த்தருடைய கிருபை அதிசயமானது. சங் 31:21
5. கர்த்தருடைய வேதம் அதிசயமானது. சங் 119:18
6. கர்த்தருடைய சத்தம் ஆச்சரியமானது. யோபு 37:5, சங் 29
7. கர்த்தருடைய ஆலோசனை ஆச்சரியமானது. ஏசா 28:29

## தாழ்மையினால் கிடைக்கிற ஏழு ஆசீர்வாதங்கள்

1. தாழ்மையுள்ளவர்களை இரட்சிக்கிறார். யோபு 22:29 (மத்18:3,4)
2. தாழ்த்துகிறவனை தேவன் உயர்த்துகிறார். பிலி 2:6-11, மத் 11:29, லூக் 1:52, 18:9-14
3. தாழ்மையுள்ளவனில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அருளிச் செய்கிறார். 2நாளா 7:14
4. தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபையளிக்கிறார். 1பேது 5:5,6, யாக் 4:6 நீதி 3:34
5. தாழ்மையுள்ளவனின் ஜெபம் கேட்கப்படும். 2இரா 22:19, நாளா 34:27, 33:12,13, 12:7
6. தாழ்மையுள்ளவனை கர்த்தர் நோக்கிப் பார்க்கிறார் சங் 138:6 (2நாளா 33:23, 24:36:12)
7. தாழ்மை மேன்மையளிக்கிறது. நீதி 15:33, 18:12 (யாத் 10:3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு மகிமையான காரியங்கள்

1. மகிமையின் சுவிசேஷம். 2கொரி 4:4, 2தெச 2:14, 1தீமோ 1:11
2. மகிமையின் ஊழியம். 2கொரி 3:8-11, 3:18
3. மகிமையின் சுயாதீனம். ரோம 8:20
4. மகிமையான வல்லமை. கொலோ 1.11
5. மகிமையுள்ள சபை. எபே 5.27 அப் 2:47, 16:5, 12:5, 9:31, 14:31-33
6. மகிமையின் சரீரம். பிலி. 3:21, 1யோவா 3:21, 1யோவா 3:21, கொரி 15:51,52 ரோம 8:16-18
7. மகிமையின் பிரசன்னம். தீத் 3:13, 1தெச 4:16, 17, லூக் 9:26 மாற் 13:26 மத் 24:30:1, பேது 5:4, வெளி 22:7,12,20, கொலோ 3:4, 1பேது 1:21, 4:13, 5:1

## பரிசுத்த ஆவியும் தேவனுடைய பிள்ளைகளும்

1. பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள். எபே 5.18 (அப் 4.8, 7:55, 10:38, 11:24, 13:9,52, லூக் 4:1)
2. ஆவியிலே அனலாயிருங்கள் ரோம 12:11 (அப். 18:25, 2தீமோ 1:6, வெளி 3:15,16)
3. ஆவியை அவித்துப் போடாதிருங்கள் 1தெச 5:19
4. பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லாதிங்கள் எ.பே 5:3,4,9 (யாக் 3:14, வெளி 3:9, 2கொரி 11:31)
5. பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நில்லாதிருங்கள் அப் 7:51-54 (யாத் 32:9, 33:3-6, 34:9, உபா 9:6,13)
6. பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் எபே 4:30 (எபே 1:13,14:2, கொரி 1:22,5:5, ஏசா 63:10, 1சாமு 15:11,19,32, 16:14)
7. பரிசுத்த அவிக்கேற்றபடி நடவுங்கள் கலா 5:18 (ரோம 8:1,5,14, 1கொரி 4:17: லூக் 1:17, 2:25-27 யோவா 16:13)


## கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்துகிற ஏழு ஜாதிகள்


1. கர்த்தரை தங்களுக்கு தெய்வமாகக் கொண்ட ஜாதி சங் 33:12 (2நாளா 33:92,13:1, இரா 18:39)
2. மீட்கப்பட்ட ஜாதி 2சாமு 7:23,24, 1நாளா 17:21 (வெளி 5,9,10,16:1 யாத் 12 அதி 30:11 – 16
3. தேவனை சமீபமாய்ப் பெற்றிருக்கிற பெரிய ஜாதி உபா 4:7,8 (எபே 2:13,ஏசா 66:2)
4. சத்தியத்தைக் கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி ஏசா 26:2,58:2
5. தேவனுடைய பலத்த ஜாதி ஏசா 60:22 (யோவே 2:2, அப்1:8)
6. பரிசுத்த ஜாதி 1பேது 2:9,10 (யாத் 19:6 உபா 7:6 14:2 லேவி 20:26 ரோம 6:22 2கொரி 7:1: 2பேது 3:10,11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குருத்துவ பட்டமளிப்பின் போது.....













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்கிரியைகள்

1. நற்கிரியைகளை செய்ய நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். **எபே 2:10**
2. நற்கிரியைகளால் பரலோகத்தின் தேவன் மகிமைப்படுத்துகிறார் **மத் 5:16**
3. நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். **தீத் 2:14**
4. நற்கிரியைகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும் **தீத் 2:14**
5. நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாயிருக்க வேண்டும் **1தீமோ 6:18** (**யோவா 10:32, 2கொரி 9:8,7, கொலோ 1:10, 2தீமோ 2:21, 1பேது 2:12 யாக் 2:17-22**)
6. ஸ்திரீகள் நற்கிரியைகளால் தங்களை அலங்கரிக்க வேண்டும். **1தீமோ 2:10.**
7. நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும் படி திட்டமாய் போதிக்க வேண்டும். **தீத் 3:8, எபி 10:24, 13:21, 1பேது 2:12, யாக் 2:17-22**

## பரிசுத்த ஆவியின் கிரியைகள்

1. பரிசுத்த ஆவியானவர் சபையைக் கட்டுகிறார் **எபே 2:20-22**
2. பரிசுத்த ஆவியானவர் ஆச்சாரமாயிருக்கிறார் **எபே 1:14,2கொரி 1:22**
3. பரிசுத்த ஆவியானவர் முத்திரை போடுகிறார் **எபே 1:13,4:30 2கொரி 1:21**
4. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தமாக்குகிறார் **1பேது 1:12**
5. பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார் **1யோவா 2:27**
6. பரிசுத்த ஆவியானவர் ஐக்கியப்படுத்துகிறார் **எபே 4:3**
7. பரிசுத்த ஆவியானவர் நடத்துகிறார் **ரோம 8:14 யோவா 16:13**
8. பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியோடு சாட்சி கொடுக்கிறார் **ரோம 8:26**
9. பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார் **ரோம 8:26**
10. பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் **ரோம 8:26**
11. பரிசுத்த ஆவியானவர் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். **ரோம 8:27**
12. பரிசுத்த ஆவியானவர் சந்தோஷிப்பிக்கிறார். **ரோம 14:27**
13. பரிசுத்த ஆவியானவர் சபைகளோடு பேசுகிறார் **வெளி 2:7**
14. பரிசுத்த ஆவியானவர் விடுதலையளிக்கிறார் **2கொரி 3:16,17**
15. பரிசுத்த ஆவியானவர் உள்ளான மனுஷனை வல்லமையாய்ப் பலப்படுத்துகிறார். **எபே 3:16**

## வேதாகமத்தில் நாற்பது

1. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் மழைபெய்தது **ஆதி 7:4,12,17**
2. நாற்பது நாள் சென்ற பின் நோவாதான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்தான் **ஆதி. 8,6**
3. ஈசாக்கு ரெபெக்காளை விவாகம் பண்ணுகிறபோது நாற்பதுவயதாயிருந்தான். **ஆதி 25:20**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஏசா நாற்பது வயதான போது யூதீத்தையும் பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான் ஆதி 26:34

5. யாக்கோபு ஏசாவுக்கு நாற்பது கடாரிகளை வெகுமதியாகக் கொடுத்தான். ஆதி 32:14,15

6. இஸ்ரவேல் மரித்த போது நாற்பது நாள் வரை வைத்தியர்கள் சுகந்தவர்க்க மிட்டார்கள் ஆதி 50:1-3

7. இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருமளவும் மன்னாவைப் புசித்தார்கள் யாத் 16:35

8. மோசே சீனாய் மலையில் இரவும் பகலும் நாற்பது நாள் அப்பம் புசியாமலும் தண்ணீர் கடியாமலும் இருந்தான் யாத் 24:15-18,34:1,2,28 உபா 9:9,11,18

9. நாற்பது வெள்ளிப்பாதங்கள் யாத் 26:19,21

10. கானான் தேசத்தை7வேவுகாரர் நாற்பது நாள் சுற்றிப்பார்த்தார்கள் எண் 13:25,14:34

11. கர்த்தர் இஸ்ரவேலரை நாற்பது வருஷம் வனாந்தரத்தில் அலையப்பண்ணினார் எண் 32:13, உபா2:7 8:2,4 29,5

12. குற்றவாளிகளுக்கு நாற்பது அடி உபா 25:1-3

13. காலேப் கானான் தேசத்தை வேவு பார்க்கும் போது அவனுக்கு வயது நாற்பது யேசு 14:7

14. அப்தோனுக்கு நாற்பது குமாரர் இருந்தார்கள் நியா. 12:13,14

15. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால் கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக் கொடுத்தார். நியா13:1

16. ஏலி இஸ்ரவேலை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தான். 1சாமு. 14:18

17. கோலியாத் என்னும் பெலிஸ்தன் காலையிலும் மாலையிலும் நாற்பது நாள் இஸ்ரவேலரோடு யுத்தம் செய்ய வந்து வந்து - நிற்பான். 1சாமு. 17:16,11,4

18. சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின் மேல் ராஜா வாகிற போது நாற்பது வயதாயிருந்தான் 2சாமு 2:10

19. தாவீது நாற்பது வருஷம் ராஜ்ய பாரம் பண்ணினான் 2சாமு 5:4:1 இரா2:11

20. சாலொமோன் உண்டாக்கின ஒவ்வொரு கொப்பரையும் நாற்பது குடம் பிடிக்கும் 1இரா 7:38

21. சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம் 1இரா 11:42

22. யோவாஸ் எருசலேமில் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் 2இரா12:1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சாலொமோன் கட்டின தேவாலயமாகிய மாளிகை நாற்பது முழு நீளமாயிருந்தது. 1இரா 6:17,2

24. எலியா நாற்பது நாள் இரவு பகல் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நடந்து போனான். 1இரா 19:8,1

25. எலிசாவுக்கு நாற்பது ஒட்டகச் சுமை காணிக்கை வந்தது **2இரா,8:7-10**

26. இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு அவர்களை கர்த்தர் பராமரித்து வந்தார். நெகே 9:21

27. யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பது நாள் வரைக்கும் சுமக்க வேண்டும் எசே 4:6

28. எகிப்து தேசம் நாற்பது வருஷம் குடியற்றிருக்கும் **எசே** 29:8-11

29. இன்னும் நாற்பது நாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டு போம் என்று யோனா கூறினான். **யோனா** 3:4

30. மோசேக்கு நாற்பது வயதான போது இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று அப் 7:22,23

31. அதன் பின், நாற்பது வருஷம் சென்ற பின்பு சீனாய் மலையின் அடியில் வைத்து கர்த்தர் முட்செடியில் மோசேக்கு தரிசனமானார் அப் 7:30

32. இயேசு இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமிருந்தார் **மத்** 4:1,2 **மற்** 1:1,3 **லூக்** 4:2

33. இயேசு பாடுபட்டபின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார் அப் 1:3

34. சொஸ்தமாக்கப்பட்ட பிறவிச் சப்பாணி நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான் அப் 4:22

35. பவுலை கொலை செய்ய சபதம் பண்ணிக் கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருந்தார்கள் அப் 23:12,13,14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்தரிக்கின்றேன்.**

1தீமோத்தேயு 1:18

வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

எனது வாழ்க்கை பயணத்தின் நாற்பது ஆண்டுகளை ஒரு கணம் திரும்பிப்பார்க்கிறேன் அதிலும் பதினைந்து ஆண்டுகள் இறைப்பணியின் நாட்களைப் பார்த்து நமது ஆண்டவனை துதிக்கின்றேன். இதில் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலம் போன்றது. எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தம் அதனால் எழுந்த காயங்கள், கொலைகள், அழிவுகள் இடப் பெயர்வுகள் சொல்ல முடியாத வாழ்க்கை சுமைகளை சுமந்த ஒரு பயண அனுபவம் எனக் குறிப்பிடலாம். இவ் அனுபவங்கள் உண்மை நிகழ்வுகளாகவும் வாழ்வில் ஏற்பட்ட தடயங்களாகவும் பதிந்துள்ளது.

எனது சொந்த ஊர் தெல்லிப்பளையில் வர்த்தலைவிழான் என்னும் அழகிய ஊரில் பிறந்து எனது வாழ்க்கைப்பயணம் ஆரம்பமாகியது இது அழகுமிக்க கிராமமாகும். கல்வியாளர்களையும் நற்பண்பாளர்களையும் கடின உழைப்பாளிகளையும் கொண்ட ஊராக திகழ்ந்து அழகு மிக்க வீடுகளும் பயன் மிக்க தோட்ட தோப்புக்களும். பண்ணைகளும் மிளிர்ந்து விளங்கிய கிராமம் 1958, 1977களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் வறுமைகளில் எல்லாம் பஞ்சத்தையும் போரின் கொடுமைகளையும் சந்தித்து வளர்ச்சியடைந்தது.

அழகுமிக்க இக்கிராமத்தின் நேர்பாதை தெல்லிப்பளையும் முன்னால் கட்டுவன். எதிராக பலாலி விமானத்தளம் குறுக்கே காங்கேசன் துறை சீமேந்து தொழிற்சாலையும் துறைமுகமும். மாவிட்டபுரம் பிரசித்தி பெற்ற கந்தசாமி கோயிலும் பின்னால் புன்னாலைக் கட்டுவன் ஏழாலை என அழகுமிக்க கிராமங்களைக் கொண்டது.

இவ்வூரில் 1970 - 02 - 10ல் பிறந்து கட்டுவன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியில் அங்கிருந்த திருமதி பகவதி ஆசிரியர் வறுத்தலை விழான் அமெரிக்கன் மிஷன் பாடசாலை தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி ஆகியோரிடம் ஆரம்பக்கல்வியைக் கற்று மகிழ்வுடன் சொந்த வீட்டிலும் ஊரிலும் வாழ்ந்து வந்தோம். 1983ல் பின்னால் நாட்டில் சிறிது சிறிதாக பிரச்சனைகள் தொடங்க ஊரில் வாழ்ந்த மகிழ்ச்சி கலையத் தொடங்கியது. பலர் வெளிநாடுகளிற்கு செல்லவும் ஒரு சில குடும்பங்கள் வேறு ஊர்களில் போய் தங்கவும் தொடங்கினார். இதனால் ஊரில் இருந்த மகிழ்ச்சி குன்றியதும். சுகவாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவு காணத் தொடங்கியது. கல்வியில் மாற்றங்களும் வாழ்வில் வறுமையும் தாண்டவமாடியது. இதனால் நானும் எனது தம்பியும் தெல்லிப்பளையில் தென் இந்தியத் திருச்சபையில் இறைபணி ஆற்றிய அருட்தந்தை Dr.அம்பலவாணர் அவர்களின் மனைவி கிளியக்காவின் தாயாரும் அருட்தந்தை மனோ போதகரின் மனைவியும் எமது இனத்தார்கள் அவர்களின் ஆலோசனைப்படி 1980ம் ஆண்டு மானிப்பாய் அருள் மனை இல்லத்தில் அருட்தந்தை Dr. அம்பலவாணர் அவர்களால் சேர்க்கப்பட்டு எமது வாழ்க்கைப்பயணம், கல்விப்பயணம் புதிய சிந்தையோடு தொடங்கியது.

இது ஒரு மகிழ்ச்சியின் காலம் அருள் மனை இல்லத்தில் வந்த போது அழகான தாடியுடன் அருட்தந்தை வவிமேதரும் அவரின் அழகான மனைவியும் அவர்களின் பெற்றோரும் இன்னும் ஒருவர் கறுத்த உருவமுடைய உருளையான ஒருவர் பஞ்சரட்ணம் அவர்களும் (இவரே பின்னர் அருட்தந்தை பஞ்சரட்ணம் போதகர் அபிஷேகம் பெற்றார். இன்னும் தன் குருத்துவப் பணியை செய்கின்றார்) பொறுப்பாக இருந்தார்கள் இவர்கள் என்னை இறை பக்தியிலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அதிகமாக வழிநடத்தினார்கள். இவர்களைத் தொடர்ந்து அருட்தந்தை T. தேவநேசன். திரு. லாசர் இவர்களுடன் இல்ல முகாமையாளராக அருட்திரு மதன்ராஜா பணி செய்து மாற்றம் ஆகி செல்ல திரு. சொலமன், திரு. அருட்குமார். ஆகியோர். இல்லத்தைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள். இவர்களும் அருட்திரு தம்பு போதகர் சிறிது காலம் முகாமையாளராக இருந்தார் அதனைத் தொடர்ந்து திரு S. இரட்ணவேல் இல்ல முகாமையாளராக இருந்தார். திரு S. இரட்ணவேல் திரு. அருட்குமார். குறைந்த சம்பளத்தில் நேர்மையுடன் தாங்கள் பணியைச் செய்தது அல்லாமல் தேவைகளை கவனித்து பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை வழங்குவதில் கரிசனையாய் பணியாற்றியவர்கள்.

இக்காலப்பகுதியில் யாழ் மானிப்பாய் மெமோறியலில் ஆங்கிலப்பாடசாலையில் கல்வியைக் கற்கத் தெடங்கினோம். அழகும் கம்பீரமான வெள்ளை உடை தரித்த திரு. சுந்தரதாஸ் அவர்கள் அதிபராக இருந்தார். உடல் பயிற்சிக்கும் ஒழுக்கத்திற்கும் பொறுப்பாக இருந்த செபமாலை ஆசிரியர் அவர்களைப் பார்க்கும் போது ஒரு ஆமிக்காரன் போல் விறுவிறுப்பாக எதையும் செய்யும் ஆற்றல் உடையவர் வகுப்பாசிரியர் திரு பூலோக ராஜா வயது முதிர்ந்தவராக இருந்தார். அப்பொழுது பாடசாலையில் கப்பினால் அள்ளி பிஸ்கேற் தருவார்கள். எமது ஆசிரியர் தான் கோழிக்குப் போடக் கொண்டு போகிறேன் என்று எமக்கு சொல்லி ஒரு சீலை வாக்கில் போடுவார். கல்வி கற்பித்த எமது ஆசான்கள் பெந்தகோஸ்தே சபையைச் சேர்ந்த மகாதேவா ஆசிரியர் ஆங்கிலம் கற்பித்த திருமதி குலேந்திரன் தமிழ் கற்பித்த செல்வி செல்வரட்ணம் விஞ்ஞானம் கற்பித்த குலசிங்கம் ஆகியோரையும் மெமோறியல் தாயின் தவப்புதல்னாக, மாணவனாக, ஆசிரியராக ஐந்தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கான அதிபராக உபஅதிபராக ஒழுங்கு அமைவு அதிபராக நல் நண்பராக பணி ஆற்றியவர் திருவாளர் அ.மு.அருணாசலம் அவர்களை என்றுமே மறக்க முடியாத மெமோறியல் அன்னையின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் அரும்பாடுபட்டவர். எமக்கு ஆன்மீக அறிவு புகட்டி வேதத்தை கற்பித்த அருட்தந்தை Dr. அம்பலவாணர், ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியர் மேதா ரீச்சர் ஆணல் போதகரம்மா, அருட்திரு A. A. போல் நவாலி ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்கள் யாவரையும் நினைந்து கர்த்தரைத் துதிக்கின்றேன். அருட் திரு. வொவி மேதர் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு வேத வசனம் மனப்பாடமாக்கி சொல்லாவிட்டால் ஞாயிறு மதிய உணவு தரமாட்டார். அவ்வாறு பாடமாக்கிய வசனம் இன்றும் ஞாபகத்தில் உள்ளது.

1983ம் ஆண்டு தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட மிகவும் கொடுமை நிறைந்த ஆண்டாக பதியப்பட்டது. நாட்டில் கலவரம் எங்கும் மரண பயம் நாங்கள் இப்பிரச்சனைக்கு மானிப்பாய் தென்இந்தியத் திருச்சபையில் ஒவ்வொரு போயாதினத்திலும் விழித்திருந்து செபித்தோம். எம்மை செபத்திலும் திருமறை அறிவிலும் வளர்த்தார். அருட்தந்தை *D.r.* அம்பலவாணர் இக்காலப்பகுதியில் மானிப்பாயில் பல இடங்களிலும் மரண ஓலம், பலர் மாண்டார்கள் நான் சிறுவர் இல்லத்தில் இப்பிரச்சனைக்காக மன்றாடினோம் 1983, 1984, 1985 எமது நாட்டில் பல விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சியும் அடைந்து இளைய தலைமுறையினரும் முதிர்ந்த, சிறுவர்களும் செய்வதறியாது இவ்விடுதலை இயக்கங்களில் சேர்ந்து கொண்டார்கள். எமது இல்லத்திலும் பல சிறார்கள் களவாகவும் படிப்பில் கவனம் செலுத்தாமல் இன்னும் பிறரின் தூண்டுதலாலும் சேர்ந்தார்கள். காலப் போக்கில் இவ்விதம் தோற்றம் பெற்ற குழுக்கள் தங்களுக்குள் முட்டி மோதி தங்களையும் எமது மக்களின் கல்வி மான்கள், புத்திஜீவிகள் அரச, உயர் மட்ட அதிகாரிகள் என பலர் மடிவுக்கு காரணமானார்கள் இக்காலப்பகுதியில் மக்கள் யாவரும் யாரிடமும் முறையிடவோ தங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணவோ முடியவில்லை.

1986, 1990 காலப்பகுதி இந்திய இராணுவம் எமது மண்ணில் நிலை கொண்டகாலம் இக்காலப்பகுதியில் இந்திய இராணுவத்திற்கும், போராளிகளுக்கும் இடையில் போராட்டம் நடைபெற்றது பல மக்கள் இறந்தும் காணாமல் போயிருந்தார்கள் இக்காலப்பகுதியில் சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தின் அதிபர் பரராஜசிங்கம் அவர்கள் என்னுடைய மாமானார் நான்கு காயக்காரருடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு காரில் எடுத்து சென்றார். செல்லும் வழியில் காருடன் 6 பேரையும் மோட்டார் செல்லால் அடித்து காருடன் கொன்றார்கள். இது எமது வீட்டின் பெரும் கண்ணீர் நிறைந்த அனுபவமாக இருந்தது. மரண வீட்டுக்கே போக முடியாத சூழ்நிலை இக்காலப்பகுதியில் நான் அருள்மனை இல்லத்தில் இருந்த நூறு சிறுவர்களுமாக மானிப்பாயில் இருக்க முடியா சூழ்நிலையால் மானிப்பாய் பிப்பிலி சுடலை வெளியில் கால் நடையாக வட்டுக் கோட்டை சிறுவர் இல்லத்திற்கு சென்றோம். அங்கு ஒருவருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய பின் மீண்டும் மானிப்பாய்க்கு வந்து அருள் மனையில் தங்கி படித்தோம் இக்காலப் பகுதியில் பரீட்சைகள் நடத்தமுடியாமல் குறித்த ஆண்டில் நடத்தப்படாமல் பிற்போடப்பட்டது. பல மாணவர் மனவிரக்தி அடைந்து பல தவறான வழிக்குச் சென்றார்கள் நான் இல்லத்திலிருந்து படித்து மகிழ்வுடன் 1990ல் வெளியேறினோம்.

மருதனார் மடம் இறையியல் கல்லூரியில் குருத்துவப் படிப்பினை மேற்கொள்ள சென்றேன். மறைந்த பேராயர் கலாநிதி D.J. அம்பலவாணர் அப்போது பேராயராக இருந்தார். அவர் வன்னிப்பகுதியில் பணி செய்ய குருமார் இல்லாமல் இருந்தது. அத்துடன் சாலேம் நகர் சிறுவர் இல்லத்தில் இல்லப் பாதுகாவலனாக என்னை அப்போது அங்கு அருட் திரு J. சூரியகுமார் போதகர் பணி ஆற்றிக் கொண்டு இருந்தார். நாட்டின் போக்குவரத்து சுமுகமாக இருந்தது நான் ஆனையிறவுப் பாதையில் சென்றோம். ஆயினும் 1990 மார்ச் மாதத்துடன் இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறிய போது இதன் விளைவாக மக்கள் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்தார்கள். மணலாறு திருகோணமலையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து கால்நடையாக கிளிநொச்சி, மன்னார் விடத்தல் தீவு ஊடாக இந்தியா செல்ல கால் நடையாக முறிப்பு றோட்டில் இலட்சக் கணக்கான மக்கள் வந்தார்கள். இவர்களுக்கு அருட்திரு S. ஜெபநேசன் போதகரின் தலைமையால் காலை கஞ்சியும் மதிய உணவும் வீதியால் போகிறவர்களுக்கு கொடுத்து தேற்றினோம்.

அப்பொழுது கிளிநொச்சி எங்கும் பெரும் வறுமை நிலவியது அப்பொழுது ஆதீனத்திற்கூடாக அருட்திரு. ஜெபநேசன் அருட்திரு P.J. சூரியகுமார் ஆகியோர் கிராமம் கிராமமாக உணவுப் பொருட்களைக் கொடுத்தார்கள். இங்கு பல திருச்சபைகள் இடம் பெயர்ந்தன. மாங்குளம் திருச்சபையும் திருச்சபை கட்டிடங்களும் முழுமையாக அழிக்கப்பட்டது. கருணா நிலையப் பிள்ளைகள், மனநோயாளிகள், முதியோர் இடம் பெயர்ந்து முறிப்பில் எமது விடுதியில் தங்கினார்கள். அப்பொழுது நான் சிறுவர் இல்லத்தில் இருந்து இறைப்பணியையும் பிள்ளைகளைப் பராமரிக்கும் பணியையும் செய்தேன் இதன் விளைவாக இன்று இவ் இல்லத்தில் இருந்து மூன்று பேர் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளாகவும் ஒருவர் குருத்துவப் பணியிலும் உள்ளனர். (நைல்ஸ், முருகதாஸ், பிரகலாதன், துரைரட்ணம்) இதன் பின்னர் 1991 மேமாதத்துடன் குருத்துவக் கல்லூரிக்குள் பிரவேசித்தேன் குருத்துவப் படிப்பைத் தொடர்ந்தேன். என்னுடன் தயாளன், போல், சுரேஸ் குமரேசன், குணதேவி என எமது பிரிவில் ஐந்து பேர் இருந்தோம். மகிழ்வுடனும் இறை சத்தியங்களை ஆராய்ந்து படிக்கத் தொடங்கினோம். இறையியல் கல்லூரியின் முதல் அதிபராக அருட்திரு வு.ளு பிறேமராகர் போதகர், பேராஜர் Dr. அம்பலவாணர் அபிஷேகம் செய்து பணியைத் தொடங்கினார். ஒருவருடம் மகிழ்ச்சியுடன் அவர் தன் பணியை செய்தார். H.A கிருஸ்ணபிள்ளைக்கு பெரிய விழாவும் அமெரிக்கன் மிஷன் 175 வது ஆண்டு விழாவும் மிசனெறி டானியேல் பூவார் அவர்களுக்கு பெரிய விழா அவரின் காலத்தில் நடைபெற்றது. இறையியல் கல்லூரியின் புகழ் யாழ் எங்கும் பரவத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியல் கல்லூரிக்குச் சென்ற முதல் நாள் அதிபர் T.S. பிறேமராகர் போதகர், அடிகளார் கூறினார். "நீங்கள் நீங்களாகவே இருங்கள் இன்னொருவராக இருக்கவோ அல்லது பேசவோ பிரசங்கம் செய்யவோ வேண்டாம்" என அறிவுரை கூறினார். ஆதாம் இன்னொருவராக இருக்க ஆசைப்பட்டே பாவத்தில் விழுந்தார். என்று கூறினார். பதிவாளராக இருந்த திரு A. ராஜன் கதிர்காமர் கூறினார். "நீங்கள் இரண்டு கண்களால் பார்க்கிறீர்கள் இன்று தொடக்கம் ஆயிரம் கண்கள் உங்களைப் பார்க்கும்" எப்பொழுதும் அவதானமாக குருமார் இருக்க வேண்டும் எனவும் ஒரு வைத்தியர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரிடம் வைத்திய உதவி தேடிச் செல்வார்கள் அத்துடன் அவரோடு உள்ள தொடர்பு முடிவுற்று விடும் ஆனால் குருமார் ஆசிரியர்களை மக்கள் எப்பொழுதும் கவனித்து கொண்டேயிருப்பார்கள் இருபத்திரண்டு வருட ஆசிரியர் அதிபர் பணியின் அனுபவத்தில் இருந்து கூறுகின்றேன். எனக் கூறினார்.

இவ்விதம் இறையியல் கல்லூரியில் நான்கு ஆண்டு பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது 1993 முதல் அதிபராக வண T.S பிறேமராகர் போதகர், பணியை விட்டு வெளிநாடு சென்றார். அதன் பின்னர் அருட் திரு D.S தியாகராஜா இரண்டாவது அதிபராக பதவி ஏற்றார். இறையியல் கல்லூரியில் இருந்து படித்த காலம் மகிழ்ச்சி நிறைந்த காலம் அப்பொருது இருந்த குருத்துவ மாணவர்கள் தேவகுணானந்தன், மைனசீலன், மதியாபரணம், K.S யோசேப்பு, ஜெயராஜ், சுரேந்திரன், தேவதாஸ், குகனேஸ் டானியேல் அன்ரனி சுதாகர் தயாளினி ஆகியோர் ஒன்றாக இருந்து படித்தோம்.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றைய மாவட்டங்களுடன் தொடர்பு அற்று இருந்தது மக்கள் கிளாலியால் பயணம் செய்து வந்தார்கள். நாங்கள் கிளாலியில் பயிற்சிக்காக வன்னி பெருநிலப்பரப்பு சபைகளுக்கு சென்று வந்தோம். இறையியல் கல்லூரியில் குருத்துவக் கல்வியைக் கற்பித்த குருவானவர்களையும் ஆசான்களையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன். அருட்திரு D.r அம்பலவாணர் அருட்திரு C.T றொபேட்ஸ், அருட்திரு G.D தேவானந்தராஜன் திரு A. ராஜன் கதிர்காமர் திருமதி சோமசுந்தரம் திருமதி சுகந்தி திருமதி தயாளினி தியாகராஜா, பேராஜர் கலாநிதி D.J அம்பலவாணர் பேராஜர் கலாநிதி S.J ஜெபநேசன், அருட்தந்தை பிலேந்திரன் செல்வி கிலோரா ஆனந்தம் ஆகியோர் கல்வி கற்பித்தார்கள் குருத்துவ கல்வியை நிறைவு செய்து 1995ம் ஆண்டு மிகவும் சிறப்பான முறையில் பணிக்கு வழியனுப்பும் வழிபாடும் பட்டமளிப்பும் உடுவில் மகளிர் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து 01-05-1995 ல் இருந்து விசுவமடு, முரசுமோட்டை பணிகளுக்கு நியமிக்கப்பட்டேன். யாழ் நகரில் இருந்து கிளாலியால் சைக்கிளில் சென்றேன் கிளாலியில் நீண்ட வரிசையில் நின்று ஒரு சிறிய வள்ளத்தில் ஏறி வன்னி சைக்கிளில் சென்றேன் 14-05-1995 முதல் வழிபாட்டை, முரசுமோட்டை சபைகளில் நடத்தினேன். "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகின்றேன். நசரேயனாகிய இயேசு கிறிஸ்தவின் நாமத்தினாலே நீ எழுந்து நட"

அப்போஸ்தலர் 3:6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அருளுரையை ஆற்றி வழிபாட்டை நடத்தினோம் முரசு மூட்டையில் மிஷன் வைத்தியசாலை D.R ஜீவரட்ணம் குடும்பமாக இருந்து பணி ஆற்றினார் பிள்ளைகள் பகற்பராமரிப்பு நிலையமும் இங்கு நடைபெற்றது. நல்ல சூழ்நிலை நல்லதோர் பணிக்களம் திருச்சபை மக்கள் வறிய நிலையில் இருந்தாலும் இறைபணிக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்து வந்தார்கள், மூன்று மைலுக்கு நடந்து வருபவர்கள் சைக்கிளில் வருபவர்கள் எல்லாம் இருந்தார்கள் பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக பணிகளை செய்தோம். 1995-10-31 யாழ் நகர் மக்கள் திரளாக இடம் பெயர்ந்து வந்த துயர சம்பவங்கள் இடம் பெற்றது அப்பொழுது எமது ஆலயத்திலும் பல குடும்பங்கள் வந்து இருந்தார்கள் எமது பகற்பராமரிப்பு நிலையத்திலும் பல பிள்ளைகள் கல்வி கற்றார்கள் இதன் பின்னால் 1996ம் ஆண்டு கிளிநொச்சி முரசுமூட்டைப் பகுதிகளிலும் இருந்து மக்கள் வந்த பல அன்பர்கள் திருச்சபையில் இணைந்தார்கள் பல இந்து வாலிபர்களும் நம்முடன் சேர்ந்து "கல்வாரி இயேசு கல்லறையில் மலர்ந்த காவியம்" என்னும் இயேசுவின் வாழ்க்கையை சித்தரிக்கும் நாடகங்களை மேடை ஏற்றினோம் இதன் உருவாக்கத்திற்கு பாடப்பட்டவர் ரவீந்திரன் ஆசிரியர் முரசுமூட்டையில் இருந்து வந்த மிஷன் வைத்தியசாலை விசுவமடுவில் ஸ்தாபித்து மருத்துவப்பணியை செய்தோம். வீட்டுத்திட்டத்தை ஏற்படுத்தி பல மக்களை குடியமர்த்தினோம்.

1998ம் ஆண்டு 10ம் மாதம் 10ம் திகதி சுகந்திரபுரத்தில் ஒரு காணியை வாங்கி அதில் ஒரு திருச்சபையையும் D.r அம்பலவாணர் ஞாபகார்த்தமாக ஒரு சிறுவர் நிலையத்தையும் ஸ்தாபித்தோம். இது அம்மக்களுக்கு பெரிய ஆசீர்வாதமகாவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. 1997ம் ஆண்டு பேராயர் கலாநிதி D.J. அம்பலவாணனின் மரணம், அருட்திரு I அருள் பாலனின் கொலை என்பன எமது திருச்சபைக்கு மிகுந்த துன்பத்தை கொண்டு வந்தது எனினும் வன்னியில் இத்திட்டங்களை ஒழுங்கமைத்து வழி நடத்திய திரு S. இரட்ணவேல் அவர்களையும் இங்கு குறிப்பிடுவது மிக முக்கியமானது 1997ம் ஆண்டு யூன் 20ம் எனது உதவிக்குரு அபிஷேகம் கொழும்பு திருச்சபையில் நடை பெற்றது. இதற்காக நாங்கள் நால்வர் வன்னியில் பாஸ் எடுத்து கொழும்புக்கு செல்லும் பாதைகள் யாவும் மூடப்பட்டு உயிலங்குளம் பாதை மட்டும் இருந்தது மன்னாரில் ஏழுநாள் தங்கி வவுனியா சென்று அங்கு திரும்பவும் மூன்று நாள் தங்கி கொழும்புக்கு ஒரு மாத பாஸ் எடுத்து கொழும்புக்கு செல்லும் பாதைகள் யாவும் மூடப்பட்டு உயிரங்குளம் பாதை மட்டும் இருந்தது. அதனால் உயிரங்குளத்தில் வயல் வெளியில் ½ மைல் தூரம் நடந்து மன்னாரில் ஏழு நாள் தங்கி வவுனியா சென்று அங்கு திரும்பவும் மூன்று நாள் தங்கி கொழும்புக்கு ஒரு மாத பாஸ் எடுத்து சென்றோம். அங்கு எமது உதவிக்குரு வழிபாடு பேராயர் கலாநிதி *S.*. செபநேசனும் குருக்களும் நடத்தினார்கள் பிலிமத்தராப இறையியல் கல்லூரி முதல்வரும் தற்போது குருநகர் ஆயருமான குமாரலிங்கசிங்க அருளுரை ஆற்றினார். அன்று பொசன் எனவே தென் பகுதி எங்கும் ஒரே கொண்டாட்டமாக காட்சி அளித்தது. திரும்பவும் 1999ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை 30ம் திகதி வரை விசுவமடுவில் பணி செய்தோம். இங்கு நல்ல அதிபர்கள், ஆசிரியர்கள் சமூக தொண்டர்கள், இசைக்கலைஞர்கள், எனப் பலதரப்பட்ட மக்களை சந்தித்து பழகினோம். பல கோணங்களிலும் எனது பணி அமையப் பெற்றது. நவஜீவனம் கானான் குடும்பத்தினருடன் மிகவும் நெருங்கிப் பழகினோம். திருமதி. தம்பிராசா போதகரம்மா எமது பணிகளுக்கு மிகவும் ஊக்கமாக செபித்து வந்தார். திருமறைப்படிப்புக்கள், வழிபாடுகள் மிகவும் பக்தியுடன் மக்கள் பங்கு கொண்டு வந்தார். அன்புடன் குருமாரை தாங்கும் அங்கிலிக்கன் திருச்சபை உறுப்பினர் ஆமோஸ் குடும்பத்தினரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

திரு. திருமதி மனுவேல் ஜானகியின் மகன் திரு. திருமதி சேகர் அண்ணல் திருமதி அடைக்கலத்தின் மகள் திரு. ஒகஸ்ரின் மனைவியின் மரணங்கள் திருச்சபை பணியில் பெரும் கவலை அடையச் செய்தது. எனினும் இயேசு லாசர் மரித்த போது கண்ணீர் விட்டு அழுதார். துன்பத்தில் பங்கு கொண்ட ஆண்டவர் எம்மையும் இக்குடும்பங்களையும் தங்கினால் 25.04.1989ம் ஆண்டு விஸ்மடு பணித்தளத்தில் கடைசி ஓய்வு நாள் வழிபாட்டை நடத்தினேன். II கொரிந்தியார் 9:15 "தேவன் அருளிய சொல்ல முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் எனும் கருப்பொருளில் நன்றியுடனும் துதியுடம் வழிபாட்டை நடத்தி அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு பணித்தளத்தை விட்டு கோணாவில் பணித்தளத்துக்கு சென்றேன். கோணாவில் பணித்தளத்தில் 1999-05-02ம் திகதி முதல் வழிபாட்டை நடத்தி பிலிப்பியர் 3:13,14 "பின்னாலைகளை மறந்து முன்னாலைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்." என்னும் கருப்பொருளில் அருளுரை ஆற்றி திருச்சபையில் இருந்த பிளவுகள் குறைகளை நீக்கி ஒரு ஐக்கியம் ஒரு குடும்பம் போல் கோணாவில் திருச்சபையின் பனித்தளம் அமைந்தது. இரண்டாயிரம் ஆண்டு பிறந்த நள்ளிரவு இரண்டாயிரம் மெழுகுவர்த்திகள் ஏற்றி நள்ளிரவு வழிபாட்டை நடத்தி புதிய ஆண்டை ஆரம்பித்தோம். கிளிநொச்சியிலிருந்து போர் நடவடிக்கைகள் யாழ் நகர் நோக்கி நகர்ந்து சென்றதால் தென்மராட்சியிலிருந்து பலர் இடம் பெயர்ந்து கோணாவில் பாடசாலையில் தங்கினார்கள் அவர்களுக்கு ஆதீனத்தால் வழங்கப்பட்ட முறிகண்டி பாரதி புரங்களில் வழிபாடுகளை ஆரம்பித்தேன் இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரத் தொடங்கினார்கள். பேராயர் செபனேசனுக்கு அறுபதாவது பிறந்தநாளை ஒட்டி நன்றி வழிபாடும் கௌரவிப்பு நிகழ்வையும் நடத்தினோம். *06/05/2000* ம் ஆண்டு கொழும்பு திருச்சபையில் முழுக்குரு அபிஷேக ஆராதனை நடைபெற்றது பேராயர் கலாநிதி *S.* செபநேசன் நடத்தினார். மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் எபநேசர் யோசேப்பு அருளுரை ஆற்றினார். என்னுடன் பத்ம தயாளன், போல் சுரேஸ் ஆகியோருக்கு குருப்பட்டம் அளிக்கப்பட்டது. கோணாவில் திருச்சபையில் வரவேற்பும் அளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணாவில் பணித்தளத்துக்கு ஒரு தென்னங்காணியை வாங்கினோம். புதிய குருமனை கட்டப்பட்டது. இங்கு ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் இல்ல செபங்கள் திருமுறைப்படிப்புக்கள் விடுமுறை வேதாகம படிப்புக்கள் போட்டிகள் என்பன நடத்தப்பட்டது. திருச்சபை மக்கள் மிகுந்த கரிசனையுடனும் பக்தியுடனும் வழிபாடுகளில் கலந்து கொள்வார்கள் மிகுந்த அன்புள்ள மக்களாக இருந்தார்கள். அவர்களை எப்பொழுதும் பாராட்டுகின்றேன். எமது வாழ்வில் மறக்க முடியாத திருச்சபை பணித்தளங்களாக விசுவமடுவும் சுதந்திரபுரம் கோணாவில் பணித்தளங்கள் அமைந்த இப்பொழுது வெறுமையாக இருக்கும் இத்தளங்கள் மறுமலர்ச்சி கண்டு துன்பங்களை கண்ட வருடங்களுக்கு மாறாக செழிப்பும் மகிழ்ச்சியும் உள்ள காலத்தை இச் சபை மக்களுக்கும் வன்னிமக்களுக்கும் கடவுள் கொடுப்பார்.

கோணாவில் சபையிலிருந்து அக்கராயன் ஆனைவிழுந்தான் சபைகளையும் சிறிது காலம் வழிநடத்தினோம். மூன்று திருமணங்களையும் இவ்வாலயத்தில் நடத்தினோம். பசுமையும் செழுமையும் மிக்க தென்னந் தோப்புக்கள், நீர் வாய்க்கால் வழியாக ஓடும் குளிர்மை நிறைந்த தோமையாரின் பெயர் பொறிக்கப்பட்ட இத்திருச்சபையில் பதின்ஐந்தாவது ஆண்டு விழாவை மகிழ்வுடன் கொண்டாடி சிறிய ஆண்டு மலரையும் வெளியிட்டது. பெருமை நிறைந்த ஒன்றாக இருந்தது. பன்னிரண்டாவது குருவாக நான்கு வருடம் அங்கு தங்கி பணி செய்த காலம் மகிமை நிறைந்ததாக இருந்தது. இறைவன் அதிகமாக எம்மையும் மக்களையும் ஆசீர்வதித்தார். நான் கோணாவில் பணி தளத்துக்கு வருமுன் 1997ம் ஆண்டு பணியாற்றிய I. அருள்பாலன் போதகரும் தந்தையும் மகனுமாக முறிப்பு சபையை பார்க்கச் சென்ற போது அங்கு படுகொலை செய்யபப்பட்டார்கள். இதை வைத்துக் கொண்டு எனது போல் சுரேஸ் போதகர் எனக்கு கோணாவில் என்று மாற்றம் வந்தபோது இவனும் அங்கே போய் சாகப் போகிறான் என்று கூறியபோது அருகில் இருந்த குருமார்கள் சிரித்தார்கள். ஆனால் கோணாவிலில் கடவுள் வல்லமையானவகளை எமக்கு செய்தார். 2001ம் ஆண்டு மாசி மாதம் நானும் மனைவியும் எங்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற பிரபு, பிரபா ஆகியோர் பள்ள மடுவில் இருந்து மடுவுக்கு செல்லும் வழியில் எமக்கு முன்னால் வந்த பிக்கப்பிற்கு கிளைமோர் குண்டு வைக்கப்பட்டது. மயிர் இழையில் எல்லோரையும் நமது ஆண்டவர் காப்பாற்றினார்.

நாங்கள் இந்தியா 1 மாதம் அங்கு தங்கினோம். பல கூட்டங்கள் பல திருச்சபைகளை தரிசித்தோம். மண்டபமுகாம், கன்னியாகுமாரி, மாவட்டத்திலுள்ள இலங்கை அகதி முகாம்களையும் சந்தித்து மக்களுடன் பேசினோம். எங்களுடன் அருட்திரு சுரேந்திரன் போதகர் குடும்பத்தினரும் வந்தார்கள் மிக்க மகிழ்ச்சியாக ஒரு மாத காலம் இந்தியாவில் தங்கினோம். கோணாவிலில் நான்கு ஆண்டுகள் பணியை முடித்து பணிக்களத்தை விட்டு வெளியேறும் கடைசி ஞாயிறு மக்கள் பிரிவு உபசார விழாவை வைத்து மோதிரம் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கி கௌரவித்தார்கள். 27/04/2003 ம் ஆண்டு அதிகாலை நெடுந்தீவு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தளத்துக்கு புறப்பட்டோம். 28/03/2003ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மாலை வந்து நெடுந்தீவை வந்து சேர்ந்தோம். முதல் முதல் நெடுந்தீவுக்கு 1997ம் ஆண்டு மோட்டார். சைக்கிளில் குறிகட்டுவான் வந்து அருட்திரு மில்ரன், அருட்திரு செபஸ்ரியன் அன்ரனி, அருட்திரு ஏள் சொலமன் அருட்திரு. சுதர்சன் ஆகியோருடன் அருட்திரு ஜெபநேசனின் மகளின் நினைவு ஆராதனையில் பங்கு கொண்டாம். பின்னர் நைல்ஸ் உடன் பார்க்கும்படி வந்தேன். அழகான தீவில் குருமார்கள் மிகுந்த நெருக்கடியான காலத்திலும் பல கஸ்ரங்களின் மத்தியிலும் கிறிஸ்துவின் பணியை செய்த புண்ணிய பூமியில் எமக்கும் பணி செய்ய கிடைத்த சந்தர்ப்பம் என்பதை நினைத்து கர்த்தரை துதிக்கின்றேன். பேராயர் குலேந்திரன் மிகுந்த கரிசனையுடன் அப்போது இங்கு வந்து மக்களை தரிசிப்பார். பேராயர் அம்பலவாணர் பிள்ளைகளின் வேலைகளை மிகுந்த கரிசனையுடன் செய்ய வழிநடத்தினார். இவ்விதம் பல அரிய குருமார் பல ஆத்மீக சிந்தனை நிறைந்த ஆசிரியர்கள் பொது நிலையினர் எனப் பலர் பணியாற்றி வளர்த்த இப்புண்ணிய பூமியில் 2003ம் ஆண்டு குருமார் மாற்றத்தின் போது இங்கு பணி செய்ய பலரைக் கேட்டபோது பலரும் மறுந்த போது கர்த்தர் என்னை தெரிந்து எடுத்தார். "கர்த்தர் என்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி இந்த ஊழியத்துக்கு அனுப்பினார். ஏனெனில் 2005ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் சில ஆண்டுகள் யுத்தம் தென் இந்திய திருச்சபை யாழ் பேராயத்தில் பல துயர சம்பவங்கள் போட்டிகள், பிளவுகள், பிரிவினைகள் எல்லாம் தலை விரித்து ஆடியது இக்காலப்பகுதியில் மிகுந்த பொறுமையுடன் திருச்சபை பணியிலும் பிள்ளைகள் மத்தியிலும் பணி செய்ய கிடைத்த காலம் முக்கியமானது எனக் கருதி என் பணியை செய்தேன்.

30-04-2003ம் ஆண்டு இங்கு பணி செய்து மாற்றம் ஆகிச் செல்லும் அருட்திரு S.I ஆனந்தராஜன் குடும்பத்தினருக்கும் வரவேற்பும் பிரிவுபசாரமும் சபையின் செயலாளர் திரு A அருந்தவசீலன் தலைமையில் நடைபெற்றது அப்போது பேசும் போது அருந்தசீலன் கூறினார் "புதிய குருவானவர் விரும்பி வந்துள்ளார். அவர் படும் பாட்டை அவர் அறிவார். என்று அப்பொழுது பேசிய அருட்தந்தை செபநேசரட்ணம் கூறினார். குருமார் பாடுகள் அனுபவிப்பது தான் பணி யோன் செல்வம் அவர்கள் நல்ல பணியை செய்வார் என வாழ்த்தினார்.

04-05-2003 முதல் ஞாயிறு திரு வழிபாட்டை நடத்தினேன். நெடுந்தீவில் ஆன்மீகப்பணி ஆரம்பமாகியது முதலில் பழுதடைந்த கட்டிடங்களைப் புதுப்பித்தோம். இழந்து போன விசுவாசத்தை காத்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. கிறிஸ்துவுக்குள் யாவரும் சமனானவர்கள் என்ற எண்ணத்தை தோற்றுவிக்க வேண்டிய பணியாக இருந்தது. கத்தோலிக்க மக்கள் இந்து மக்கள் யாவருடனும் பழகினேன். அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொண்டோம். கணணிப்பயிற்சி வகுப்பை நடத்தினோம். 2004, 2006, 2008 ஆகிய ஆண்டுகளில் பிள்ளைகள் பெற்றோர் யாழ்ப்பாணம் தென்பகுதி, தீவுப்பகுதிகள் எனப்பல இடங்களுக்கும் சுற்றுலா கூட்டி சென்றோம். பல கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கிராம சேவையாளர்கள், குமுதினி ஓட்டுனர் சமுத்திர தேவா படகு ஓட்டுனர் எப்பொழுதும் சோர்வின்றி அழைத்து செல்லும் கந்தையா படகு ஓட்டுனர் மற்றும் கியூமெடிக்கா அம்புலன்ஸ் ஓட்டுனர் மிக கலகலப்பாக நல்ல சேவையை இரவு பகலாகவும் விருந்தினர்கள் பொது அமைப்பு பிரதிநிதிகளை அழைத்துவரும் அம்புலன்ஸ் பணியாளர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். அதன் ஓட்டுனர் எட்வேட்ராசா எல்லோரும் அன்புடன் அழைக்கும் ரஞ்சன் அவர்கள் துணிவும் கருணையுடனும் கலகலப்பாக செய்து வரும் பணி போற்றப்பட வேண்டும் இங்கு நெடுந்தீவு மகிழ்ச்சிகரமான பணித்தளம் ஆயினும் இங்கு முதலில் திருச்சபையில் உள்ளவர்கள் தங்களை அழைத்த கர்த்தரை சார்ந்து வாழ பழக வேண்டும் அப்பொழுதுதான் பிறர் கிறிஸ்துவை அறிந்து கொள்வார்கள். கல்வியாளர்கள் மத்தியில் ஒரு பரந்த மனப்பாங்கு மலர வேண்டும். அரசு மற்றும் பொது அமைப்பின் சொத்துக்களை மக்களின் நன்மைக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் சுய இலாபத்தை விடுத்து பொதுலாபம் கருதிப் பணி செய்தால் இன்றைய காலத்தின் பணியாக உள்ளது.

2009ம் ஆண்டு "பிதாவே இவர்களை மன்னியும்" என்ற இயேசுவின் பிறப்பு பாடு, மரணம், உயிர்ப்பு நாடகத்தை அரங்கேற்றினோம். பல நண்பர்கள் ஒன்று சேர்ந்து நடித்தார்கள் அது பெரும் மகிழ்ச்சியும் இயேசுவின் வாழ்வை பலருக்கு எடுத்துக் காட்டக் கூடியதாக இருந்தது. கிழக்கு, மத்தி, மேற்கு என தீவின் நான்கு திசையிலிருந்து வரும் குழந்தைகள் மத்தியில் பராமரிப்பு நிலையத்தினூடாக பணி செய்தோம். அது மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது எமது பணியில் எம்முடன் கூட இருந்த திரு.கு. ஜனேந்திரன், திருமதி குகதாஸ், திரு த. கிருபாகரன் மற்றும் நிலைய ஆசிரியர்கள் உதவியாளர்கள், மற்றும் தீவின் பல நண்பர்கள் யாவருக்கும் நன்றி நவில்கின்றோம். நெடுந்தீவு பணித்தளத்தின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவையும் கொண்டாடினோம் இதுவும் மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டு ஆண்டு மலரையும் வெளியிட்டோம். நெடுந்தீவு மேற்கு பகற்பராமரிப்பு நிலையத்தின் பிள்ளைகள், பெற்றோர் மிகுந்த அன்புடனும் மகிழ்ச்சியுடனும் பழகுவார்கள். அங்கு எமது பணிகள் நிலையத்தில் வளர்ச்சியடைந்து நெடுந்தீவு மக்களுக்கு ஒன்று பட்ட சேவையினை வழங்க எற்படுத்திய அபிவிருத்தி மையம் வளர்ச்சியடையாமைக்கு ஒற்றுமை அற்ற செயற்பாடும் குழம்புகிறவர்களின் மனப்பாங்கும் காரணமாக அமைந்தது. அதே போல் பழைய மாணவர் சங்கம் ஒரு வெற்றி அடையவில்லை தலைமை ஏற்று நடத்தக்கூடியவர்கள் இல்லாமையையும் குறுகிய மனப்பான்மையும் இவைகளுக்கு காரணம். அதே போல் எமது காலத்தில் பல பணிகள் வளர்ச்சியடைந்தது. ஆனால் ஆன்மீக பயணத்தில் வெற்றி காணவில்லை அதற்கு காரணம் திருச்சபையில் உள்ளவர்கள். ஒழுங்காக வழிபாடுகளில் கலந்து கொள்வதில்லை வீட்டு செபக்கூட்டங்கள் திருமுறைப் படிப்புக்கள், நோன்புகால வழிபாடுகளில் பங்கு கொள்வதில்லை தங்களின் ஆன்மீக பணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சிக்கு காரணம். அத்துடன் தாங்கள் மட்டும் இருந்தால் போதும் என்ற சிந்தனை எல்லோரும் கிறிஸ்துவுக்குள் வரவேண்டும் என்ற மனப்பாங்கு இல்லாமையும் ஒரு காரணம் 2010ம் ஆண்டு எமது நிலைய ஆசிரியர்சிந்துஜாவின் மகள்செந்தாஜினியின்மரணம் பாரம் நிறைந்ததாக இருந்தது. அதிகமாக என் உள்ளத்தில் கவலையும் வேதனையும் கொண்டு வந்த செயற்பாடுகள் 2005 - 2010 இன்று வரை எமது ஆதீனத்தில் நடைபெறும் செயற்பாடுகள் பிளவுகள், பிரிவுகள் இதற்குக் காரணம் 2005ம் ஆண்டு விடுதலைப் புலிகளை அதீனத்தை சபா சங்கக் கூட்டத்திற்கு கூட்டியந்தமை பேராயர் தெரிவினை நீதியான முறையில் நடத்தாமை பேராயர், செபநேசன் பிரதம பேராயர் P. சுகந்தன் செனற் மகா சபைச் செயலாளர் போலையின் சத்திய மூர்த்தி ஆகியோர் இந்த வரலாற்று தவறை விட்டுவிட்டார்கள்.

இதனால் எமது அதீனம் பிளவுபடவும் நீதிமன்றத்திலும் அரச கட்சிகளிலும் கையேந்தும் நிலமை ஏற்பட்டது வீணாக பணங்கள் ஆத்மீக காரியத்துக்கு இன்றி வீணான தீமையின் செயலுக்கு விரையமானதும் கவலையளிப்பதாக இருக்கின்றது. கிறிஸ்து தாமே திருச்சபைக்கு தீர்ப்பு அளித்து நடத்துவார். என விசுவசிக்கின்றேன். அடுத்து வன்னி பெருநிலப்பரப்பில் ஏற்பட்ட போர் (2006-2007-2008-2009)ம் ஆண்டு ஏப்ரல் 18ம் திகதிவரை நடைபெற்ற மனித வரலாற்றிலே எற்படாத சொத்து அழிவுகள் கொலைகள் இடம் பெயர்வுகள் வீடுகள், ஆலயங்கள், நகரங்கள் அழிக்கப்பட்டு முள்ளி வாய்க்கால்களில் இறந்த எண்ணற்ற மக்கள் புதைக்க முடியாமல் போன சோக வரலாறு பல மதகுருமார்கள் மரித்து போனது எனது அன்பிற்குரிய கிளிப்பாதர் அருட்தந்தை கருணாரட்ணம் அருள்ஜீவன் இன்னும் பல குருமார்கள் மரித்தார்கள் 1948ம் ஆண்டு கீரோசீமா, நாகசாயி போன்ற ஐப்பானின் கிராமங்களில் அணுகுண்டு போடப்பட்டு பலலட்சம் மக்கள் இறந்தும் அதன் சுவடுகள் இன்றும் மறையாமலும் இருந்தாலும் இன்று ஐப்பான் முன்னணியில் வளர்ந்து காட்சியளிப்பது போல் நமது பிரதேசமும் மீட்பும் விடுதலையும் சுவிட்சத்தையும் வளர்ச்சியையும் அடையும் அது மட்டுமன்றி துன்பத்தை கண்ட வருடங்களுக்கு மாறாக மகிழ்ச்சிக்காலத்தை கர்த்தர் கட்டளையிடுவார் என விசுவசிக்கின்றேன்.

இழப்புக்கள் துன்பங்களை நோக்காமல் பாடுகள் வேதனைகளை பொருட்டாக நினையாமல் இன்றைய திருச்சபையும் எமது மக்களும் புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டியவர்களாயுள்ளோம். வேதாகமத்தில் தாவீது மன்னன் பாடுகின்றார்.

நீதியை சரிக்கட்டுகின்ற தேவனாகிய கர்த்தாவே நீதியை சரிக்கட்டுகிற தேவனே பிரகாசியும்

சங்கீதம் - 94:1

என்ற வாக்கின் படி நீதியும் அருளுகின்ற கடவுள் திருச்சபைக்கும், சமூகத்துக்கும் இவ்வமைதியை கட்டளை இடுவார். எனவே எலியாவைப் பார்த்து கர்த்தர்சொன்னார் நீ செல்ல வேண்டிய பயணம் வெகு தூரம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த நீண்ட நெடிய பயணத்தில் போர் ஓய்ந்து அமைதி ஏற்பட்டுள்ளது. ஆயினும் துன்பப்படும் மக்களின் மனங்கள்

ஆற்றப்படவில்லை அவர்கள் உள்ளங்களின் காயங்கள் மாறப்படவில்லை அதிலும் மேலாக இன்றைய சமூகத்தின் கோர விபத்துக்களும் தற்கொலை சம்பவங்களும் மதுபானமும், கலாச்சார சீரழிவுகளும் மனித உள்ளங்களை மிக வேகமாக பாதித்துக் கொண்டுள்ளது. மனிதன் இன்று போட்டி மிக்க உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

எரேமியா 6:16

மிக அழகாகச் சொல்கிறார்.

வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.


நம் முன்னோர் காட்டிய நல்விசுவாசம், அன்புள்ளம் எதனையும் சகிக்கும் தன்மை தீமை செய்யாத மனப்பாங்கு காலையும் மாலையும் இறைவனைத் தேடி வழிபடும் பக்தியுணர்வும் இன்றைய திருச்சபைக்கும் உடைந்து நொந்து போன எமது சமூகத்துக்கும் தேவையாக உள்ளது. பூர்வ பாதைகளில் நின்று விசாரித்து எமது பயணத்தை தொடர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண நிகழ்வின் போது.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நியாயம் தண்ணீரைப் போலவும்
நீதி வற்றாத நதியைப் போலவும்
புரண்டு வரக் கடவது"

ஆமோஸ் 5:24

1988ம் ஆண்டு மானிப்பாய் ஆலயத்தில் ஆதீனத்தல் நடத்தப்பட்ட பிள்ளைகள் விழாவில் ஆமோசின் இவ் வசனத்தை வைத்து முதலாவது அருளுரையை ஆற்றினேன். அன்று பேராயர் அம்பலவாணரும் பல குருமார் திருச்சபையின் பல பெரியார்கள் என்னைப் பாராட்டினார்கள். சாலமோன் மன்னன் எவ்விதம் இரு தாய்மார் ஒரு பிள்ளைக்கு சண்டையிட்டபோது நீதி நியாயம் வழங்கினானோ அந்த நீதி நியாயம் இன்று திருச்சபையிலும், சமூகத்திலும் காணப்பட வேண்டும் இல்லாவிட்டால் சமூகம் சீர் கெட்டுப் போகும். இவ்வருளுரை இன்றும் என் மனதில் இருக்கின்றது. இருபது ஆண்டுகளுக்குப்பின் எட்டாம் நூற்றாண்டுத் தீர்க்கதரிசி ஆமொசைப் பார்க்கின்றேன். இன்றைய திருச்சபக்கும், சமூகத்திற்கும் இப்படி ஒரு தீர்க்க தரிசியோ ஒரு குருக்களோ. இருந்தால் எப்படியிருக்கும்.

"ஒலி முக வாசலிலே கடிந்து கொள்கிறவனை அவர்கள் பகைத்து யதார்த்தமாய் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்.

நீங்கள் தரித்திரத்தினை மதித்து அவன் கையிலே தானியத்தைச் சுமை சுமையாய் வழங்குகிறபடியினால் நீங்கள் பொழிந்த கற்களால் வீடுகளைக் கட்டினீர்கள் ஆயினும் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை இன்பமான திராட்சைத் தோட்டங்களை நாட்டினீர்கள் ஆயினும் அவைகளின் திராட்சை இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை உங்கள் மீறுதல்கள் மிகுதியென்றும் உங்கள் பாவங்கள் பலத்ததொன்றும் அறிவேன் நதிமானை ஒடுக்கி பாதானம் வாங்கி ஒலி முக வாசலில் ஏழைகளின் நியாயத்தை புரட்டுகிறீர்கள் ஆகையால் புத்திமான் அந்தக காலத்திலே மௌமாயிருக்க வேண்டும். அந்தக் காலம் தீமையான காலம் நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல நன்மையைத் தேடுங்கள். அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் உங்களுடன் இருப்பார். நீங்கள் தீமையை வெறுத்து நன்மையை விரும்பி ஒலிமுகவாசலின் நியாயத்தை நிலைப்படுத்துங்கள் ஒரு வேளை சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர். யோசேப்பிலே மதியாளர்களுக்கு இறங்குவார்.

ஆமோஸ் 8:10-15

கிறிஸ்துவுக்குள் அன்பான மக்களே நீதியையும் நியாயத்தையும் இறையன்பையும், நன்மை செய்வதையும் விட்டு தீமைக்கு ஆளாகிற போது கர்த்தரும் நம்மை விட்டுவிடுவார். அழிவின் காலத்தை நோக்கி மிக வேகமாக உலக சக்கரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்று கொண்டு இருக்கிறது ஆன்மீகவாதிகளும், கல்விமான்களும், அரும்பெரும் தொண்டுபரிவோரும், ஆளுகை செய்வோரும், இப்புவி பந்தத்தில் நீதி அற்று பராபட்சத்துடன் செயற்படுவதால் தான் சமூக அமைப்புக்களிலும் ஆன்மீக செயற்பாடுகளிலும் இன்று பிளவும், பிரிவும், குழப்பங்களும் ஏற்பட்டுக் கொண்டே போகிறது. ஆதிகார துஷ்பிரயோகங்களும் பண மோசடிகளும் பெருகிக் கொண்டு செல்கிறது.

அப்போஸ்தலர் பணி 10:34ல் பேதுரு கூறுகின்றார். "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" என்று இறைவன் நீதியும் நியாயமும் உள்ளவர் பட்ச பாதம் இல்லாமல் தீர்ப்பு சொல்லுவார். நீதியும் நியாமும் உள்ள ஒரு சமூகத்தையோ, திருச்சபையையோ

கட்டுவதற்கு பாராபட்சமற்று செயற்படும் தன்மை நல்ல தலைமைத்துவத்துக்கு இருக்க வேண்டும். அதை இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கிறார்.

இறை நீதியையும், நியாயத்தையும் பரிசுத்த வாழ்வையும் விட்டு விலகி தீமை செய்வதற்கும் இன்னும் ஒரு காரணம் என்னவே என்று எமிரேயர் கூறுகின்றார்.

"சிறியோர். தொடங்கிப் பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும்
பொருளாசைக் காரராய் இருக்கிறார்கள்
தீர்க்கதரிசிகள்தொடங்கிஆசாரியர்கள்மட்டும்ஒவ்வொருவரும் பொய்யாயிருந்து"

எமிரேயர் 8:10

பண ஆசை எல்லாத் தீமைக்கும மேலாயிருக்கின்றது. சிலர் அதை இக்கித்து விசுவாசத்தை விட்டு விலகி வேதனைகளாலே தங்களை ஊடுருவக் குத்திக் கொண்டு இருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனுஷனோ இவைகளை விட்டோடி "நீதியையும் தேவபக்தியையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும் அமையும் படி நாடு" என்று தீமோத்தேயு 6:10-11ல் கூறுகிறது. இன்று பண ஆசை பொருள் ஆசை மனித உள்ளங்களை மிகவும் ஆட்கொண்டு விட்டது. ஆன்மீகவாதிகள் கூட கடவுளின் எச்சரிக்கையையும் தாண்டி செயற்படுகிறார்கள்.

"நாங்களும், சூனியக்காரரும் விபச்சாரக்காரரும்
கொலைப் பாதகரும் விக்கிரகாராதனைக் காரருரும்
பொய்யை விடும் அதின்படி செய்கிற யாவரும்
புறம்பே இருப்பார்கள."

வெளிப்படுத்தல் 22:15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான தீமையை செய்கிற எவரும் கடவுளின் அரசுக்குள் போக மடியாது.என்பதை திட்டவட்டமாக எச்சரிக்கை போட்டுச் செல்கிறது எனவே இக்காலத்தில் கிறிஸ்துவின் சித்தத்திற்கு அமைவாக நன்மை செய்து தீமையை விட்டு விலகு நீதி நியாயத்துடன் வாழ்வோமாக.

"மனுஷனே நன்மை இன்னதென்று அவர்
உனக்கு அறிசவித்திருக்கிறார் நியாயஞ்செய்து
இரக்கத்தைச் சிநேகித்து உன் தேவனுக்கு
முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல்
வேறு என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்

மீக்கா 6:8

**சிந்தனைக்கு:-**

"கர்த்தர் நீர் நீதிமானை ஆசீர்வதித்து காருணியம் என்று கேட்கிறதினால் அவனைச் சூழ்ந்து கொள்வீர்"

சங்கீதம் 5:12

"நானே நீதியில் உமமுடைய முகத்தை தரிசிப்பேன் நான் வழிக்கும் போது உமது சாயலால் திருப்தியானேன்

"கிருபையும் சத்தியமும்ஒன்றையொன்றுசந்திக்கும் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும்"

சங்கீதம் 85:10

"நீதி அவருக்கு முன்னதாகச் சென்றுஅவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்"

சங்கீதம் 85:13

"சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும் நீதி வானத்திலிருந்து தாழப் பறிக்கும்

சங்கீதம் 85:12

"பூமியை நியாயந் தீர்க்க வருகிறார். அவர் பரலோகத்தை நீதியோடும் ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயத் தீர்ப்பார்"

சங்கீதம் 96:13

"நீதிமான் பனையைப் போல் செழித்து லிபனேனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான்

சங்கீதம் 92:12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற
கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன்
விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரைக்கண்டேன்
இதோ உன் நாட்களோட
பதினைந்து வருஷம் கூட்டுவேன்"

எசாயா 38:5

கிறிஸ்துவுக்குள்ளே அன்பானவர்களே! குறிஸ்தவ ஜீவியத்தின் வெற்றிக்கு வித்தாக அமைவது செபமும் தியானம் "செபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு" என்று ஒரு பக்தன் கூறினார். எனவே செபம் சொல்வது ஒவ்வொரு தனிமனிதனுடைய கடமையாகும். அது வாழ்வுக்கு அமைதி பெலன் வல்லமையை தருவதாக அமையும் இயேசு கிறிஸ்துவும் தம் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் செபித்தார்.

1) திருமுழுக்கின் பின் செபித்தார் லூக்காஸ் 3:21
2) அதிகாலை இருட்டோடு செபித்தார் மாற்கு 1:32
3) வனாந்தரத்திலே தனித்து செபித்தார் லூக்காஸ் 5:16
4) இரவு முழுவதும் செபம் செய்தார் லூக்காஸ் 6:12
5) மலையின் மேல் ஏறி செபம் செய்தார்

பாடுகளை பகிர்ந்து கொள்ளும் முன் செபித்தார் மறுரூப மலையில் செபித்தார். அற்புதங்கள் அடையாளங்களை செய்யும் முன் செபித்தார். சீடருக்கு செபிக்கக் கற்றுக் கொடுத்தார். ஆத்துமா கலங்கிய வேளைகளில் செபித்தார். சீடர்களை விட்டு பிரியும் போது செபித்தார். ஜெஸ்தமனித் தோட்டத்தில் செபித்தார். சிலுவையில் தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காக செபித்தார். சிலுவையில் ஜீவனைத் திறக்கும் முன் செபித்தார். விண்ணகம் போகுமுன் செபித்தார். நமது ஆண்டவர் செபித்து பிசாசின் கிரிகைகளை வென்றார். சாவை வென்றார். இன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்வின் தோல்விக்கும், பிளவுக்கும், பிரிவுக்கும், காரணம், செபித்து, இறை திட்டத்தை அறிந்து செயற்படாமல் தாங்கள் சுய ஞானம், அறிவு, பணம், அதிகாரத்தினால் யாவையும் செய்யலாம் என நினைப்பது தான் தோல்விகளுக் காரணம்.

திருமறையிலும் பல பக்திமான்கள். தீர்க்கதரிசிகள் அரசர்கள் செபித்து வல்லமையான செயல்களை செய்தார்கள் அக்கினி மயமான தீர்க்க தரிசி எலியா செபம் செய்து பலிப்பீடத்தில் உள்ள கன்றுக் குட்டியையும் எரித்து தண்ணீரையும், நக்கினது தானியேலின் செபம் சிங்கத்தின் வாயை காட்டியது. யோனாவின் செபம் மீனின் வயிற்றில் மூன்று நாள் வாழச் செய்து உயிரோடு கரையில் கக்கியது தாவீது சந்தோஷமானபோதும் கடும் துன்பங்கள் இழப்புக்கள் பாவம் செய்த போதும் செபித்து வெற்றி கண்ட ஒரு அரசனாகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டினார். கடவுள் அன்னாள் மௌனமாக செபித்து அருமையான மகன் சாமுவேலைப் பெற்றார். கடவுளுடைய ஒரு வார்த்தையையும் தவறவிடாமல் கைக் கொண்டு வாழ்ந்தவர் என்று புகழப்பட்டார். இவ்விதம் செபித்தால் பக்தர்கள் வெற்றி கண்டார்கள். மிஷனறிமார்கள் ஆதி அப்போஸ்தலர்கள், சுவிஷேம் அறிவிப்பார்கள் எல்லோரும் வெற்றியுள்ள கிறிஸ்தவப் பயணத்தை நடத்தியதற்கும் காரணம் செபம் செய்தபடியினால் ஆகும்.

ஆனால் அந்த செபம், தியானம், எல்லாம் இன்று தடம் புரண்டு இன்று எதற்கு எடுத்தாலும் திருச்சபைகளில் ஒரு கெமிட்டி கூடி எவ்வளவு பணம் இருக்கிறது மிகுதிப்பணம் எப்படி கண்டு பிடிப்பது. இதனால் லாபம் வருமா என சிந்திக்கும் கலாசாரம் வந்து விட்டபடியினால் தான் அன்று வெற்றியான கிறிஸ்தவ நற்செய்திப்பணி இன்று தோல்வியின் விளிம்பில் இருப்பதற்கு காரணம். செபிக்கும் நிலையில் இருந்து திருச்சபை தலைவர்கள் மக்கள் விலகிக்கொண்டு செல்லும் நிலை தான் காரணம்.

கடவுளும் சில கட்டங்களில் எமது செபங்களை கேட்கமாட்டார்.

"நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும்
என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்.
நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும்
கேளேன் உங்கள் கைகள் இரத்தத்தினால்
நிறைந்திருக்கிறது"

எசாயா 1:15

"நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்ய
வேண்டாம் அவர்களுக்காக மன்றாடவும்
கெஞ்சவும் வேண்டாம் என்னிடத்தில்
அவர்களுக்காகப் பரிந்து பேசவும் வேண்டாம்.
நான் உனக்குச் செவி கொடுப்பதில்லை"

எரேமியா 7:17

எமது ஆதீனத்தில் 2005ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரை மிகவும் நெருக்கடியான காலமாகவும் இருந்தது. வன்னியிலும் போர் அதிகரித்து கொண்டு இருந்த இக்காலப்பகுதியில் நான் இறைவனிடம் மன்றாடிக் கொண்டு இருந்த போது ஒரு நாள் கலை இவ்வசனம் எனக்கு காட்டப்பட்டது. இவர்களுக்காக செபித்து பிரயோசனம் இல்லை இறைவன் தனது திட்டத்தை நிறை வேற்றும் காலம் வரும் என உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிலர் துன்பம் வரும் போது மட்டும் கடவுளை தேடுவார்கள். மற்றபடி மனம் போன போக்கில் வாழ்வார்கள் இவர்களின் செபமும் கேட்கப்பட மாட்டாது என வேதம் சொல்கிறது.

"ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம்
பண்ண வேண்டாம் அவர்களுக்காக மன்றாடவும்
கெஞ்சம் வேண்டாம். அவர்கள் தங்கள்
ஆபத்தினிமித்தம் என்னை நோக்கி கூப்பிடுங்
காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருபேன்"

எரேமியா 11:14

எனவே, செபம் இறைவனுக்கும் எமக்கும் உள்ள நெருக்கமான தொடர்பு, உறவு, உரையாடல். தொடர்ச்சியாக நடைபெறும் பொழுதுதான், கிறிஸ்தவ வாழ்வு பரிபூரணமான வாழ்க்கையில் கிறிஸ்துவின் வீரர்களாக திகழ்வார்கள்

செபமே ஜீவன்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப்
பிரவேசியாமல் வேறுவழியாய் ஏறுகிறவன்
கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறேன்
வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின்
மேய்ப்பராயிருக்கிறான்.

யோவான் 10:1:2

கிறிஸ்துவுக்குள் அன்பான ஊழியக்காரர்களே திருச்சபை அன்பர்களே யோவான் 10ம் அதிகாரத்தில் இயேசு தான் நல்ல குரு மேய்ப்பான் ஆயன் என்று கூறுவதுடன் ஒரு ஆயன் குரு ஊழியக்காரன் எப்படி நல்ல ஆயனாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். முதல் அவர் வாசல் வழியாக வராதவர்கள் கள்ளனும் கொள்ளைக்காரனுமாக இருக்கிறான்.

இன்றைய திருச்சபை அமைப்பிலும் சரி சமூக அமைப்பிலும் சரி நேர்மையான பாதையை தெரிவதிலும் பின் வழியாக பல சலுகைகளை செய்து முன்னுக்கு வருபவர்களைப் பார்க்கிறோம். இப்படி வருபவர்கள் உண்மைக்கு மாறாக உண்மைக்கு மாறாக நீதிக்கு மாறாக பரிசுத்தத்திற்கு மாறாக விசுவாசம் நம்பிக்கைக்கு மாறாக நன்மை செய்வதற்கு மாறாக நீதி அற்ற செயல்கள் உண்மைக்கு பதிலாக பொய்களையும் பரிசுத்தத்திற்கு பதிலாக அசுத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களையும் நன்மைகளுக்கு அப்பால் தீமையான செயல்களிலும் விசுவாசம் நம்பிக்கைக்கு மாறாக குழப்பத்தையும் பிளவுகள் பிரிவுகள் சஞ்சலத்தை ஏற்படுத்தும் ஆயர்கள் குருக்களான ஊழியக்காரர்கள் தலைவர்களாக திகழ்கிறார்கள் இவர்களினால் ஆடுகள், மக்கள் வேதனையையும் துன்பத்தையும் அடைகிறார்கள் என்பதையும் இயேசு இங்கே எச்சரிக்கையாக சொல்லி நல்ல ஆயர்கள் குருக்களை ஊழியக்காரர்களை தலைவர்களை நல்லாயன் நமது ஆண்டவரைப் பின்பற்றி வாழ பணி ஆற்ற அழைப்பு விடுகிறார். 2009 ஆண்டு யூன் மாதம் தொடக்கம் 2010ம் ஆண்டு யூன் மாதம் வரை குருக்கள் ஆண்டை பிரகடனப்படுத்திய போப்பாண்டவர் எத்தனை குருக்கள் என்பது அல்ல எத்தனை நல்ல குருக்கள் உள்ளார்கள் என்பது தான் முக்கியம்

**1. மேய்பர்கள் மந்தைக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும்.**

"கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜிவனைக் கொண்டு சொல்லுகிறேன் மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் ஒறையாகி என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள் மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள்

எசேக்கியேல் 34:8

மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள் என்று எசேக்கியேல் கடும் எச்சரிக்கையை விடுகின்றார். இன்னும் பல குரமார்கள் ஆயர்கள் ஊழியக்காரர்கள் மிகுந்த செல்வந்தர்களையும் வசதி வாய்ப்புக்களுடன் மன்னர்களைப்போல வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் இவர்கள் பேச்சளவில் மக்களுக்கு தொண்டு செய்பவர்களாக வாழ்வதிலேயே அதிக காலம் எடுக்கிறார்கள் இதனாலும் இன்று திருச்சபையில் கமூக அமைப்பிலும் குழப்பம் பிளவுகள் ஏற்பட காரணமாக இருக்கிறது. கர்த்தராகிய ஆண்டவர் சொல்வது என்னவென்றால் இதோ நான் நானே என் ஆடுகளை விசாரித்து அவைகளைத் தேடிப் பார்ப்பேன்"

எசேக்கியேல் 34:11

கர்த்தர் தாமே மந்தைகளை தேடி பார்க்கிறவராக இருக்கிறார்

"அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால்
ஊங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல்
வைத்து விடுங்கள்

1பேதுரு 5:7

கர்த்தர் மந்தையை விசாரித்து நல்ல வழியில் நடத்துகிறது போல் குருக்கள் ஆயர்கள் ஊழியர்களும் இப்பணியை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மேன்மை பாராட்டாமல் இருக்க வேண்டும் ஆயர்கள

"மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இலைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன். என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா 9:24

இன்று சமூகத்திலும் திருச்சபையிலும் பல பதவிகளை பல ஆண்டு பணியின் உக்கிரம் வகிப்பவர்கள் தங்கள் ஞானம் அறிவு பணப்பலம் கௌரவம் அதிகாரம் செல்வாக்குகள் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள் நமது ஆண்டவர் மாட்டு குடிலில் பிறந்து கழுதைமேல் ஏறி பயணித்து சிலுவையில் மரணம் உயிர்ப்பு வரை தாழ்மையுள்ளவராக பயணித்தார்.

"சிலர் இரதங்களைக் குறித்தும் சிலர் குதிரைகளைக்
குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள் நாங்களோ
எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்
குறித்தே மேன்மை பாராட்டுவோம்.

சங்கீதம்:- 20:7

நாம் ஜீவனுள்ள ஆண்டவரைக் குறித்தே மேன்மை பாராட்டவும் அவர் எமக்கு செய்த கிருபைகளைக் குறித்து மேன்மை பாராட்டவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

"இகழ்வோரை அவர் இகழ்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ
கிருபையாயிருக்கிறார்.

நீதி மொழிகள் 3:34 யாக்கோபு 4:6
1பேதுரு 5:5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் பெருமை கொஞ்சக்காலம் பெருமிதமாக இருக்கும் ஆனால் இருந்த இடமும் தெரியாமல் மறைந்துவிடும். தாழ்மையுள்ளவர்களின் சுவடுகள் என்றும் அழியாப் புகழுடன் இருக்கும் காத்தரும் கிருபை அளிக்கின்றார்.

"நீங்களும் உங்களுக்கு கட்டளையிடப்பட்ட
யாவற்றையும் செய்த பின்பு நாங்கள்
அப்பிரஜோயனமான ஊழியக்காரர் செய்ய
வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்
என்று சொல்லுங்கள்

லூக்கா 17:10

எனவே இறைவன் எம் ஒவ்வொருவருக்கும் அளித்த கிருபை பொறுப்புக்களில் உண்மையுள்ளவர்களாக தாழ்மையுள்ளவர்கள் மேன்மை பெருமைப்படாதவர்களாக பாராபட்சம் காட்டாதவர்களாக நீதியுள்ளவர்களாக நல்ல குரவாக ஆயனாக ஊழியக்காரனாக ஆசிரியராக வைத்தியராக தொழில் அதிபர்கள் சாதாரண தொழிலாளராக அரசியல் வாதிகளாக சமூகத் தொண்டு புரிபவர்களாக திகழ்வோமானால் நல்ல ஆயன் இயேசுவைப் போல

"நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன்
ஆடுகளுக்காகத்தான் ஜீவனைக் கொடுக்கிறான்"

யோவான் 10:11

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும்
வருகசின்றானேயன்றி வேறு ஒன்றுக்கும் வரான்
நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும்
அது பரிபூரணப்படவும் வந்தேன்

யோவான் 10:10

நாமும் ஒவ்வொருவரும் பரிபூரணமான பணியை செய்து நல்ல சமூகத்தை கட்டி எழுப்பும் பணியாளர்களாக திகழ்வோமாக கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைப் பதிவுகள்

| | | |
|---|---|---|
| இறை படைப்பு | :- | 1970 |
| ஆரம்பக் கல்வி | :- | தெல்லிப்பளைகட்டுவன் மகாவித்தியாலயம் |
| 1981-1989 | :- | அருள்மனை சிறுவர் இல்லத்தில் யாழ் மானிப்பாய் மோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி |
| 1990-1991 | :- | கிளிநொச்சி முறிப்பு சாலோம் நகர் சிறுவர் இல்லத்தின் காப்பாளரும் நற்செய்தித் தூதுப்பணியும் |
| 1991-1995 | :- | மருதனார் மட இறையியல் கல்லூரியில் குருத்துவப் படிப்பு |
| 1995-1999 | :- | முரசுமோட்டை ஆலயம் விசுவமடு ஆலயங்களில் இறைபணி |
| 1997-06-20 | :- | உதவிக்குரு அபிஷேகம் (கொழும்பு திருச்சபையில் பேராயர் S.ஜெபநேசன் அவர்களால்) |
| 1998-10-10 | :- | சுதந்திர புரத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது |
| 1999-2003 | :- | கிளிநொச்சி, கோணாவில், அக்கரையான்,முறிப்பு, பாதிபுரத்தில் இறைபணி |
| 2000ம் ஆண்டு | :- | திருமணம் |
| 2000-05-14 | :- | குருப்பட்டம் (கொழும்பு திருச்சபையில் பேராயர் Dr.S.ஜெபநேசன் அவர்களால்) |
| 2003ம் ஆண்டு | :- | நெடுந்தீவில் ஏழு ஆண்டு பணி பூர்த்தியில் புதிய ஆலயத்தின் கட்டுப்பணி நிறைவு |


**“என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால். அவரை ஸ்தோத்தரிக்கிறேன்”**

1தீமோத்தேயு 2:12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி திருச்சபைப் பணியின் போது.........







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணாவில் திருச்சபைப் பணியின் போது.........









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*I have chosen and consecrated this, house so that my name may be there for all time and my eyes and my heart may be fixed on it for ever.*

*(2CHRONICCLES 7:16)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JEYA PRINTERS